
கல்கி

KALKI 18.2.2001
ரூ. 5.00



தமிழ் சினிமாவின் 'காதல் ஸ்பெஷலிஸ்ட்' இயக்குனர் கதிரிடம் சில 'குண்டக்கா மண்டக்கா' கேள்விகள்...



காதலைக் காதலாகப் பாருங்கள்!

காதல் படங்களாகவே எடுக்கிறீர்களே, காதல் என்ன அவ்வளவு உசத்தியா?

என்னை இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? பிறப்பின் தத்துவமே காதல் தானே? காதல் இல்லாமல் ஒரு அணு கூட இங்கே அசைய முடியாது.

இன்னொன்று காதலை ஆண்-பெண் உறவோடு மட்டும் சம்பந்தப்படுத்திப் பார்க்காதீர்கள். காதல் என்கிற உணர்வு பொதுவானது. காதலோடு ஒரு பெண்ணைப் பார்க்கிற பொழுது ஒரு கோணம், தாயைப் பார்க்கிறபொழுது இன்னொரு கோணம், நண்பனைப் பார்க்கிற பொழுது வேறொரு கோணம். காதலியை, தாயை, நண்பனை, தோழியை நேசிக்காதலர்கள் இல்லாவிட்டால் இந்த பூமி சுழலுமா?

காதல் ஒரு நதி மாதிரி. மலையிலிருந்து அருவியாகத் தொடங்கி, பிறகு அகண்ட நதியாக ஓடி, வாய்க்காலாகக் குறுகி, அணைக்கட்டில் தேங்கி... அதற்கு எத்தனை உருவங்கள்? அது போல்தான் காதலும்!

மனிதனுக்குள் யுகம் யுகமாய் ஓடிக்கொண்டிருக்கும் இந்த நதிதான் இன்னும் அவனுக்குள் ஈரத்தைப் பாதுகாத்து வைத்திருக்கிறது.

ஏதோ ஒரு பெண்ணை இழுத்துக்கொண்டு ஓடுவது காதலா?

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ✱ மெயில் : kalkiweekly@vsnl.com



அப்படி ஒரு தப்பான அர்த்தத்தைக் கற்பித்து வைத்திருக்கிறோம். காதலைப் பற்றிப் பேசுவதே பாவம் என்றும் அது ஒழுக்கத்தோடு சம்பந்தப்பட்டது என்றும் பல தலைமுறைகளைப் பழி வாங்கியது போதும். இனம், மொழி, நாடு என்று சகல வேறுபாடுகளையும் களையும் ஒரு சர்வதேச ஆயுதம் காதல். அதற்கு எந்தச் சமுதாயத்தில் மரியாதை தரப்படுகிறதோ, அந்தச் சமுதாயம் தான் வாழும்!

'சினிமா' காதலுக்கும் நிஜக்காதலுக்கும் இடைவெளி குறைந்து விட்டதா?

நிச்சயம். சமூகத்தில் இருப்பதைத்தானே சினிமா பிரதிபலிக்கிறது? ஆனால் ஒன்று. சமூகத்தில் இருக்கக் கூடிய விஷயங்களில், அதாவது யதார்த்தத்தில், இரண்டு வகை இருக்கிறது. ஒன்று, ரசிக்கக் கூடியது. இன்னொன்று ரசிக்க முடியாதது. சினிமாவில் ரசிக்கக் கூடிய யதார்த்தத்தை மட்டும் காண்பிக்கிறோம். மலிந்து கிடக்கிற, ரசிக்க முடியாத யதார்த்தத்தை விட்டு விடுகிறோம். அதைப் படம் எடுத்தால், யார் பார்ப்பார்கள்?

டூயட் பாடுவது யதார்த்தமா?

டூயட்டுக்கு என்னுடைய அர்த்தமே வேறு. ஐந்து வருடக் காதல் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் கவிதை நயத்துடன் கூடிய தருணங்கள் (poetic instances) எத்தனை இருக்கும்? அவற்றுள் சிலவற்றை மட்டும் கோர்வையாக்கி வார்த்தைகள் போட்டு இசையமைக்கிறோம். அது தான் டூயட்!

ஆனால் டூயட்டைப் படமாக்கும் பொழுது 'மாங்கு மாங்கு' என்று டான்ஸ் ஆடுவதை தான் சரி என்று சொல்ல மாட்டேன். அப்படிப் பண்ணுகிறபொழுது தான் யதார்த்தம் தொலைந்து போகிறது.

'காதலர் தினம்' போன்றவற்றுக்கு விளம்பரம் தருவது நீங்கள் தானே? இவற்றை அடிப்படையாக்கிக் கொண்டு உருவாகிவிட்ட நுகர்வுக் கலாசாரத்தை வளர்ப்பதும் நீங்கள்தானே!

காதலர் தினத்தைக் கொண்டாடுவது கலாசார குற்றம் என்று நீங்கள் சொன்னால், மிகவும் பின்தங்கிப் போய் விடுவீர்கள்.

செல்ஃபோனையும் ஜீன்ஸ் பேண்ட்டையும் பயன்படுத்துகிற நீங்கள் 'காதலர் தினத்தை ஏன் கொண்டாட வேண்டும்?' என்று கேட்பது புதிராக இருக்கிறது. என்னைக் கேட்டால், தமிழ்ப் புத்தாண்டு தினம் என்று ஒன்று இருப்பதைப் போல் காதலர் தினம் என்று ஒன்றை உருவாக்காதது நமது குற்றம் என்பேன். சரி, நம்மிடம் இல்லாதபோது அந்த நல்ல விஷயத்தை வேறொரு கலாசாரத்திலிருந்து நாம் எடுத்துக் கொண்டால் என்ன தப்பு?

நுகர்வுக் கலாசாரத்தைப்

பற்றிச் சொன்னீர்கள். அது வியாபார சூழ்ச்சி. சமயத்தில் சூழ்ச்சி ஆகிவிடுவதும் உண்டு. ஆனால் அதற்கு எங்களைக் குற்றம் சொல்லாதீர்கள்.

'தகவல் தொடர்பு' என்ற கதவு திறந்த உடன், கலாசாரமே ஒட்டுமொத்தமாக அழிந்து விடும் என்று கூறத் தேவையில்லை. 'மீடியா' என்பது வெறும் கண்ணாடி. அது பிரதிபலிப்பதோடு தன் வேலையை நிறுத்திக் கொள்ளும். அது கலாசாரத்தைச் சிதைத்துவிடும் என்பது தேவையற்ற பயம். எந்த ஒரு கலாசாரமும் நமது வேர்களை ஒரு பொழுதும் வெறுத்து விடுவதில்லை!

'காதலர் தினம்' படத்தில் இண்டர்நெட் காதல். 'காதல் வைரஸ்' படத்தில் என்ன காதல்?

அப்படி எதுவும் இல்லை. திட்டமிட்டுச் செய்வதில் செயற்கைத்தனம் வந்துவிடுகிறது என்று நினைப்பவன் நான்.

கவிஞன், போகிற வழியில் ஒரு பூவைப் பார்க்கிறான். உடனே ஒரு கவிதை தோன்றுகிறது. அந்த பூவை பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்திருப்பான் முன்னொரு சமயம். ஆனால் எந்த கவிதையும் தோன்றி இருக்காது. அது போல்தான் இதுவும்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். 'காதல் வைரஸ்' படத்தில் காதலின் புனிதத்தை, அதற்குள் இருக்கும் 'மாரல்' (Moral)ஐச் சொல்லப் போகிறேன்!

உங்களை மிகவும் பாதித்த காதல் எது?

சாமர்செட் மாம் என்கிற ஒரு தலைசிறந்த ஐரோப்பிய எழுத்தாளர் விவரித்த 'அ கேஷுவல் அஃபேர்' காதல் தான். அந்த நாவல்தான் இன்று வரைக்கும் என்னுடைய இன்ஸ்பிரேஷன்!

எதையும் எதிர்பார்க்காத காதலே சிறந்த காதல் என்று அந்த நாவலில் சொல்லியிருப்பார். அதுதான் உண்மை. 'காதலி உன்னைக் காதலிக்காமல் போனாலும் கூட அவள் எங்கிருந்தாலும் நன்றாக இருக்க வேண்டும். அவள் குழந்தைகள், குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பதுதான் உயர்ந்த காதல். அம்மா எப்படி தன் குழந்தை நலமுடன் இருக்க வேண்டும் என்று விரும்புவாளோ, நண்பன் எப்படி நல்லது நினைப்பானோ அப்படித் தான் காதலனும் காதலியும் இருக்க வேண்டும். காதலர் வழித்துணையாகக் கிடைத்துவிட்டால் அதிர்ஷ்டம். இல்லை என்றால் அழத் தேவையில்லை. காதலைக் காதலாகப் பார்க்க, காதலுக்கு மரியாதை தர கற்றுக் கொள்ள வேண்டும்!

உங்களுடைய சொந்த காதல் அனுபவங்களைச் சொல்லுங்கள்... 'பிள்ளை'க் காதல், 'பள்ளி'க் காதல், 'கல்லூரி'க்காதல், நிகழ்காலக் காதல்...

கரிக்கட்டையை எடுத்துக் கொண்டு வீட்டுச் சுவர் முழுவதும் கிறுக்குகிற அளவுக்கு ஓவியத்தின் மீது தான் என் பிள்ளைக் காதல்!

பள்ளியில் படிக்கும்பொழுது மருத்துவ படிப்பின் மீது பள்ளிக் காதல்! (ஆனால் 'நீ ஓவியனாகத்தான் வருவாய் என்று அப்பா ஓவியக் கல்லூரிக்கு அனுப்பிவிட்டார்!)

'கல்லூரியில் எனக்குக் காதல் வரவில்லை!' என்று எவனாவது சொன்னால், அது பொய்! எனது கல்லூரி நாட்களில் நானும் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவள் எனக்குத் தேவதையாகத் தெரிந்தாள். ஆனால் அவளிடம் காதலைச் சொல்லத் தயக்கம். அந்த தயக்கத்திலேயே வருஷங்கள் உருண்டோடிவிட்டன. அந்த பாதிப்பில் தான் 'இதயம்' படம் எடுத்தேன்.

நிகழ்காலக்காதல் - சினிமாதான்! (சிரிக்கிறார்!)

சந்திப்பு: **ஜெயந்த்**

படங்கள்: **ஜரிஸ்**

25 வாலிப ரகசியங்கள்!

எந்த நோத்திலும் காதலில் சிக்கிவிட லாம் என்று பயமுறுத்துகிற மாதிரி தோற்றம் உடைய டீன்-ஏஜ் வாலிபர்கள் பத்துபேரை மடக்கினோம்.

“உங்களைப் பற்றிச் சில ரகசியங்களைச் சொல்லுங்களேன்...”

“எதுக்கு?”

“உங்களைக் காதலிக்கப்போகும் வாலிபி களுக்குத் தான்!”

“உங்களுக்குச் சொல் லாமலா?” என்று ஏக சுறு சுறுப்பாகிவிட்டார்கள்.



1 ‘டைட்டானிக்’ மாதிரி செண்டிமெண்ட்டல் படங்களை ரசித்துப் பார்ப்போம். (செண்ட்டிமெண்ட் எல்லாம் பெண்கள் சமாசாரம் என்பது அபத்தம்)

2 அப்பா-அம்மா கஷ்டப்பட்டு சம்பாதிக்கிற பணத்தைப் பெண்களுக்கு கிஃப்ட் வாங்கிச் செலவழிக்க மனம் சம்மதிப்பதில்லை.

3 பெண்கள் அழுதால் பயந்துவிடுவோம். காரணம், என்ன பண்ணு வது என்றே எங்களுக்குத் தெரியாது.

4 நாங்கள் இன்னொரு பையனைக் கிண்டல் பண்ணுகிறோம் என்றால் எங்களிடம் இல்லாத ஒன்று அவனிடம் இருக்கிறது என்ற வயிற் றெரிச்சல்தான் என்று புரிந்து கொள்ளுங்கள்.

5 நகைச்சுவை உணர்வோடு இருக்கும் பெண்களின் கம்பெனியைத் தான் அதிகம் ரசிப்போம்.


6 ‘ஷூ’க்களை நாங்கள் ‘பப்ளிக்’இல் கழற்றுவதில்லை. (காரணம், சாக்ஸில் இருக்கும் ஓட்டைகள்)

7 பெண்கள் தங்கள் அழகை வைத்தே நிறைய காரியம் சாதித்துக் கொள்கிறார்கள் என்பதுதான் எங்களின் நிரந்தரப் பொறாமை.

8 ‘அம்மா பிள்ளை’ என்று அழைக்கப்படுவதையே விரும்பு கிறோம்.

9 நிறைய பர்ஃப்யூம் யூஸ் பண்ணி இருக் கிறோம் என் றால் நாங்கள் குளிக்கவில்லை என்று அர்த்தம்.





10 கரப்பான்பூச்சிகள் என்றால் எங்களுக்கும் பயம்தான்!

11 'ச்சோ... ச்வீட்' என்று கொஞ்சும் பெண்களைப் பார்த்தால் செம எரிச்சலாகி விடுவோம்.

12 பெரிய பெரிய ஹை-ஃபண்டா பார்ட்டிகள் என்றால் எங்களுக்கு அலர்ஜி. காரணம், முகத்தை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எங்களுக்குப் புரிவதில்லை.

13 கர்ல் - ஃபிரண்டோடு ஹோட்டலுக்குப் போகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், அவரும் 'பில்'ஐ ஷேர் பண்ண வேண்டும் என்று நினைப்போம்.

14 நாங்களும் அழுவதுண்டு. (பெரும்பாலும் தனித்து இருக்கும்போது என்றாலும், சில சமயம் 'பப்ளிக்' கிலும் கூட)

15 'சாட்' பண்ணுவதற்காக என்றாலும் சரி, 'அவுட்டிங்' போவதற்காக என்றாலும் சரி, நாங்கள் பெண்களை அணுகுவதைவிட பெண்கள் எங்களைத் தேடி வருவதைத்தான் விரும்புவோம்.

16 வீட்டு வேலை செய்வது ஒன்றும் எங்களுக்குக் கஷ்டமான காரியம் இல்லை. ஆனால், அம்மா வேலையைச் சொன்னவுடன் 'இது நம்ம பார்க்க வேண்டிய வேலை இல்லையே' என்று தோணுவதையும் தடுக்க முடியவில்லை.

17 உலகத்தில் ரொம்ப 'போர்' ஆன விஷயம் ஷேவ் பண்ணிக் கொள்வதுதான்! (ஆனால் பெண்களுக்கு கிளீன்-ஷேவன் ஆண்களைத்தான் பிடித்துத் தொலைக்கிறது. அதுக்காகவே பொழுது ஒரு பக்கம் விடியும் போதே பிளேடோடு போராட வேண்டியிருக்கிறது)

18 'சித்தி', 'வாழ்க்கை', 'சொந்தம்' - மெகா சீரியல்கள் எங்களுக்கும் பிடிக்கும்.

19 டெட்டி-பேர்களையும், வெள்ளை வெளேர் என்று இருக்கும் பாமரேனியன் நாய்களையும் பார்க்கும் போது அவற்றைக் கட்டிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற உந்துதல் எங்களுக்கும் உண்டு.



ஃபிளாப்பியில் இருந்த குடை மிளகாயைக் காணோமே!



20 எங்களுக்கும் மென்மையான மனசு உண்டு. குஜராத் சமாசாரத்தைப் பற்றித் தொடர்ந்து இரண்டு நிமிடத்துக்கு மேல் படிக்கவோ பார்க்கவோ முடியவில்லை. ஆனால் ஒன்று. ஃபீலிங்ஸ் இல்லாத மாதிரி வேறு சில சந்தர்ப்பங்களில் நடிப்போம். கண்டுகொள்ளாதீர்கள்.

21 டெலிஃபோனில் பேசுவது என்றால் அது எங்களுக்கு மருந்து மாதிரி. ஆகையால் வாலிபிகளே, உங்கள் பாய் - ஃபிரண்டோடு பேசும்போது ஒற்றை வரியில் பதில் வந்து கொண்டிருந்தால் நொந்து போய் விடாதீர்கள். அது நீங்கள் செய்த பாவம் இல்லை, கிரஹாம் பெல் செய்த பாவம்!

22 *ஐஸ்வர்யா ராய் மாதிரியான 'ஹெப்' பெண்களை எங்களுக்குப் பிடிக்காது.*

23 ஹீரோ கணக்காக ஸ்டண்ட் செய்து பெண்களை இம்ப்ரெஸ் பண்ண வேண்டும் என்று நாங்கள் நினைப்பதே இல்லை. சினிமாவில் ஏன் இப்படித் திரும்பத் திரும்பக் காட்டுகிறார்கள்?

24 டீ.வி., ரேடியோ ரிப்பேர் போன்ற டெக்னிகல் விஷயங்களில் பெண்களுக்குத் தெரிந்த அளவுதான் எங்களுக்குத் தெரியும். ஆனால் அவர்களைவிட நிறைய தெரிந்து வைத்திருப்பதுபோல் பாவ்லா செய்வோம். அவ்வளவுதான்.

25 கர்ல் - ஃபிரண்டுகளுடன் தனிமையான இடத்துக்குப் போவதைவிட கூட்டமான இடத்துக்குப் போவதைத்தான் விரும்புவோம். (இந்த 'செட்-அப்'பில் நாலு பேர் நம்மைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டால் த்ரில்தானே? தெரிந்தவர்கள் பார்த்துவிட்டு வீட்டில் சொல்லி டின் கட்டிவிடுவார்களோ என்கிற பயமும் உள்ளூர இருக்கும். ஆனால் அது பாட்டுக்கு அது, இது பாட்டுக்கு இது)

ரகசியங்களைத் தைரியமாக வெளியிட்ட செல்வா, கி.கு., ராஜேஷ், கண்ணன் @ பிஸ்கட் குண்டன், பாலாஜி, தனா, சித்து, பண்டூ, ராஜீவ், அபி ஆகியோருக்கு கல்கியின் 'வாலிபி வாசகி'களின் சார்பில்

'தாங்க்யூ!'

சந்திப்பு : சிதம்பரம்
படங்கள் : ஸ்ரீஹரி



தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

பவர்ஃபைனான்ஸ்

நடத்தும்

டெபாசிட்தாரர்கள் முகாம்

உள்ளூர் காசோலை ஏற்றுக் கொள்ளப்படும்.

சேலம்

நாள் :

22, 23 & 24 பிப்ரவரி, 2001.

இடம் :

ஸ்ரீ வாசவி சுபிக்ஷா ஹால்,

மேட்டுத் தெரு (ஸ்ரீ சுகவனேசுவரர் கோயில் தெரு),

சேலம் - 636 001.

தொலைபேசி :

416494

திருச்சி

நாள் :

26 & 27 பிப்ரவரி, 2001.

இடம் :

அஜந்தா ஹோட்டல்,

ஜங்ஷன் சாலை,

திருச்சி - 620 001.

தொலைபேசி :

415501

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

பவர்ஃபின்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.


தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.

30-9-2000 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com / www.thegovt.com

அந்த நாள்

கல்யாணமாகி செட்டில் ஆகிவிட்ட நான்கு 'லவ்ஸ்' ஜோடிகளிடம் சினிமா ஸ்டில்கள் சிலவற்றைக் கடை பரப்பினோம். "இவற்றில் ஏதாவது ஒன்று உங்கள் காதல் அனுபவங்களை ஞாபகப்படுத்துகிறதா?" என்று கேட்டோம். 'பளிச்', 'பளிச்' என்று பதில்கள் வந்தன. 'கொஞ்சம் வெட்கம் + கொஞ்சம் பரவசம்' காம்பினேஷனில் இனி ஃப்ளாஷ்பேக். டொய்ங், டொடொய்ங்,



டொடொடொடொய்ங்... (வேறொன்றுமில்லை, ஃப்ளாஷ்பேக் மியூஸிக்!)



லவ்ஸ் ஜோடி 1 : ராமன் கிஷோர், ப்ரியதர்ஷினி
அனுபவம்: ப்ரியதர்ஷினி

இரண்டு பேரும் காதலைப் பத்தி வீட்டில் சொல்லியாச்சு. வழக்கம்போல ஒரே புகைச்சல். அதனால் ஒரு 'அன்ஈஸி'யான சூழ்நிலை. அப்பொழுது ஒரு அசைன்மெண்ட்டுக்காக சன் டி.வி. அவரை சிங்கப்பூருக்கு அனுப்பிச்சு வைச்சாங்க. ஆறு மாதம் டூருக்கு அப்புறம் திரும்பி வந்தார், கை நிறைய பரிசுகளோட. திரும்பி வந்த மறுநாள் இரண்டு பேரும் ஆபீஸில் சந்திச்சோம். ஆசை ஆசையா பரிசுகளைக் கையில் திணிச்சுப் பிரிச்சுப் பார்க்கச் சொன்னார். காஸ்மெடிக்ஸ், க்யூரியோஸ், சாக்லேட்டுன்னு எக்கச்சக்க சாமான். அதில் ஒரு ரோஜாவும் இருந்திச்சு. துணியால் செய்யப்பட்டது. சிவப்புக் கலரில் ரொம்ப 'க்யூட்' ஆக இருந்திச்சு. எனக்கு ஒரே த்ரில். எல்லாத்தையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்க்க ஆரம்பிச்சேன். நான் பார்த்து





ஞாபகம்

முடிச்சப்புறம் "எல்லாத்தையும் உன் பையில் எடுத்து வைச்சுக்கோ!"ன்னு சொன்னார்.

எனக்குக் குழப்பம். வீட்டில் கொண்டு போய்க் காமிக்கிற அளவுக்குச் சூழ்நிலை சுமுகமாயில்லை. அதே சமயம் மறைச்சு வைச்சு யூஸ் பண்றதுக்கும் மனசாட்சி இடம் கொடுக்கலை. ஆனானப்பட்ட காதலையே மறைச்சு வைக்கலை, இது எம்மாத்திரம்?

அதனாலே அவர்கிட்டே "நீங்களே வைச்சுக்கோங்க, கல்யாணத்துக்கப்புறம் யூஸ் பண்ணிக்கிறேன்"ன்னு சொன்னேன். அவ்வளவுதான். ரொம்ப டிப்ரெஸ்டு ஆயிட்டாரு. நான் அவரை அவ்வளவு 'டிப்ரெஸ்டு'ஆ அதுக்கு முன்னாடியும் சரி, அப்புறமும் சரி பார்த்ததே இல்லை.

கல்யாணத்துக்கப்புறம் அவர் கண் முன்னாடியே அவரோட திருப்திக்கு எல்லா சாமானையும் யூஸ் பண்ணேன். ஆனால், அந்த நாளை மட்டும் அவர் மறக்கறதில்லை. 'அன்னிக்கு எப்படி கடுபேத்தினே தெரியுமா?' அப்படீன்னு நறநறன்னு பல்லைக் கடிப்பார். அவரோட உணர்ச்சி அன்னைக்கும் புரிஞ்சுது. இன்னிக்கும் புரியுது. ஆனால் என்னோட சூழ்நிலை இக்கட்டா இருந்ததே. என்ன பண்ண முடியும்?


லவ்ஸ் ஜோடி 2: டாக்டர் ரமேஷ் — டாக்டர் இந்து

அனுபவம் : ரமேஷ்

இரண்டு பேரும் எம்.பி.பி.எஸ். முதல் வருஷம் படிச்சுக்கிட்டு இருந்தோம். ஒரு நாள், 'லாப்'க்குப் போயிட்டு வகுப்புக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, இந்து முந்திக்கிட்டுப் போய் அவளோட இடத்தில், கதவுக்கு அருகில் இருக்கிற முதல் பெஞ்சில் உட்கார்ந்திட்டா.




நான் உள்ளே நுழையும்போது என் பின்னாடி வந்துக்கிட்டிருந்த இன்னொரு மாணவி தன் பையில் இருந்த எல்லா பேப்பர்களையும் 'தொபுக்கட்டீர்'ன்னு கீழே போட்டுட்டாங்க. அவங்க காலடியில் விழுந்து கிடந்த பேப்பர்களை ஒன்று சேர்க்கறதுக்காக நான் குனிஞ்சேன். 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழணும்!'ன்னு சத்தமாக ஒரு கமெண்ட்-வேறு யார்? - இந்து தான். எல்லாரும் 'கொல்'ன்னு சிரிச்சுட்டாங்க. எனக்கு ஒரே அவமான



மாய்ப் போச்சு. இத்தனைக்கும் நானும் இந்துவும் ஒருத்தரை ஒருத்தர் பெயரளவில்தான் தெரிஞ்சு வைச்சிருந்தோம். ரொம்பப் பார்த்துக்கிட்டதும் இல்லை, பழகினதும் இல்லை.

'இரு இரு. என்னோட பதினாறு பிள்ளைகளை நீயே சுமக்கிறியா இல்லையான்னு பாரு!' அப்படீன்னு உள்ளுக்குள்ளே கருவிக்கிட்டேன். ஏன் அப்படிக் கருவத் தோணிச்சுன்னு பின்னாடி நினைச்சுப் பார்க்கும் போதெல்லாம் எனக்குச் சிரிப்பு பொத்துக்கிட்டு வரும். ஆனால் ஒன்று. மனசு முழுக்க ஆத்திரத்தோடு தான் என்றாலும் நான் முதன் முதலாக இந்துவை நல்லா கவனிச்சுப் பார்த்தது அன்னிக்குத்தான்!

லவ்ஸ் ஜோடி 3:
பாப் பாடகர்கள்... கருணாஸ், கிரேஸ்




காதலிக்க ஆரம்பிச்ச மூன் றாம் மாதம். ஒரு நாள் மனசுவிட்டுப் பேசிக்கிட்டிருந் தோம் பீச்சில். திடீர்னு தாஜ் மஹாலைப் பத்தி பேச்சு வந்தது. "எல்லாரும் காத லுக்குச் சின்னமா தாஜ்மஹாலைச் சொல்றாங்க. அந்த தாஜ்மஹால் மெகா சைஸ். ஆனா ஒரு மினி சைஸில் தாஜ் மஹால் கட்ட ணும்... ரெண்டு பேரும் வாழ்ந்து முடிச்சப்புறம்



யாரு முதலில் சாகறோமோ அவங்க இன்னொருத்தர் நினைவாக அதைக் கட்டணும்!'' அப்படின்னு பேசிக்கிட்டோம். இது விளையாட்டில்லை, நிஜம். அந்த தாஜ்மஹாலைப் பார்க்க எக்கச்சக்க டூரிஸ்டுகள் வர்றாங்க. எங்களோட தாஜ்மஹாலைப் பார்க்கவும் டூரிஸ்டுகள் வர்ற அளவுக்கு அதில் ஒரு புதுமை பண்ணப் போகிறோம். அது என்னங்கறது உங்களுக்கு எல்லாம் சஸ்பென்ஸ்!





லவ்ஸ் ஜோடி 4 : டாக்டர் அஜித், உஷா
அனுபவம்: உஷா

என் அக்காவுக்கும் அஜித்தினுடைய அண்ணாவுக்கும் கல்யாணம் முடிஞ்சது. கல்யாணம் நடந்து முடிஞ்ச கையோடு, ஒரு சின்ன விசேஷம் அவங்க வீட்டில். அதுக்கு நாங்க எல்லாரும் போயிருந்தோம். அன்னிக்கு விருந்தில் ரசம் உண்மையிலேயே பிரமாதம். அஜித்தினுடைய அம்மாதான் சமையல் பண்ணியிருந்தாங்க. 'ஆன்ட்டி, உங்களோட ரசம் சூப்பர்!' அப்படீன்னு பாராட்டினேன். ஏதோ ஒரு அறையிலிருந்து வெளியில் வந்த அஜித் 'என் அம்மாவை ஏன் காக்கா பிடிக்கிறே உஷா?' அப்படீன்னார்.



ஆமா. இவர் பெரிய மன்மதன். இவரைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்காக காக்கா பிடிக்கிறாங்க எல்லாரும்!' அப்படீன்னு அவர் மூக்கை உடைச்சேன். அன்னிக்கு ஆரம்பிச்சதுதான்.

வந்ததே...



ஒரு சந்தர்ப்பத்தைக்கூட விட்டுக் கொடுக்காமல் இரண்டு பேரும் சண்டிக் கிட்டே இருப்போம். அவர் பண்ணுகிற கிண்டலில் சில சமயம் எனக்கு அழுகையே வந்திடும். அவருடைய இரண்டாவது அண்ணனின் கல்யாணமும் முடிஞ்சுது. அந்தக் கல்யாணத்தை விசாரிப்பதற்காக நானும் அம்மாவும் அவர் வீட்டுக்குப் போயிருந்தோம். அம்மா எப்பொழுதும் கையில் குடை வைச்சிருப்பாங்க. அதை விட்டுட்டு ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டாங்க. அன்னிக்கும் அப்படித்தான். அவங்க வீட்டை விட்டுக் கிளம்பும்போது என்னுடைய அம்மாவுக்கு என்ன தோணுச்சோ தெரியலை. "அஜித். இந்தக் குடையை உனக்காகத்தான் வைச்சிருக்கேன்!" அப்படீன்னாங்க. அஜித்துக்குப் புரியலை. "எதுக்கு ஆன்ட்டீ!" அப்படீன்னாரு. "இரண்டு அண்ணன்களுடைய கல்யாணமும் முடிஞ்சிடுச்சு. இனி பாக்கி இருக்கிறது உன்னுடைய காசியாத்திரைதானே. அதுக்காக வைச்சிருக்கேன்னு சொன்னேன்!" அப்படீன்னு விளக்கினாங்க. அஜித் உடனே என்னுடைய கண்ணை நேராகப் பார்த்து 'இப்போ சொன்னால் கூட நான் கல்யாணம் பண்ணிக்க ரெடி' அப்படீன்னாரு. அவர் என் கண்ணை ஊடுருவிக் கொண்டே சொன்ன விதம், அவர் அதை என்கிட்டேதான் சொல்றார்ன்னு புரிய வைச்சிடுச்சு. அதிர்ச்சியாகவும் இருந்திச்சு. கூடவே பரவசமாகவும் இருந்திச்சு! அப்பத்தான் நானும் அவரை உள்ளுக்குள்ளேயே காதலிக்கிறேன்னு புரிஞ்சுக்கிட்டேன்!



சந்திப்பு: **கிருஷ்ணா சிதம்பரம், அப்பு**
படங்கள்: **ஸ்ரீஹரி, ஜரிஸ்**
அட்டையில்: **ப்ரியதர்ஷினி, ராமன் கிஷோர்**
வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

வட்ட மேஜை



✉ 'கும்பமேளா' நேரடி ரிப்போர்ட் ரத்தினச் சுருக்கம்! ஐதீகத்தை விஞ்ஞான ரீதியாக நியாயப் படுத்தி விட்டீர்கள்!
நெய்வேலி-8,
கருப்பம்புலம்
சித்திரவேலு.

✉ தன் வரலாற்றைத் தாய் மொழியான குஜராத்தி மொழியில் முதலில் வடித்து, பின்னர் மொழி மாற்றம் செய்த காந்தியின் தாய்மொழிப்பற்று, 'தமிங்கலத்தை உருவாக்க மாட்டோம்' என்ற உறுதியை நமக்குத் தர வேண்டும்!
திருப்பத்தூர், புதூர். சு. முருகையன்.

✉ ஐந்தாண்டு காலத்தை வெற்றிகரமாக முடித்துவிட்ட கலைஞரின் ஆட்சியை, வாக்காளர்களைக் கொண்டே எடை போடச் சொன்னது கல்கியின் ராஜதந்திரம்.
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

✉ கல்கி இதழோடு வழங்கப்பட்ட 'அன்னபூரணி' வண்ணப் படத்தை என் வீட்டுப் பூஜையறையில் வைத்ததும், பூஜையறையே களை கட்டத் தொடங்கி விட்டது.
திருச்சி 18,
அம்மனூர்
என். சாம்பமூர்த்தி.



'அருள்வாக்கு' தேர்ந்தெடுக்கப்பட்டது தற்செயல்!

✉ மூடநம்பிக்கையில் கவனம் செலுத்தினால் அதுவே முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக அமையும் என்பதைத் தெளிவு படுத்தியது 'ராசிபலன்' சிறுகதை!
ஈரோடு –4, கன்னி. சுப்பிரமணியன்

✉ த.மா.காவின் மேல் உள்ள உண்மையான அக்கறையின் வெளிப்பாடுதான் தலையங்கம் என்றால் அது மிகையாகாது!
மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்

✉ தூரிகையால் சாவை விரட்டி சாதனை படைத்து சந்தோஷமான எண்ணங்களையும் பாசிட்டிவான எண்ணங்களையுமே பரப்ப விரும்பும் திருமதி சாரதா ஒரு சாதாரணப் பெண் அல்ல!
பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ திரு. கிட்டப்பா என்ற அச்சகத் தொழிலாளி, அச்சுத் தொழில் செய்பவர்களுக்கு எந்த வாரியமும் இல்லை என்று கூறி இருக்கிறார். அது தவறு. அச்சுத் தொழில் செய்பவர்கள் 'தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில்' உறுப்பினராகச் சேரலாம்!
சென்னை, க. பொன்முடி
(தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)

✉ 'மேஜிக் நிபுணர் மித்ராவின் சாகஸப் பயணம் 'திக் திக்' என்று மனத்தை அடித்துக் கொள்ளச் செய்து விட்டது!
மதுரை – 16, வி. சிவா.

✉ "எரிமலை, பூகம்பம், தீ, விபத்து முதலான உபாதைகள் ஏற்படுவதில் மற்றவர்களின் பரோபகார சிந்தனைக்கு பகவான் வைக்கிற பரீட்சையும் சேர்ந்திருக்கும்" என்ற ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் வரிகளை சரியான நேரத்தில் வெளியிட்டு தூங்கிக் கொண்டிருக்கும் உள்ளங்களை எழுப்பி விட்டீர்கள். நன்றி.
தாம்பரம்,
ரொசாரியோ
ரவிச்சந்திரன்.

✉ 'அருள்வாக்கு' – அறிவுரை தற்செயலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு குஜராத் பூகம்பத்துக்கு முன்பே அச்சேறிவிட்டது! பெரியவரின் தீர்க்கதரிசனத்தைப் பாராட்டி வந்த அனைத்து கடிதங்களுக்கும் கும்பகோணம் வைத்தியநாத சுவாமியின் தந்திக்கும் நன்றி!

– (ஆ-ர்)

பேஷ், பேஷ், காபின்னா சுக்கு காபி தான்!







மூலிகை மணி டாக்டர் க.வேங்கடேசன்

டாக்டர் க.வே. அபிராமி

பொதுவாகவே நம் வீடுகளில் ஒரு பழக்கம் உண்டு. காய்கறி வாங்கப்போனால், என்ன காய்கறி வாங்கினாலும் சரி, கடைசியாக, கொஞ்சம் கொத்துமல்லி, கருவேப்பிலை கேட்பார்கள். இந்த இரண்டில் கூட, கொத்துமல்லிக்கு ஒரு சிறப்பு உண்டு.

கீரைக்கும் சரி, செடியிலிருந்து கிடைக்கும் விதையான 'தனியா'வுக்கும் சரி நிறைய மருத்துவ குணங்கள் உண்டு.

ஜுரம் வந்துவிட்டால், நாக்குக்கு எந்த ருசியும் தெரியாது. எதைச் சாப்பிட்டாலும் மண்ணைத் தின்னுவது போல இருக்கும். இதற்கு என்ன மருந்து தெரியுமா? அரை ஸ்பூன் தனியா, இரண்டு ஏலக்காய், இரண்டையும், ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு, நன்கு கொதிக்கவிட்டு, வடிகட்டி, பனங்கல்கண்டு சேர்த்து அதனுடன் சிறிது பாலும் கலந்து கொள்ள வேண்டும். பனங்கல்கண்டுக்குப் பதிலாக தேன் கூட சேர்த்துக் கொள்ளலாம்.

இதனை, தண்ணீர் குடிப்பதுபோல, அப்படியே மடமடவென்று குடித்துவிடக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக, 'சிப்' பண்ணி, நாக்கிலே தங்க வைத்து, அப்புறமாக விழுங்க வேண்டும். அப்படிச் சாப்பிட்டால், இந்த தனியா கஷாயம், சுவை அரும்புகளை நிரடிவிட்டு, சுவைகளை உணரச் செய்யும். அது மட்டுமின்றி பசியையும் தூண்டிவிடும். நாக்கில் உள்ள சுவை அரும்புகள் சுவை உணர்ந்து, பசியும் எடுக்க ஆரம்பித்தால் ஜுரத்திலிருந்து விரைவிலேயே நிவாரணம் கிடைத்துவிடும்.

பொதுவாக மலேரியாக் காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாலைவேளைகளில்தான் ஜுரம் அதிகமாக இருக்கும். அந்த சமயத்தில் இந்த தனியா கஷாயம் உடனடியாக கைகொடுக்கும்.

மது அருந்துகிற பழக்கம் உடையவர்கள், ஒரளவுக்கு மீறிப் போய்விட்டால், உளறுதல் அதிகமாகி விடும். மதுபோதை தலைக்கேறி விட்ட வெறியில், வீட்டில் உள்ளவர்களைப் போட்டு அடிக்க ஆரம்பித்து விடுவார்கள். இது, பல சமயங்களில் ஆபத்தில் முடியக் கூடும். இதை, 'அவனுக்குக் குடியால சித்தம் கலங்கிப் போச்சு' என்று குறிப்பிடுவார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஒரு ஸ்பூன் தனியாவை, ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு, தனியா கஷாயம் தயாரித்துக் கொடுக்க வேண்டும். மது போதையின் தீவிரம் இறங்கும். இது அனுபவபூர்வமாய் நான் கண்டறிந்த மருத்துவ உண்மை. மதுபோதை ஆசாமிகளுக்கு, இந்த தனியா கஷாயம் முதல் சில நாட்களுக்கு வாந்தி வரவழைக்கக் கூடும். பித்தம் தலைக் கேறியதன் விளைவுதான் அது. நாளடைவில் வாந்தி நின்றுவிடும். மதுபோதை பிரச்னையிலிருந்து விடுதலை கிடைக்கும்.

'அசிடிடி' என்று அலோபதி மருத்துவத்தில் சொல்லப்படுகிற பித்தத்துக்கு நல்லதொரு மருந்து தனியா. அசிடிடிக்குச் சாப்பிடுகிற எந்த ஒரு மாத்திரையானாலும், வேறு ஏதாவது பக்க விளைவை ஏற்படுத்திவிடலாம். ஆனால் தனியாவினால் அத்தகைய ஆபத்து ஏதுமில்லை.

இன்றும் கூட கிராமப்புறங்களில் சுக்கு-மல்லிகாபி வியாபாரம் செய்யப்படுவதைக்காணலாம். உடம்புக்கு ரொம்ப நல்லது.

சுக்குமல்லி காபி குடித்துப் பயன்பெற உதவும் பொருட்டு, அதன் தயாரிப்பு முறையை உங்களுக்குத் தருகிறேன்.


நூறு கிராம் சுக்கு, நூற்றி ஐம்பது கிராம் தனியா, ஐந்து கிராம் ஏலக்காய் இவற்றை இலேசாக வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதை நன்றாகப் பொடி பண்ணி, பாட்டிலில் போட்டு, மூடி வைத்து விடவும்.

ஒரு தம்ளர் தண்ணீரில் அரை ஸ்பூன் சுக்கு மல்லிப் பவுடர் என்ற கணக்கில் சேர்த்து, சிறிது நேரம் கொதிக்க வைத்து, வடிகட்டி பனங்கல்கண்டு சேர்த்துச் சாப்பிடுங்கள். கருப்பட்டிச் சேர்த்து சாப்பிட்டால் தனிச் சுவை இருக்கும்.

பனங்கல்கண்டு, கருப்பட்டி இவற்றைக் கண்டு முகம் சுளிக்கிற குழந்தைகளும் மற்றவர்களும், சர்க்கரை போட்டும் பருகலாம்.


அன்பே அருமருந்து எய்ட்ஸ்க்கு.

நமது குடும்பத்தில் யாருக்காவது இதய நோய் வந்து விட்டால், அவரை தள்ளியா வைக்கிறோம்? யாருக்காவது, காச நோயோ, இரத்த அழுத்தமோ, புற்று நோயோ வந்தால் அவரை ஒதுக்கியா விடுகிறோம்? இல்லையே. அவர் மீது மேலும் அன்பு காட்டுகிறோம். பரிவு காட்டுகிறோம். அதிகமாக கவனிக்கிறோம். அல்லவா? ஏனெனில், நமது அன்பே நோயாளிகளுக்கு ஆறுதல் என்னும் அருமருந்து என்பது நமக்குத் தெரியும். அதே போலவே, எய்ட்ஸ் நோயாளி மீதும் அன்பு காட்டுங்கள். ஆதரவாய் இருங்கள். பழகுவதாலோ, பேசுவதாலோ, தொடுவதாலோ எய்ட்ஸ் நோய் பரவுவது இல்லை. நம்மால் முடிந்த வரை அன்பு செலுத்துவோம்.



அன்பு செலுத்துவோம். அரவணைப்போம்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம்,
417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008. தொலைபேசி: 825 5467.
24 மணி நேர ஹாட்லைன்: 825 6882, இலவச தொலைபேசி: 1097





2001 பிப்ரவரி 18
விக்ரம மாசி 6
மலர் : 59
இதழ் : 29

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ராமதாஸின் சரணாகதி

காத்திருந்து காலை வாரிவிட்டிருக்கிறார் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ்! அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றால் ஆதாயம் அதிகம் என்று கணக்கு போட்டு, தேசிய ஜனநாயக கூட்டணி அமைச்சரவையிலிருந்து அவர் விலகியிருப்பது வெளிப்படை. அரசின் ஸ்திரத்தன்மைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று பிரதமரிடம் ஒருபுறம் உத்தரவாதம் அளித்துவிட்டு மறுதினமே ஜெயலலிதாவைச் சந்தித்திருக்கும் அவர், அரசியல் அனுபவமில்லாத அப்பாவி இல்லை. ஜாதிப் பெயரால் பிரித்தாளும் அரசியல் நடத்திவரும் இன்றைய அரசியல் பரம்பரையில் முக்கியமானவர். ஜெயலலிதாவின் குணத்தையும் அரசியலில் அவர் கையாளக்கூடிய அடுத்தடுத்த நடவடிக்கைகளையும் அறியாத அளவுக்கு வெகுளியும் இல்லை டாக்டர் ராமதாஸ்.

எனவே, சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி கொள்ள பா.ம.க. முடிவெடுத்திருக்கிறது என்றால், என்ன உத்தரவாதங்களை அக்கட்சிக்கு ஜெயலலிதா அளித்திருக்கக்கூடும் என்று வாக்காளர்கள் சிந்திக்க வேண்டும்.

சமீப காலம்வரை அ.தி.மு.க.வுக்கும், பா.ம.க.வுக்குமிடையே சௌஜன்யம் தட்டுக்கிட்டுப் போகவில்லை என்பதும் தமது கட்சியிலிருந்து விலகி தலித் எழில்மலை அ.தி.மு.க.வில் சேர்ந்தபோது ராமதாஸ் என்ன வேகத்துடன் பேசினார் என்பதும் இப்போது



நினைவுகூரத் தக்கது. விடுதலைச் சிறுத்தைகளுடன் வெளிப்படையாகப் பகை பாராட்டியவர் இப்போது அக்கட்சியையும் அரவணைக்கத் தயார். இவையெல்லாம் ஏதோ நாட்டு நலன் கருதி செய்த கொள்கைத் தியாகங்கள் அல்ல; சுயநலம் கருதி அடித்திருக்கும் அந்தர் பல்டிகள்!


"நாங்கள் ஒன்றும் அ.தி.மு.க.விடம் சரணடைந்து விடவில்லை; ஆனால் எல்லா முடிவுகளையும் என் சகோதரி செல்வி ஜெயலலிதாவிடம் விட்டுவிட்டேன்" என்று ராமதாஸ் முன்னுக்குப்பின் முரணாகப் பேசியிருப்பது கவனத்துக்குரியது.

வாழப்பாடிக்கும் இவருக்கும் இருந்த பூசலையொட்டி, வாழப்பாடியை தே.ஜ. முன்னணியிலிருந்து வெளியேற்ற கருணாநிதி முயற்சி எடுக்கவில்லை என்பது நொண்டிச் சமாதானமே. இவருடைய சரணாகதி படலத்தை இத்தகைய சாக்குபோக்குகள் நியாயப்படுத்திவிடாது.

பா.ஜ.க. தலைவர்கள், இந்த அரசியல் அதிர்ச்சியினால் பெரிதாகப் பாதிக்கப்பட்டதாகக் காண்பித்துக் கொள்ளாதிருக்க முயன்று வருவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. த.மா.கா.வும் காங்கிரசும் அதிர்ச்சியில் வாயடைத்துப் போயிருப்பதும் தெரிகிறது.

மதச்சார்பற்ற கூட்டணி என்ற சாக்கில் அ.தி.மு.க.வுடன் இணைய முன் வந்த இக்கட்சிகள் இப்போது ஜாதி அடிப்படையிலான பா.ம.க.வை ஏற்றாக வேண்டும். தவிர, ராமதாஸுக்கும் அவர் கட்சிக்கும் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் என்ற தெளிவான முத்திரையும் உண்டு. சோனியாவின் கட்சியான காங்கிரசும் சோனியாவின் ஆசிகோரும் கட்சியான த.மா.காவும் இப்போது திருடனுக்குத் தேள்கொட்டியதைப் போல் விழிக்கின்றன.

உண்மையில் இவ்விருகட்சிகளும் தமிழக அரசியலை நல்ல திசை நோக்கித் திருப்ப உதவுவதற்கு ஓர் அருமையான சந்தர்ப்பம் உருவாகியிருக்கிறது. தமிழகத்தின்



நலனைக் கருத்தில் கொண்டால் அவ்வாறு மூப்பனார் செயல்படுவார்.

இந்தத் தருணத்தில் பா.ம.க. இடம்பெறும் கூட்டணியை ஆதரிப்பதைக் காட்டிலும் தி.மு.க.வை ஆதரிப்பதே மேலானது; வரவிருப்பது மாநில சட்டமன்றத் தேர்தல் என்பதால் அதில் பி.ஜே.பி.யின் பங்கு கணிசமாயிராது.

- காலங்கடத்தாமல் இந்த விஷயங்களை சோனியாஜியிடம் எடுத்துச் சொல்லி தமிழக அரசியலில் மற்றுமொரு திருப்பத்துக்கு மூப்பனார் வழிவகுக்க வேண்டும்.

ஆடம்பர வாழ்வும் அராஜக அரசியலும் நடத்தி தமிழ்நாட்டை ஐந்தாண்டு இருளில் ஆழ்த்திய ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வருவது பேராபத்து என்பதைப் பொறுப்புள்ள பத்திரிகைகளும் செல்வாக்குள்ள நபர்களும்கூட மக்களுக்கு நினைவூட்ட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டைக் கடவுளால்கூட காப்பாற்ற முடியாது என்று ரஜினி சொன்னது முன்னிலும் அர்த்தமுள்ளதாகியிருக்கிறது.

அந்த வாக்கியத்தை உரிய தருணத்தில் வாக்காளர்களுக்கு நினைவூட்ட அவர் முன் வர வேண்டும். பேச வேண்டியதை பேச வேண்டிய நேரத்தில் பேசாது இருப்பது என்பதும் கடமையில் தவறுவதாகும்.

பத்திரிகைகளும் பொறுப்போடும் தீர்மானத்தோடும் மக்களைச் சிந்திக்கச் செய்து வழிகாட்ட வேண்டும்.

'ஜெயலலிதா ஊழல்கள் செய்தார்; ஆனால் கருணாநிதி ஆட்சியிலும் ஊழல் இல்லாமலில்லை' என்கிற ரீதியில் குழப்பிச் சொதப்புவதால் வாக்காளர்கள் நிலைதடுமாறித்தான் போவார்கள். களத்தில் உள்ள அணிகளுள் சிறந்தது எது என்று எடைபோட்டுப் பார்த்து அதற்கு ஆதரவு வழங்க மக்களை அழைப்பது இதழ்களின் பொறுப்பு. ○

"நான் மனிதர்களை மூன்று வகையாகப் பார்க்கிறேன். படிக்கற்களைத் தடைக் கற்களாகப் பார்க்கும் அற்பமான மனிதர்கள். தடைக் கற்களைப் படிக்கற்களாக மாற்றும் சிறந்த மனிதர்கள். தனக்குத் தானே தடைக் கற்களை உருவாக்கி அவற்றைப் படிக்கற்களாக மாற்றும் மகத்தான மனிதர்கள்" - எக்ஸ்னோரா தலைவர் எம்.பி. நிர்மல், இப்படிக் காற்றைக் கிழித்து மைக்குக்குள் கர்ஜித்தபோது சென்னை டி.ஜி. வைஷ்ணவா கல்லூரி அரங்கம் காதுகளைத் தீட்டிக்கொண்டிருந்தது.

"சென்னையில் சில பள்ளிக்கூடங்களில், குழந்தைகளைச் சேர்க்க வேண்டுமானால், முதலில் பெற்றோர்களுக்கு ஒரு இன்டர்வியூ வைப்பார்கள். அப்பொழுது, நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள் என்று கேட்பார்கள். ஆனால் வட அமெரிக்காவில், மார்வா காலின்ஸ் என்று ஒரு பெண்மணி பள்ளி ஒன்றை நடத்துகிறார். அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒரு பையன் சேர வேண்டுமானால் ஒரு குற்றமாவது செய்திருக்க வேண்டும். மூன்று பாடங்களிலாவது பூஜ்ஜியம் எடுத்திருக்க வேண்டும். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட தகுதிகள் அடிப்படையில் அட்மிஷன் தரும் மார்வா காலின்ஸ் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு, பல்வேறு அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று அங்கே கல்வியிலும், கலைகளிலும், விளையாட்டிலும் முதலிடம் பெற்றிருக்கும் மாணவ மாணவிகள்தான் அதிகம். மார்வா காலின்ஸ் போன்ற மனிதர்களைத்தான் 'தங்களுக்குத் தாங்களே தடைக்கற்களை உருவாக்கி அவற்றைப் படிக்கற்களாக மாற்றும் மகத்தான மனிதர்கள்' என்று குறிப்பிட்டேன்.

கல்கி - ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து வழங்கிய நில்! கவனி!! வெற்றி கொள்!!! என்ற இளைஞர் திருவிழா வரிசையின் இரண்டாம் நிகழ்ச்சியில்தான் இப்படி முழங்கிக் கொண்டிருந்தார் நிர்மல்.


மனவளம் குறித்த இந்நிகழ்ச்சியில் சம்பிரதாயமான வரவேற்புரை இருந்திருக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள்...? அதுதான் இல்லை!

நிகழ்ச்சிக்குத் திறந்தவெளி அரங்கை அளித்த வைஷ்ணவா கல்லூரி முதல்வர் பேராசிரியர் ராஜகோபால், வரவேற்பின் முதல்கட்டமாக கொசுக்களை விரட்ட தடபுடலாக ஏற்பாடு செய்திருந்தார்.

ஏழாவது அறிவு ஒன்று உண்டு!

அந்தப் புகை மண்டலத்துக்கு அஞ்சியோ என்னவோ... சில மாணவர்களும் கொசுக்களைவிட வேகமாகப் பறந்துபோய்விட்டனர் என்பது வேறு விஷயம்!

கொசுக்களை விரட்டியாயிற்று இனி விக்னம் தீர்ப்பது



• நிர்மல்


கல்கி
ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®
நில், கவனி, வெற்றிகொள்!

வினாயகருக்கொன்றும் கஷ்டமில்லை என்று மகாகணபதியை அழைத்து 'வைஷ்ணவா கல்லூரி மாணவிகள் ஷண்முகப்ரியாவும் சௌஜன்யாவும் பாட, அதன் பிறகு ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் அதிபர் முரளியின் அசல் நெய்யில் செய்த, சாரி, அசலான அன்பிலே தோய்ந்த வரவேற்பு:

தேவையற்ற சிந்தனைகள் அகல, மனம் வளப்படும். மனவளம் ஆனந்தத்துக்கும், ஆனந்தம் உற்சாகத்துக்கும், உற்சாகம் உழைப்புக்கும், உழைப்பு முன்னேற்றத்துக்கும் வழி வகுக்கும் என்று ரத்தினச் சுருக்கமாக ஒரு ஃபார்முலா - பன்னீர் தெளித்து முடித்துவிட்டார்.

கொசு விரட்டும் முயற்சியில் களைத்துவிட்டதாலோ என்னவோ, தாமதமாக வந்தார் கல்லூரி முதல்வர். கல்லூரிக்குத் தாமதமாக வரும் மாணவர்களுக்கு ஒரு கண்டனச் சிற்றுரையும் 'காதல் தோல்வி' என்று தற்கொலைக்கு முயற்சி செய்யும் மாணவர்களுக்கு ஒரு கண்டனப் பேருரையுமாக கலகலத்தது அவருடைய துவக்க உரை! நிர்மலுக்கு பயந்து கொசு மருந்து அடித்ததாக அவர் ஜோக் அடிக்க, 'ஆமாம்! என் பெயரைச் சொன்னாலே குப்பை, கொசுப் பிரச்னைதான் ஞாபகம் வரும்' என்று பதிலுக்கு ஒரு கடியுடன்தான் தம் உரையை ஆரம்பித்தார் எக்ஸ்னோரா நிர்மல்.

ஆனால், தொடர்ந்து நிர்மல் பொழிந்த அடுக்கடுக்கான வெற்றிச் சூத்திரங்கள் பார்வையாளர்களைச் சொடுக்கு போட்டு நிமிரச் செய்துவிட்டன.

''மனிதர்களுக்கு ஐம்புலன்கள். ஆறறிவு. ஏழாவது அறிவு என்று ஒன்று உண்டு. புதுமையாக எதையும் செய்வதுதான் அந்த ஏழாவது அறிவு'' என்று ஆரம்பித்தார் எம்.பி. நிர்மல்.

''ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரு துணிக்கடை வியாபாரம் நன்றாக நடக்கிறது. இதைக் கவனித்து விட்டு வேறு இரு வியாபாரிகள் உடனே இடதுபுறமாக ஒருவரும் வலது பக்கமாக இன்னொருவரும் இரண்டு புதுக் கடைகள் திறக்கிறார்கள்.

''பழைய கடையில் வியாபாரம் படுத்துவிடுகிறது. வியாபாரத்தை அதிகரிக்க என்ன செய்வது என்று கடைக்காரர் தனது மூளையின் வலதுபக்கத்தைத் தட்டுகிறார். வலதுபக்க மூளைதான் புதுமை பிறக்குமிடம்! ஏழாவது அறிவு வேலை செய்கிறது. தன் கடையின் பெயரை மாற்றுகிறார்! எண் ஜோதிடம் பார்த்து அல்ல; தன் ஏழாவது அறிவைப் பயன்படுத்தித்தான்!

''எல்லா வாடிக்கையாளர்களும் இரண்டு புதிய கடைகளையும் புறக்கணித்து, இவரது கடைக்குள்ளேயே நுழைய ஆரம்பிக்கிறார்கள்!

''அப்படி என்ன பெயர் மாற்றம் செய்தார் என்கிறீர்களா? அவர் வைத்த புதிய பெயர்: 'மெயின் என்ட்ரன்ஸ்!' (மூன்று கடைகளும் ஒரே கடைதான் போலிருக்கிறது; நடுவில் இருப்பது பிரதான நுழைவு வழி) என மக்கள் நினைத்து உள்ளே வர ஆரம்பித்துவிடுகிறார்கள்!

''மூளையின் சக்தி மகத்தானது. 'சென்னை மொழி'யில் சொன்னால் - நாம் மூளையை தம்மாத்தூண்டுதான் பயன்படுத்துகிறோம். உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டைனை உலகின் மிகச் சிறந்த அறிவாளி என்று ஒரு நிகழ்ச்சியில் பாராட்டிய பொழுது, அவர் சிரித்தபடியே சொன்னாராம், 'நான் என் மூளையில் ஐந்தே ஐந்து சதவீதத்தை மட்டுமே பயன்படுத்தியிருக்கிறேன்!' என்று. ஐன்ஸ்டைனே, ஐந்து பர்சன்ட் என்றால் நாம் எல்லாம் 'தம்மாத்தூண்டு'தானே!

'லாப்டாப்' கம்ப்யூட்டர்களைவிட உங்களுடைய 'ஹெட் டாப்' (head top) கம்ப்யூட்டர்களை, அதாவது, மூளையைப் பயன்படுத்துங்கள்!

'லாப்டாப்' கம்ப்யூட்டர்களைவிட உங்களுடைய 'ஹெட் டாப்' (head top) கம்ப்யூட்டர்களை, அதாவது, மூளையைப் பயன்படுத்துங்கள் என்று நான் அடிக்கடி கூறுவேன். மனித மூளையில் பல கோடி நுண்ணிய செல்கள் உள்ளன. அவற்றுக்கு நியூரான் என்று பெயர். ஒவ்வொரு நியூரானும் மற்ற எல்லா நியூரான்களுடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிக்கலான இணைப்புகளை, உலகின் மொத்த டெலிபோன் இணைப்புகளுடன் ஒப்பிட்டால்,

டெலிபோன் இணைப்புகள், பட்டாணிக்குச் சமம் என்று ஒரு நியூரோ விஞ்ஞானி குறிப்பிடுகிறார்.

"மூளையில் வலது மூளை, இடது மூளை என இரண்டு பிரிவு உண்டு. ஏதாவது பிரச்னை என்றால், 'இனி சமாளிக்க முடியாது' என்கிற கட்டத்தில் இடது மூளை, பிரச்னையை வலதுமூளையின் பக்கம் தள்ளிவிட்டு விடுகிறது. காரணம், வலது மூளைதான் கிரியேடிவிடியைக் கவனித்துக் கொள்ளுகிறது.

"கார் ஓட்டிக் கொண்டே போகிறீர்கள். சிக்னலில் சிவப்பு விளக்கு வந்துவிடுகிறது. கண்டுகொள்ளாமல் போக முயற்சி செய்கிறபோது போலீஸ்காரர் மடக்கி விடுகிறார். 'அவசரம்'... 'முதல் தடவை விட்டுவிடுங்க...' என்றெல்லாம் இடது மூளை ஏதேதோ சொல்ல வைக்கிறது. போலீஸ்காரர் மசிவதாக இல்லை.

"இந்தக் கட்டத்தில், அம்பேல் என்று கையைத் தூக்கிக் கொண்டு, வலது மூளையிடம் 'இனி உன்பாடு' என்று சொல்லி விடுகிறது இடது மூளை. வலது மூளை நம்மை வேறு விதமாக இயக்க, நாம் உடனே ஸ்டைலாக, பாக்கெட்டில் கையை வைத்துக் கொண்டு, "என் மாமா யார் தெரியுமா? என்று கேட்கிறோம். "சாலைல எதுக்கு சார் வீணா பிரச்னை! பேசாம வண்டியை எடுத்துக்கிட்டுப் புறப்படுங்க" என்று கூறிவிடுகிறார் போலீஸ்காரர். செய்த தப்பிலிருந்து தப்பிக்க மட்டும் இந்தத் திறனைப் பயன்படுத்தாமல் ஆக்கபூர்வமான விஷயங்களில் கையாண்டால் எத்தனை லாபம் கணக்குப் போடுங்கள்...

"நாம் எந்த ஒரு புது முயற்சியை மேற் கொண்டாலும் பல விதமான தடைகளைச் சந்திக்க வேண்டியுள்ளதே என்று சலித்துக் கொள்கிறோம். நான் உங்களுக்கு ஓர் உண்மையைச் சொல்லட்டுமா? வெளியில் இருப்பதைவிட அதிகமான தடைகள் நம் மனத்துக்குள்ளேயேதான் இருக்கின்றன. மனத் தடைகளைத் தாண்டுவதற்கு நாம் கற்றுக் கொண்டுவிட்டால், புறத்தடைகளைத் தாண்டுவது வெகு சுலபம்.



• பெரியார்தாசன்

"மனோபாவம் என்பது மிக முக்கியமானது. சில பேர், வெயில் காய்ந்தால், 'சே! வெயிலாக இருக்கு!' என்பார்கள். மழை பெய்தால், "சே! மழை!" என்பார்கள். மழை, வெயில் இரண்டுமில்லாதபொழுது, 'மழையுமில்லாமல், வெயிலுமில்லாமல் ஏன் இப்படி மப்பாக இருக்கு?' என்று கேட்பார்கள்.

"எந்த ஒரு விஷயத்தையும் நாம் எப்படி நோக்குகிறோம் என்பதுதான் முக்கியம்!

"வெறும் டூப்ளிகேட் பொருட்களைத் தயாரித்து விற்றுக் கொண்டிருந்த ஜப்பான், வியக்கத்தக்க முன்னேற்றம் கண்டது, உலகப் போர் காரணமாக ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர்தான்! பாகிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட விவசாயப் பின்னணி கொண்ட சிந்தி இன மக்களின் கையில்தான் இன்று உலக வர்த்தகமே அடங்கியுள்ளது. அதே மாதிரி, பூகம்பத்தால் அழிந்து போயிருக்கும் குஜராத் மாநிலமும் ஒரு தலை சிறந்த மாநிலமாக உருவாக வேண்டும், உருவாகும்.

"ஆகவே நண்பர்களே! முடியாதது என்று எதுவும் கிடையாது; தடை கற்களே படிக்கற்கள், சோதனைகளே சாதனைகள், பிரச்னைகளே பரிசுகள்!"

நிர்மல் தமது உரையை இவ்வாறு முடித்த போது அனைவருடைய மனமும் புத்துணர்ச்சி பெற்றிருந்தது உண்மை.

அந்தக் கட்டத்தில் 'ஒரே இடத்தில் நின்னு பேசினா சரிப்படாது' என்று சொல்லிவிட்டு, மேடையின் முன் பகுதியில் கோட்டு சூட்டில், மந்திரவாதி போல வந்து நின்றார் பேராசிரியர் பெரியார்தாசன். அவரது கையில் மந்திரக் கோலுக்குப் பதிலாக மைக்!

அடுத்த ஒரு மணி நேரத்துக்கு அவர் அனைவர் மனத்திலும் நடத்திய மாயாஜாலம்...

"இந்த நிகழ்ச்சிக்கு வராதவர்கள் கொடுத்து வைக்காதவர்கள், போங்கள்!" என்று வந்தவர்களை ஒருமித்துச் சொல்ல வைத்த பெரியார்தாசனின் அற்புதமான நிகழ்ச்சி விவரங்கள் அடுத்த வாரம்.

தொகுப்பு:
எஸ். சந்திரமௌலி

படங்கள்:
யோகா

சாவி என்றால் அன்பு!

சாவி கற்றுக் கொடுத்ததையெல்லாம் வேதவாக்காக ஏற்று இன்று ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றிருக்கும் ரவி பிரகாஷ், சாவியிடம் பயிற்சி பெற்ற பத்திரிகையாளர்களுள் ஒருவர். அவர் சொல்கிறார்:

ஒருமுறை சாவி அவர்கள் வெளிநாடு போயிருந்தார். நாங்கள் 'சாவி' இதழின் அந்த வாரத்துக்கான வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தோம்.

அன்றிரவு ஒரு மணிக்கு சாவி சார் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தார். காரிலிருந்து இறங்கியவர், நேரே என்னிடம் வந்து எதிரே உட்கார்ந்து கொண்டு 'என்ன... பேஜெல்லாம் முடிச்ச வரையில் நான் பார்க்கலாமா?' என்றார்.



ஒருமுறை எனக்கு நல்ல ஜுரம் கண்டிருந்தது. ஆனால் அந்த வாரத்து இதழுக்கான கடைசி கட்ட வேலைகள் பாக்கி இருந்தன. ஆபீஸ் போனேன். ஜுரத்துடனேயே வேலை செய்து கொண்டிருந்தேன். நான் படும் சிரமத்தை ஆசிரியர் சாவி கவனித்தாரா? இல்லையா? என்றும் நான் கவனிக்கவில்லை. என் வேலையில் மூழ்கியிருந்தேன்.

சற்று நேரத்தில் என் முன் நிழலாடியது. நிமிர்ந்தேன். பதறி விட்டேன். சாவி சார் நின்றிருந்தார். ஒரு கையில் பெரிய கிண்ணம் நிறைய கரைக்கப்பட்ட ரசம் சாதம். மறுகையில் வெந்நீர் டம்ளர். போதாக்குறைக்கு, சட்டைப் பையிலிருந்து ஒரு குரோசின் மாத்திரையை எடுத்து நீட்டி, 'ரவி, முதல்ல இந்த ரசம் சாதத்தைக் குடி. மிளகு ரசம். குடிச்சா நல்லா கண கணன்னு இருக்கும். அப்புறம் இந்த மாத்திரையைப் போட்டுக்கோ' என்றார்.

எனக்கு அவருடைய அன்பைத் தாங்க முடியவில்லை. கண் கலங்கி விட்டேன். 'கூப்பிட்டிருந்தா நானே வந்திருப்பேனே. நீங்க எதுக்கு...' என்றேன்.

'நீ என் பத்திரிகையைக் கவனிச்சுக்கறே! உன்னை நான் கவனிச்சுக்க வேணாமா? சுயநலம்னுதான் வெச்சுக்கோயேன்!' என்று சிரித்தார்.

அந்த அளப்பரிய அன்பை, வெறும் முதலாளி தொழிலாளி உறவுடன் முடிந்து விடாத, ரத்தமும் சதையும் மட்டுமே தரக்கூடிய பாசத்தை வேறு எவரிடமும் நான் கண்டதில்லை.

'கோபம்... கோபம்...' என்று சாவி அவர்களைப் பற்றிச் சொல்பவர்களைக் கண்டால் எனக்குக் கோபம் வரும். அந்தக் கோபத்தின் அடிநாதமாக இழையும் அன்பைப் புரிந்து கொள்ளத் தெரியாதவர்கள் அவர்கள் என்றுதான் சொல்வேன்.

கடைசியாக ஒன்று:

சாவி இதழ் நிறுத்தப்பட்டு நான் விகடனில் வந்து சேர்ந்து ஐந்தாறு மாதங்கள் ஆனபின்பும் சாவி சாரைச் சென்று பார்க்கவே இல்லை. அதன்பின் அவரது சதாபிஷேகத்தின்போது எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். போயிருந்தேன்.

என்னைப் பார்த்ததும் அவர் கேட்ட முதல் கேள்வி. 'உன்னை அவா நல்லா வெச்சண்டிருக்காளா?'

எவ்வளவு பாசமும் பரிவும் கொண்ட கேள்வி இது!

— ராணிமைந்தன் எழுதிய 'சாவி -85' நூலிலிருந்து

வாடகைத்தாய் என்பவள்
வியாபாரியா?



கர்ப்பப்பை வளர்ச்சி அடையாத ஒரு பெண்ணுக்கு வாடகைத் தாயின் மூலம் இரட்டைக் குழந்தைகள் பிறக்க வழி செய்த டாக்டர் கமலா செல்வராஜிடம், வாடகைத் தாய் வழியாகக் குழந்தை பிறக்கும் பொழுது ஏற்படும் பிரச்னைகளை விவாதிக்கிறார் அனிதா வைரவன் – மருத்துவக் கல்லூரி மாணவி...

வாடகைத்தாய் என்பவள் யார்?

தன்னுடைய சொந்தக் குழந்தை அல்லாத ஒரு குழந்தையை, அதாவது, வேறொருவரின் குழந்தையைச் சுமப்பவள்.

குழந்தை வேண்டும் என்பதற்காக ஒரு தம்பதி சிகிச்சைக்காக வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். மனைவியைப் பரிசோதிக்கும் பொழுது அவளுக்குக் குழந்தையைச் சுமக்கும் தகுதி இல்லையே தவிர மற்றபடி அவளின் கருவறைகளும் கணவனின் உயிரணுக்களும் சரியாகத்தான் செயல்படுகின்றன என்று தெரிய வந்தால் வாடகைத்தாயின் மூலம் குழந்தை பிறக்க சாத்தியம் ஏற்படுகின்றது.

அவளின் கரு முட்டைகளையும் கண

வனின் உயிரணுக்களையும் இணைத்து சோதனைக் குழாயில் கருவை உருவாக்கி, அந்தக் கருவை இன்னொரு பெண்ணின் சம்மதத்துடன் அவளின் கர்ப்பப்பைக்குள் செலுத்துவோம். அந்தப் பெண்தான் வாடகைத் தாய்.

'குழந்தை சுமக்கும் தகுதி இல்லை' என்றால்...

நான்கு விதமான காரணங்களால் இந்தத் தகுதி போய்விடுகிறது.

1. ஹெமரேஜ் காரணமாகவோ கட்டிகள் காரணமாகவோ கர்ப்பப்பையை அகற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு கர்ப்பப்பையை இழக்க நேரும்போது.

2. குழந்தையைத் தாங்கும் அளவுக்குப் போதிய பலம் இல்லாத கர்ப்பப்பை அமைவதால்...

3. உடல்நலத்தில் இருக்கும் சிக்கல்கள் காரணமாக, பிரசவம், உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அபாயம் இருப்பதால். சிக்கல்கள் என்றால் இருதயக் கோளாறு, கடுமையான சர்க்கரை வியாதி, ஹைபர் டென்ஷன் போன்றவை.

4. தான் தாயின் கருவறையில் இருந்த பொழுது கர்ப்பத்தைக் கலைக்க தாய் சாப்பிட்ட மாத்திரைகளால் மகப்பேறு பாக்கியத்தை இழந்துவிடும் பெண்கள்.

அதாவது, ஒரு பெண் தன் கர்ப்பத்தைக் கலைக்க மாத்திரைகள் சாப்பிடுகிறாள் என்று வைத்துக் கொள்ளுங்கள். மாத்திரைகள் பலனளிக்காமல் குழந்தை பிறந்து விடுகிறது. பெண் குழந்தை. அந்தக் குழந்தை பெரியவளானதும் அவளுக்கு மகப்பேறு உண்டாவதில் பிரச்னை ஏற்படக்கூடும்.

ஒரு பெண் வாடகைத் தாயாக இருப்பதற்குச் சம்மதிப்பது மனிதாபிமானத்திலா அல்லது பணத்துக்காகவா?

ஒரு பெண்ணின் சகோதரியோ, தோழியோ வாடகைத் தாயாக இருக்க சம்மதிக்கும் பொழுது பாசம் மட்டுமே காரணமாக இருக்கும். மேலை நாடுகளில், சில சமயம் பெண்ணின் தாயே பேரனையோ பேத்தியையோ வயிற்றில் சுமப்பது உண்டு.

மற்ற சூழ்நிலைகளில் பணம் மட்டுமே காரணமாக இருக்கும்.

ஒரு வாடகைத் தாய்க்கு எவ்வளவு பணம் கிடைக்கும்?

அது தாய்-தந்தையின் விருப்பத்தைப் பொறுத்தது என்றாலும் தோராயமாகச் சொல்கிறேன். சோதனை முடிந்தவுடன் ஐந்தாயிரம் ரூபாய். குழந்தை உண்டாகியவுடன் இருபத்தி ஐயாயிரம் ரூபாய். இதை ஃபிக்ஸ்டு - டெபாசிட்டாகக் கொடுத்து விடுவோம். குழந்தை பிறந்தவுடன் ஐம்பதாயிரம் ரூபாய். மொத்தத்தில் ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!

வாடகைத்தாயின் மகப்பேறு காலத்தில் ஏற்படும் மருத்துவ செலவுகளுக்கு யார் பொறுப்பு?

மகப்பேறு காலத்தில் வாடகைத் தாய்க்கு எந்தச் செலவும் இல்லை. அவளுடைய பராமரிப்பு முழுவதும் குழந்தையின் பெற்றோருடையது. மருந்து மாத்திரைகளை மட்டும் இலவசமாகக் கொடுத்து விடுவேன். மற்றபடி சோதனை செய்ய ஆகும் செலவுகள் முதல் பிரசவச் செலவுகள் வரை எல்லாவற்றையும் அவர்கள்தான் ஏற்க வேண்டும்.

ஒப்பந்தம் மாதிரி ஏதாவது போட வேண்டுமா?

நிச்சயமாக. ஒரு வக்கீலைக் கொண்டு ஒப்பந்தம் தயார் செய்வோம். பிறகு வாடகைத் தாயிடமும் குழந்தையின் பெற்றோர்களிடமும் எல்லா நிபந்தனைகளையும் விளக்கி கையெழுத்து வாங்குவோம். இந்த ஒப்பந்தம் நீதிமன்றத்தில் செல்லுபடி ஆகும். அதனால், பிரச்னை என்று பின்னால் வந்தால் கூட நீதிமன்றத்தின் உதவியோடு தீர்வு காணலாம்.

'பிறப்பு சான்றிதழ்'ல் குழந்தையின் தாய் என்று யாருடைய பெயர் இருக்கும்?

நிச்சயமாக வாடகைத் தாயின் பெயர் இருக்காது. வாடகைத் தாய்க்கும் குழந்தைக்கும் ரத்த சம்பந்தமே இல்லையே! குழந்தைக்கு வேண்டிய போஷாக்கு வாடகைத்தாய் மூலம் கிடைக்கிறது. இருவருக்கும் உள்ள உறவு அவ்வளவுதான்.

குழந்தை, குறையோடு பிறந்து தாயும் தந்தையும் வாடகைத் தாயிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டால்...

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் குழந்தை எந்த குறையுமில்லாமல் பிறக்குமா என்பதைச் சோதித்துப்


டாக்டர் கமலா

பார்க்க எத்தனையோ சுலபமான வழிகள் வந்துவிட்டன. குறை இருப்பது தெரிய வந்தால் உடனே கருவைக் கலைத்து விடுவோம். அதனால் நீங்கள் சொன்ன சூழ்நிலை உருவாக சந்தர்ப்பமே இல்லை.

பிரசவத்தில் வாடகைத் தாய் இறந்து விட்டால்...

பிரசவம் என்பது மறுபிறப்பு. அதனால் தான் குழந்தை வேண்டும் என்று சிகிச்சைக்காக வரும் பெண்கள் 'லாப்ரோஸ்கோபி வலிக்குமா?', 'டி.என்.ஸி வலிக்குமா?' என்று கேட்டால் நான் விளையாட்டாய்ச் சொல்வேன் – "உயிரையே பணயம் வைக்கும் வேள்வியில் இறங்கிவிட்டீர்கள், இந்த வலி எல்லாம் எம்மாத்திரம்?' என்று. உங்களுடைய கேள்விக்கு வருகிறேன். மருத்துவர் என்ற முறையில் செய்ய வேண்டிய எல்லா தற்காப்பு முயற்சிகளையும் செய்துவிடுவேன். பிறகு எல்லாம் ஆண்டவன் செயல். ஆனால் ஒன்று. 'சோதனைக் குழாய்' குழந்தைகளை அறுவை சிகிச்சை மூலம் பிரசவிப்பதுதான் வழக்கம். அறுவை சிகிச்சை செய்து குழந்தையை எடுக்கும்பொழுது ஆபத்துக்கள் மிகக் குறைவு.

குழந்தையைப் பெற்றோரிடம் எப்பொழுது ஒப்படைப்பீர்கள்?

அறுவை சிகிச்சை முடிந்து, குழந்தை நல டாக்டர், தன் பரிசோதனையை முடித்த கையோடு குழந்தையைப் பெற்றோரிடம் ஒப்படைத்து விடுவோம். வாடகைத்தாயைத் தாய்ப்பால் கொடுக்க வைப்பதில்லை.

குழந்தை பிறந்தவுடன் வாடகைத் தாய்க்குக் குழந்தை மீது ஈர்ப்பு வந்து குழந்தையைத் தர மறுத்து, பெற்றோர்கள் கோர்ட், கேஸ் என்று போக வேண்டிய சம்பவங்கள் ஏதேனும் நடந்திருக்கிறதா?

வாடகைத் தாயைத் தேர்வு செய்யும் பொழுது சர்வ ஜாக்கிரதையாகத் தேர்வு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இது மாதிரியான பிரச்னைகளைத் தவிர்க்க முடியும்.

செய்தித்தாள் விளம்பரத்தைப் பார்த்துவிட்டு நிறைய பேர் வாடகைத் தாயாக இருக்க முன் வருவார்கள். ஒரு சிலரைப் பரிசோதனை செய்யும்பொழுது, சோதனையை முடித்து கையைக் கூட கழுவி இருக்க மாட்டேன், "எவ்வளவு பணம் கிடைக்கும் டாக்டர்?" என்று கேட்பார்கள்.



• அனிதா வைரவன்

"எனக்கு இன்னும் கொஞ்சம் நேரம் கிடைத்தால் நானே இலவசமாக சுமந்து பெற்றுக் கொடுப்பேன். அது சாத்தியப்படவில்லை என்பதால் தான் உன்னைச் சோதனை செய்ய வேண்டிய நிலைமை. குழந்தை உண்டாக வாய்ப்பு இருக்கிறதா என்று நீ முதல் கேள்வியாகக் கேட்டிருந்தால் இன்னும் சந்தோஷப்பட்டு இருப்பேன்!" என்று சொல்லி நிராகரித்து அனுப்பி விடுவேன். காரணம், பணத்துக்கு இவ்வளவு முக்கியத்துவம் தரும் இவர்கள் பின்னால் பணத்துக்காக என்ன பிரச்னையை வேண்டுமானாலும் உண்டு பண்ணுவார்கள். பணத்துக்காகத்தான் இவர்கள் வாடகைத் தாயாக இருக்க சம்மதிக்கிறார்கள், உண்மைதான்! ஆனால் கொஞ்சம் மனிதாபிமானமும் வேண்டுமில்லையா?

இன்னொரு விஷயம். வாடகைத் தாய்க்கு குழந்தை மீது ஈர்ப்பு வருவதும் வராததும் நம்முடைய அணுகுமுறையைப் பொறுத்தும் இருக்கிறது.

குழந்தையின் பெற்றோர் பிரசவம் முடியும் வரை வாடகைத்தாயைத் தன்னுடனேயே வைத்துக் கொள்வதுதான் வழக்கம். அதனால் மாதா மாதம் செய்ய வேண்டிய பரிசோதனைகளுக்கு அவளை அழைத்து வருவது அவர்கள் தான். அப்படி வரும்பொழுது, குழந்தையின் வளர்ச்சி பற்றி பெற்றோர்களிடம்தான் பேசுவேனே தவிர அவளிடம் அதிகம் குழந்தையைப் பற்றிப் பேசுவதில்லை. பேசினால் ஈர்ப்பு வரத் தொடங்கும். அவளிடம் தனித்து பேசும் சந்தர்ப்பங்களில், "உனக்கு எவ்வளவு நல்ல மனசு! ஒரு தம்பதிக்கு குழந்தைப் பாக்கியத்தை தரப் போகிறாய், அது என்ன சாதாரணமான விஷயமா! குழந்தையின் தாயும் தந்தையும் உன்னை நன்றியோடு நினைக்கிறார்கள், வாழ்த்துகிறார்கள்! அவர்கள் ஆசீர்வாதம் உன்னை வாழ வைக்கும்!" – இந்த ரீதியில்தான் என் பேச்சு இருக்குமே தவிர குழந்தையைப் பற்றி நான் பேசுவதே இல்லை!

'வாடகைத் தாய்' யுக்தி பிரபலமாகி விட்டால் அதுவே ஒரு வியாபாரம் ஆகி விடாதா?

வியாபாரம் ஆனால் என்ன தப்பு? குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு குழந்தை வேண்டும், ஏழைப் பெண்களுக்கு பணம் வேண்டும். இரண்டும் ஒரு நியாயமான வியாபாரத்தால் சாத்தியம் என்றால், இந்த வியாபாரத்தை ஊக்கப்படுத்துவதில் தப்பே இல்லை!

கடைசியாக ஒன்று சொல்கிறேன். ஒரு

அன்பளிப்பு:

இந்த இதழுடன்
நாகை நீலாயதாக்ஷி வண்ணப்படம்.
அடுத்த வார அன்பளிப்பு:
கர்ப்பரக்ஷாம்பிகை
வண்ணப்படம்

வியாபாரி பணம் வாங்கிக்கொண்டு ஒரு பொருளைத்தான் தர முடியும். ஆனால் வாடகைத்தாய் பணத்துக்காக தன் உயிரை அடகு வைத்து இன்னொரு பெண்ணின் வாழ்க்கையையே முழுமையாக்குகிறாள். அவள் சராசரி வியாபாரியைவிட நிச்சயம் உயர்வானவள்!

குழந்தைகளின் தாய் சாந்தியிடம் ஒரு 'மினி' பேட்டி...

உங்களுக்குக் குழந்தை பிறக்கும் என்று நினைத்துப் பார்த்ததுண்டா...?

குழந்தை பிறக்கவே முடியாது என்று பன்னிரண்டு வயதிலேயே தெரிந்துவிட்டது. ஆனால் எனக்குக் குழந்தை பிறக்கும் என்று உள்ளுணர்வு மட்டும் சொல்லிக் கொண்டே இருந்தது. நான் என்னுடைய உள்ளுணர்வை நம்புகிறவள். நூறு சதவீதம் நம்பிக்கை வைத்தேன். நான் வைத்த நம்பிக்கை வீணாகவில்லை!

வாடகைத் தாயைப் பற்றி...

அவர் ரொம்ப நல்லமாதிரி. ஒன்பது மாதமும் நானும் அவரும் தனியாகத் தங்கியிருந்தோம். அவர் என்ன உணவு சாப்பிட வேண்டும், என்ன மருந்துகள் சாப்பிட வேண்டும் என்று எனக்கு கமலா மேடம் சொல்லித் தந்திருந்தார்கள். அதன்படி காரட் ஜூஸ், மாதுளம்பழ ஜூஸ், சத்துமாவு கஞ்சி என்று நேரம் தவறாமல் கொடுப்பேன். வேண்டும், வேண்டாம் என்று சொல்லாமல் சாப்பிட்டு விடுவார். அவர் அதிகம் பேசி நான் பார்த்ததே இல்லை.

சாதாரணமாக இரண்டு பெண்கள், அதுவும் அதிகம் அறிமுகமில்லாத பெண்கள் ஒன்றாகத் தங்கியிருக்கும்பொழுது எத்தனையோ பிரச்னைகள் வரலாம், இல்லையா? போதாதற்கு எங்களுடைய விநோதமான உறவுமுறை வேறு. ஆனால் ஒரு சின்னப் பிரச்னைகூட வரவில்லை. நான் செய்த புண்ணியம்.

குழந்தைகள் பிறந்த பிறகு அவரைப் பார்க்க எனக்குச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. அம்மா மட்டும் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். வேலை முடிந்துவிட்டது என்பது போல உடனே ஊருக்குக் கிளம்பிப் போய் விட்டாராம்.

குழந்தைகளை நாம் சுமக்கவில்லையே என்கிற ஏக்கம் இருக்கிறதா...

தாய்மை என்பது குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது மட்டும் இல்லையே! அவர்களைச் சிரத்தையோடு வளர்க்க வேண்டும், நல்லவர்களாக உருவாக்க வேண்டும், திறமைசாலிகளாக உருவாக்க வேண்டும். இவைதான் ஒரு தாயின் முக்கியமான கடமைகள். அந்தக் கடமைகளை நான்தானே செய்யப் போகிறேன்.

குழந்தைகளிடம் வாடகைத் தாய் விஷயத்தைச் சொல்வீர்களா?

நிச்சயம். இப்பவே எல்லோரும் எவ்வளவு பரந்த மனப்பான்மையோடு இந்த விஷயத்தைப் பார்க்கிறார்கள்? சில வருஷங்கள் போனால் இந்த விஷயம் இன்னும் கூட சகஜமாகிவிடும். அதனால் என்னுடைய பிள்ளைகள் கண்டிப்பாகப் புரிந்து கொள்வார்கள். இன்னும் சொல்லப் போனால், அவர்கள் இதை ஒரு பெரிய விஷயமாகவே நினைக்க மாட்டார்கள் என்று தோன்றுகிறது.


குழந்தை பிறந்தவுடன் உங்களுடைய ரியாக்ஷன் எப்படி?

குழந்தையே பிறக்காது என்று தெரிந்தும் என்னைக் காதலித்து கல்யாணம் பண்ணிக் கொண்ட கணவர் - மருத்துவரீதியாக எனக்கு இத்தனை கோளாறுகள் இருந்தும் நான் தாய்மை அடைய வழி செய்த கமலா மேடம் - என் கண்மணிகளைச் சுமந்து பெற்றுத் தந்த அந்தப் பெண் - மூவரையும் நினைத்து பெருமிதத்தில் குலுங்கிக் குலுங்கி அழுதேன்!

தொகுப்பு:
கிருஷ்ணா சிதம்பரம்
படங்கள்:
ஸ்ரீஹரி



• சாந்தி



புற்று நோய்க்கு தெய்வீக இயற்கை மூலிகை மருத்துவம்



நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்களும் வளருகின்றன. ஒவ்வொரு நிமிடமும் பழைய செல்கள் அழிந்து புதிய செல்கள் உருவாகி கொண்டே இருக்கின்றன. இதற்கு இயற்கையாகவே ஒரு கட்டுப்பாடு உள்ளது. ஆனால் சில செல்கள் கட்டுப்பாடின்றி உடலின் எந்த இடத்திலும் பல்கிப் பெருக வளர ஆரம்பிக்கும். கட்டுப்பாடு இல்லாமல் வளர்ச்சியடையும் செல்கள் ஒரு கட்டியாக மாறுகிறது. இதைத்தான் புற்றுநோய் என்கிறோம். எல்லா ரக புற்று நோய்களுக்கும் சில வகை பழக்க வழக்கங்களே காரணமாக இருக்கின்றன. புகையிலை போடுவதால் வாயில் புற்று நோய், சிகரெட் பிடித்தல் காரணமாக நுரையீரல், தொண்டை, உணவுக் குழாய், மூத்திரப்பையில் புற்று நோய், பொடி போடுவதால், மூக்கில் புற்று நோய், மது அருந்துவதால் காமாலை வந்தால் கல்லீரல், இரைப்பையில் புற்றுநோய் அதிக குழந்தைகளை பெறுதல், பல ஆண்களுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றை கர்ப்பப்பை புற்று நோய், ஏற்படுகின்றது. மேலும் நாம் உண்ணும் உணவு வகைகள் தயாரிப்பில் நிலங்களில் அதிகமான இரசாயன உரங்கள், மருந்துகள் சேர்ப்பதாலும், சுகாதாரமற்ற சுற்றுபுற சூழ்நிலைகளாலும், அவ்வப்போது நாம் உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளாலும் அதிகமான கோபம், பயம், மன உளச்சல், பரபரப்பு அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல் போன்றவற்றின் காரணமாக தோன்றும் நரம்புத் தளர்ச்சியாலும் புற்றுநோய் வரலாம். ஒரு புற்று நோய் செல் பல்கி பெருகி புற்று நோய் கட்டியாக மாறுவதற்கு குறைந்தது 7 முதல் 10 ஆண்டுகள் ஆகும்.

புற்றுநோய் ஆரம்ப அறிகுறிகள்: ஒவ்வொரு உறுப்புக்கும் எந்தவிதமான நோய் வந்தாலும் ஒரேவிதமான அறிகுறிகள் தான் தென்படுகின்றன. உதாரணமாக காச நோய், நிமோனியாக் காய்ச்சல் ஆகியன நுரையீரலைத்தாக்கும் போது இருமல், சளி, மூச்சு வாங்குதல், சளியில் இரத்தம் ஆகிய அறிகுறிகள் தென்படுகின்றன. நுரையீரலைப் புற்றுநோய் தாக்கும் போதும், இதே அறிகுறிகள்தான் இருக்கும். இதேபோன்று வயிற்றுப் புண்ணுக்கு இருக்கும் அறிகுறிகள்தான் இரைப்பையில் புற்றுநோய் வந்தால் இருக்கும். எனவே எந்த நோயின் அறிகுறிகளும் இரண்டு வாரத்திற்கு மேல் இருந்தால் உடனடி மருத்துவ ஆலோசனை அவசியம். எச்சில் துப்பும் போது ரத்தம் வந்தால் அலட்சியப்படுத்தக் கூடாது. ஏனெனில் புற்று நோய்க்கென தனிப்பட்ட அறிகுறிகள் கிடையாது. பொதுவான அறிகுறிகளுடன் புற்றுநோய் இருக்க வாய்ப்புகள் அதிகம்.

புற்றுநோய்க்கு தெய்வீக மூலிகைகள்: வேப்பிலை, வில்வம், துளசி, மாவிலை, அருகம்புல், அத்தி, வெற்றிலை, தும்பை, கீழாநெல்லி, நித்திய கல்யாணி, முருங்கை, நெல்லி, கரிசலாங்கண்ணி, வல்லாரை ஆகியவைகளை பொடி செய்து பின் சமஅளவில் ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் உட்கொள்ளவேண்டும். இம் மூலிகைகளினால் முதலில் புற்று செல்கள் பெருகி வளர்ச்சி அடைவது தடுக்கப்படுகின்றது. பின்னர்புற்று செல்கள் உருவாகாமலும், கட்டிகள் உடைந்து மெதுவாக வெளியேற்றப்படுகின்றது. இந்த தன்மை மேற்கூறிய மூலிகைகளுக்கு உண்டு என்பது மறுக்கப்படாத உண்மையாகும்.

புற்றுநோய்களைத் (தவிர்க்கும்) தடுக்கும் உணவு வகைகள் புற்று நோயாளிகளுக்கு பச்சை காய்கறிகள் நல்லது. மஞ்சள் நிறத்திலும், பச்சை நிறத்திலும் உள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் புற்று நோயைத் தடுக்க கூடியவை. இவற்றில் வைட்டமின் A,C சத்துகள் அதிகம். வைட்டமின் A-வில் பீட்டாகரோட்டின் என்ற பொருள் உள்ளது. இது ஒரு ஆன்டி ஆக்சிடென்ட். புற்றுநோயை தடுக்கும் குணம் இதற்குண்டு. காரட், தக்காளி, மாம்பழம், பலாப்பழம், கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, எலுமிச்சை, நெல்லிக்காய், முட்டைகோஸ், பீட்ரூட் போன்றவற்றில்மேற்சொன்ன சத்துக்கள் அதிகமுள்ளன. இவற்றை அடிக்கடி உண்பவர்களுக்கு புற்றுநோய் வரவாய்ப்பில்லை. இதேபோல் நார்பொருள் நிறைந்த உணவுகளை சாப்பிட்டால் பெருங்குடல் தொடர்பான புற்றுநோய்கள் வருவது குறைகிறது. கோதுமை, கம்பு, சோளம், கேழ்வரகு, தேங்காய், நிலக்கடலை, அவரை, கத்திரிக்காய், வெள்ளரிக்காய், வெண்டைக்காய், பட்டாணி, வெங்காயம், பேரிச்சம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றில் நார்ச்சத்து அதிகம். மேலும் முருங்கை கீரை, பொன்னாங்கண்ணி கீரை, மணத்தக்காளிகீரை, மஞ்சள், சீரகம், துளசி, கசகசா, வெள்ளைப்பூண்டு, ஏலக்காய் ஆகியவற்றிலும் புற்று நோயைத் தடுக்கின்ற நோதிப் பொருட்கள் அடங்கியுள்ளன. ஆகவே இவைகளை அடிக்கடி நமது உணவுகளில் தவறாமல் பயன்படுத்துவது நல்லது.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : **Dr. M.குருபரன் & Dr. M. சபாபதி, Dr. M.சிவசக்தி, S/O. Dr. C.K.மாணிக்கவாசகம்**

P.B. NO. 30, No. 3, திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் DT 635601 ✆:04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 600 010. ✆ : 044-6424285, 6427638.

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் காலை 10.00-1.00 P.M. மாலை 5.00-7.00 P.M.

குறிப்பு : சென்னை,வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **"எளிய முறையில் மீண் ஆக்கும் தெய்வீக மூலிகைகள்"** என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ. 70/- ல் இயற்கை உணவுகளின் மேன்மைகள், அரிய உண்மைகள் அடங்கிய **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ. 60/- தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7& 8 ந் தேதி – மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை "The South Indian Concerns Ltd." 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

9 ந் தேதி – பெங்களூர் : காலை 11 to 1 ஹோட்டல் பிரார்டே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பே கவுடா ரோட் ✆ : : 266374

18 & 19-ந் தேதி–புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை, South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆:5717126,5723651

நீங்கள் கேட்டவை - தராசு

'ஜெ' குணமறிந்தும் 'சோ' உதவலாமா?

● பி.எம்.வள்ளி, அரசரடி

? தமிழ் தேசிய மீட்புப்படை, தமிழர் விடுதலைப்படை ஆகிய இரு அமைப்புகளையும் தடை செய்ய மத்திய அரசுக்கு முதல்வர் கடிதம் எழுதியுள்ளாராமே?

! தாமதமான நடவடிக்கை என்றாலும் பாராட்ட வேண்டிய ஒன்று. தேர்தல் நேர ஸ்டண்ட் என்று உமியை மெல்லும் எதிர்க் கட்சிக்காரர்கள். இப்படியொரு நடவடிக்கை எடுக்கா விட்டாலும் அவலாக மெல்லுவார்கள். அதுதானே அரசியல்.

● இரா. கல்யாணசுந்தரம், மதுரை - 9

? கர்னாடக அமைச்சரின் பேச்சும் பிறகு அவரது ராஜினாமாவும் உணர்த்துவது என்ன...?

! 642ஆம் நெம்பர் திருக்குறளை :

ஆக்கமும் கேடும் அதனால் வருவதால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.


தாக்குதல்...


... தாம்!

● எம். இராஜேந்திரன், லால்குடி

? குஜராத் பூகம்பம் மத்திய அரசு பட்ஜெட்டை எந்தெந்த விதத்தில் பாதிக்கும்...?

! ஒன்று : இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டில் குஜராத் முக்கிய பங்கு வகித்தது. பூகம்பத்தால் இது நலிவடையும்போது பட்ஜெட்டில் அதன் பாதிப்பு இருக்கும். இரண்டு : குஜராத்தின் புனர் நிர்மாணத்துக்கு மத்திய அரசு ஏராளமாக செலவு செய்ய வேண்டியிருப்பதால் அதன் பின் விளைவும் பட்ஜெட்டில் வரி விதிப்பாக எதிரொலிக்கும்.

● கல்லார் ரஹ்மத், நாகை - 1

? ஜெயலலிதா கலைஞரைத் தாக்கிப் பேசுவது; கலைஞர் ஜெயலலிதாவைத் தாக்கிப் பேசுவது - ஒப்பிடவும்...

! அட்டாக் நம்பர் ஒன் : இதயத்தில் ஊசி; அட்டாக் நம்பர் டூ : வாழைப் பழத்தில் ஊசி.

● த. சத்தியநாராயணன், அயன்புரம்

? பாகிஸ்தான் அதிபர் குஜராத் பூகம்ப இழப்புக்கு இரங்கல் தெரிவித்தது குறித்து...?

! பிரதமருடன் அவர் தொலைபேசியில் பேசினார் என்று இந்தியா சொல்வதும்; இல்லையில்லை, வாஜ்பாய்தான் முஷ்ரஃபை போனில் அழைத்தார் என்று பாகிஸ்தான் மறுப்பதும்... துக்கம் விசாரிப்பதில்கூட கௌரவப் பிரச்னை. கேவலமாக இருக்கிறது போங்கள்!


கௌரவப் பிரச்னை!

● எஸ்.குற்றாலம், ஆழ்வார்க்குறிச்சி


? வீரப்பனைப் பற்றி லேட்டஸ்ட் நியூஸ்...

! அதான் STF மீது அம்மா நாளுக்கொரு புதிய அவதூறு அறிக்கை விடறாங்களே, பத்தாதா..?

● க. பூங்கொடி, சித்தோடு

? "கருணாநிதி எனக்கு அண்ணன், ஜெயலலிதா தங்கை" என்றும், "அண்ணனைவிட தங்கை அதிகமாக சிந்திக்கிறார்" என்றும் அப்துல் லத்தீஃப் சொல்கிறாரே?

! இருவரையும்விட மிகக் குறைவாகச் சிந்திப்பவர் லத்தீஃப் என்று நிரூபிக்கிறார்.


'சகோதர' சிந்தனை!

❑ ரூ.50 பரிசு பெறுபவர் :
கன்னி சுப்பிரமணியன்,
215, பவானி மெயின் ரோடு,
அசோகபுரம், ஈரோடு - 4

★ ரூ. 25 பரிசு பெறுபவர் :
மா. சந்திரசேகர்,
மேட்டுமகாதானபுரம் (அஞ்),
லாலாபேட்டை (வழி), கரூர் - 639 105

● **அ. சீனிவாசன், சென்னை - 78**

? பூகம்ப நிவாரண நிதிக்கு சட்டமன்ற - மக்களவை உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நன்கொடை வழங்குவது எந்த விதத்தில் நியாயம்...?

! தொகுதி மேம்பாட்டு நிதி, முறையாக தொகுதியின் மேம்பாட்டுக்குத் தான் பயனாகிறது என்ற உத்தரவாதமே இல்லை; அவ்வாறிருக்க, அதில் ஒரு பகுதி குஜராத் நிவாரணத்துக்குச் செல்வது எவ்வளவோ மேல்.



● முடிவே முக்கியம்!

● **ஆர். அப்துல் சலாம், திருச்சி - 20**

? தேர்தல் கூட்டணி பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்கிறாரே மூப்பனார்...?

! தேர்தல் கூட்டணி என்ன தேங்காய் பட்டாணியா, உடனே தாளித்துக் கொட்ட...? போயஸ் பக்கம் பார்க்கணும், ஜன்பத் சாலையிலும் ஒரு கண் இருக்கணும். ரேஸ் டிராக் வேறு சேறும் சகதியுமா குழம்பியிருக்கு! நிதானம் காட்டினால் பாதகமில்லை; கடைசியில் எடுக்கிற முடிவு சரியானதாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.

● **என். தாமோதரன், சேலம் - 7**

? 'சினிமாவில் என் வாழ்க்கையை வீணடித்து விட்டேன்' என்று இளையராஜா இப்போது புலம்பியிருப்பது பற்றி...?

! காலம் கடந்துவிடவில்லை. இப்போதுகூட அவர் வேறு எதை சாதிக்க விரும்புகிறாரோ, அதில் முழு மூச்சுடன் ஈடுபட்டு வெற்றிகாண வாய்ப்பு உள்ளதே. ஆக, பெருமூச்சு எதற்கு?



● 'வீண்' கவலை!

● **என். பாலகிருஷ்ணன், மதுரை - 1**

? குஜராத்துக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பிய பாகிஸ்தானின் செயல் குறித்து...?

! மனித நேய அடிப்படையில் இது வரவேற்கத்தக்கதுதான். இப்படி மனிதாபிமானம் காட்டிவிட்டு 'இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் வந்தால், பிணங்கள்தான் திரும்பிப் போகும்' என்று கொம்பு சீவுவதை அனுமதிப்பதுதான் தாங்க முடியவில்லை.



● மனமிருந்தும்...

● **மா. சந்திரசேகர், கரூர் ★**

? ஜெயலலிதாவின் குணம் அறிந்தும் சோ அவருக்கு உதவலாமா...?

! உதவி கேட்டு வந்துவிட்டால் மறுக்க முடியாத அளவுக்குச் சிலர் இளகிய மனம் படைத்தவர்களாயிருக்கிறார்கள்; அல்லது உச்சி குளிர்ந்து போகிறார்கள்.

● **கன்னி சுப்பிரமணியன், ஈரோடு - 4 ❑**

? பாதிக்கப்பட்ட குஜராத் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற மனம் இருந்தும் உதவ முடியவில்லையே என்று வருத்தப்படும் ஏழை மக்களின் நிலைபற்றி...?

! பூட் பாலிஷ் போட்டும், வடை சுட்டு விற்றும், சைக்கிளுக்குக் காற்று அடித்தும் காய்கறி விற்றும் பூகம்ப நிவாரண நிதி திரட்டியவர்களும் இருக்கிறார்கள்.

● **மு. இராமசாமி, வயலூர்**

? குமுதம் பால்யூ பற்றி...?

! அவர் இப்போது விகடன் பால்யூ!

● **ஆர். தங்கராஜ், திருப்பூர்**

? தற்கால இளைஞர்கள் நூலகம் செல்லத் தயங்குகிறார்களே...?

! சென்னையில் அமெரிக்க நூலகம் சென்று பாருங்கள். இன்னுர் பட்டாளம் படிப்பதும் எழுதுவதும் ஆன்லைனில் தகவல் சேகரிப்பதுமாக பரபரப்பாக இருப்பார்கள். இளைஞர்கள் நூலகம் செல்லத் தயங்குவதில்லை. அவர்கள் செல்லத் தயங்கும் நிலையில் பல நூலகங்கள் இருக்கின்றன என்பதே உண்மை.

சுநந்தா நாராயணன். சென்னை அண்ணா யுனிவர்சிடியில் 'எம்சிஏ' பட்டம் பெற்ற கம்ப்யூட்டர் சயன்ஸ் மாணவி. அமெரிக்காவில் 'எம்ஐடி' எனப்படும் மாஸசூஸட்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜியின் ஸ்லோன் பிஸ்னஸ் ஸ்கூலில் படித்துக் கொண்டிருப்பவர். தம் சக மாணவிகளோடு சேர்ந்து 'பூலியோ' என்ற கம்பெனியைச் சமீபத்தில் ஆரம்பித்து நிர்வகிப்பவர். ('பூலியோ' என்றால் கிரேக்க மொழியில் 'நான் முடிவு செய்கிறேன்' என்று அர்த்தமாம்!).

இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மானேஜ்மெண்ட் (ஐஐஎம்), கல்கத்தா நடத்திய 'பிஸினஸ் ஆலோசனை'ப் போட்டியில் முதல் பரிசான பத்து லட்சம் ரூபாயைத் தட்டிச் சென்றிருக்கிறார் சுநந்தா என்பதுதான் நமக்கு வேண்டிய விஷயம்.



அம்மாடியோவ், ஒரு ஐடியாவுக்கு 10 லட்சமா?

"'ஐஐஎம்'இன் அறிவிப்பைத் தற்செயலாகத்தான் பார்த்தேன். சாதாரணமாக ஹார்வர்ட், ஸ்டான்ஃபோர்டு போன்ற அமெரிக்க பிஸினஸ் ஸ்கூல்கள் இந்த மாதிரிப் போட்டிகளை நடத்துவதுண்டு. அதாவது, லாபகரமான பிஸினஸ் ஐடியாக்களை வரவேற்று, போட்டி நடத்தி, சிறந்த ஐடியாவுக்கு ஐம்பதாயிரம் டாலர்கள் பரிசாகக் கொடுத்து, ஜெயித்தவரை ஒரு பெரிய விழாவில் கௌரவிப்பார்கள். இந்த விழாவில் பெரிய பெரிய தொழிலதிபர்கள் எல்லாம் கலந்து கொண்டு அந்த ஐடியாவை வைத்துத் தொழில் ஆரம்பிக்க, 'நான், நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு முந்துவார்கள்.

"இந்த மாதிரியான ஒரு போட்டியை கல்கத்தாவின் 'ஐஐஎம்' நடத்துகிறது என்று படித்தவுடன் சந்தோஷமாகி விட்டது. என் கம்பெனி சகாக்களான என் ஸ்நேகிதிகளிடம் சொன்னேன். அவர்களும் ஆர்வமாகிவிட்டார்கள்.

"எங்கள் இன்ஸ்டிட்யூட்டில் படிக்கும் மாணவ, மாணவிகள், கோர்ஸின் ஒரு பகுதியாக, மூன்று மாத 'இன்டர்ன்ஷிப்' பண்ண வேண்டும். அப்படி நாங்கள் பண்ணுகிற காலத்தில் ஒரு கம்ப்யூட்டர் சாஃப்ட்வேரை உருவாக்கி இருந்தோம்.

"அந்த சாஃப்ட்வேர் என்னவென்றால்... ஒவ்வொரு நிறுவனமும் தங்கள் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் கொடுத்திருக்கும் எண்ணற்ற ஃபோன், இன்டர்நெட், ஈமெயில், செல்லுலர் வசதிகளுக்கான பில்களில் எத்தனையோ குளறுபடிகள் இருக்கின்றன. உதாரணமாக, சென்னை - பெங்களூர் 'கால்' ஒன்றுக்கு 15 ரூபாய் கட்டணம் வசூலிப்போம் என்று நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள் ஃபோன் கம்பெனிக்காரர்கள். ஆனால் பில்லில் 40 ரூபாய் என்று போட்டுவிடுவார்கள். இந்த மாதிரி பில்கள் எல்லாம் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஒரு தடிப் புத்தகம் வடிவில் வரும். அதைச் சரி பார்க்க எந்த நிறுவனத்துக்கும் நேரமோ ஆட்களோ இருப்பதில்லை. ஆகையால் பில்லை அப்படியே கண்ணை மூடிக் கொண்டு செட்டில் பண்ணிவிடுவார்கள். இதனால் ஒவ்வொரு நிறுவனமும்




• பத்து லட்சம் காசோலை...

இழக்கும் தொகை கோடிக்கணக்கான டாலர்கள். இந்த நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக, பிரத்யேகமாக ஒரு சாஃப்ட்வேரை உருவாக்கி இருந்தோம், இன்டர்ன்ஷிப் செய்யும்போது. அறிவிப்பைப் பார்த்தவுடன் சாஃப்ட்வேர் ஐடியாவைப் போட்டிக்கு அனுப்பினால் என்ன என்று எல்லோருக்கும் தோன்றியது. உடனே ஒரு தீஸிஸ் கட்டுரையைத் தயார் செய்து அனுப்பினோம். அனுப்பிய கையோடு வேலை மும்முரத்தில் அதைப் பற்றி மறந்தும் போனோம்.

"திடீரென்று டிசம்பர் மாதம் ஒரு கடிதம் வந்தது. 'ஐஐஎம்'இலிருந்து. போட்டிக்கு வந்த 700 ஐடியாக்களுள் செலக்ட் ஆன 200-ல் எங்களுடையதும் ஒன்று என்று. பரபரப்பாகிவிட்டது. பரபரப்பு அடங்குவதற்குள் ஜனவரி பன்னிரண்டாம் தேதி இன்னொரு ஃபோன்கால். 'இறுதிச் சுற்றுக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் இருபது டீம்களில் உங்களுடைய குழுவும் ஒன்று, உடனே புறப்பட்டு வரவும்' என்று.

"ஒரே குஷியாகிவிட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, தோழிகளுக்கு விசா



பிரச்னை. என்னிடம் இந்திய பாஸ்போர்ட் இருந்ததால் பிரச்னை இல்லை. சாஃப்ட்வேர் தயாரித்த, நான்கு பேர் கொண்ட குழுவை நான் ஒருத்தி மட்டும் ரெப்ரசென்ட் பண்ண முடியுமா என்று மனம் சஞ்சலப்பட்டாலும் தன்னம்பிக்கையுடன் கிளம்பிவிட்டேன்.

"போட்டியின் நடுவர்கள் எல்லாம் பெரிய பெரிய தொழிலதிபர்கள். முதலீடு செய்யும் மெகா இன்வெஸ்டர்கள். அமெரிக்கா ஸிலிகான் வேலியிலிருந்து வந்திருக்கும் முதலீட்டாளர்கள். மோட்டரோலா, பிரைஸ் வாட்டர் ஹவுஸ் போன்ற சர்வதேச நிறுவனங்களின் அதிகாரிகள்.

கேள்விகளால் குடைந்தெடுத்துவிட்டார்கள். அதுவும், எல்லாம் எதிர்மறைக் கேள்விகள். 'உங்கள் ஐடியா எந்த அளவுக்கு பிஸினஸில் சாத்தியம்? நீங்கள் தயாரிக்கும் சாஃப்ட்வேர் நீங்கள் நினைக்கிற அளவுக்கு விற்பனை ஆகாவிட்டால் என்ன செய்வீர்கள்? நீங்கள் வைக்கிற விலைக்கு அதை வாங்க வாடிக்கையாளர்கள் முன் வருவார்கள் என்பது என்ன நிச்சயம்?' என்ற ரீதியில் ஒரே நெகடிவ் கேள்விகள்.

"ஃபைனல் ரவுண்டுக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்த ஆறு டீம்களின் பிரசண்டேஷனும் முடிந்தது. என்னை மட்டும் கூப்பிட்டு 'நீ நாளைக்கும் இருக்க வேண்டியிருக்கும்' என்று சொன்னார்கள். அப்பொழுது கூட எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

அடுத்த நாள் காலை எனக்குத் தான் முதல் பரிசு என்று அறிவித்த பொழுது என்னால் நம்பவே முடியவில்லை. சந்தோஷத்தின் உச்சிக்கே போய்விட்டேன். என்னுடைய பிரசண்டேஷனில், ஐடியா தெளிவாக இருந்ததாகவும், விஷுவல் ஸ்லைடுகள் நேர்த்தியாக இருந்ததாகவும் என் பேச்சில் தன்னம்பிக்கை கூர்மையாக வெளிப்பட்டதாகவும் விளக்கம் சொன்னார்கள்.

"மறுநாள் காலை எனக்கு முதல் பரிசு கிடைத்த விஷயத்தைப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தபோது, 'எங்களுக்கு நேற்றே தெரியும், ஆனால் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள்' என்றார்கள்!

"பத்து லட்சம் ரூபாய் கிடைத்துவிட்டது. ஐடியாவை உடனடியாகச் செயல்படுத்தத் துவங்குவீர்களா?" என்று கேட்டோம் சுநந்தாவை.

"எங்கள் திட்டத்துக்குத் தேவை 2 மில்லியன் டாலர்கள். அமெரிக்காவில் 'ஆஸ்ட்ரல் சிஸ்டம் கம்பெனி'யின் அதிபர் தேவ் முகர்ஜி, கல்கத்தாக்காரர். அவரும் இன்னும் இரண்டு முதலீட்டாளர்களும் எங்கள் திட்டத்துக்கு உதவுவதாகச் சொல்லியிருக்கிறார்கள்!" என்றார் உற்சாகத்தோடு.

ஐந்தே நாட்களுக்குள் அமெரிக்காவிலிருந்து வந்து போட்டியில் பங்கு கொண்டு முதல் பரிசும் பெற்று பாஸ்டனுக்குப் பறந்துவிட்டார் சுநந்தா நாராயணன், கனமான மார்பின் டிராஃபியுடன்!

சந்திப்பு : **சித்தார்த்**
படம் : **வெங்கடேஷ்**



''மாட்ச்–ஃபிக்ஸிங்' புண்ணியத்தால் கிரிக்கெட்டின் கவர்ச்சி குறையவும் டி.என்.டி.ஏ. (தமிழ்நாடு டென்னிஸ் அசோசியேஷன்) ஸ்தாபனம் 'கோல்டு ஃபிளேக்ஸ்' போன்ற பெரிய ஸ்பான்சர்களைப் பிடித்து சர்வதேச டூர்ணமென்ட்டுகளைச் சென்னைக்குக் கொண்டு வரவும், டென்னிசுக்கு சென்னையில் மவுசு அதிகரித்து விட்டது!'' என்கிறார் டி.என்.டி.ஏ.வின் டைரக்டர் ஹிதேன் ஜோஷி.

''குழந்தைகளின் 'கோ–கரிகுலர் ஆக்டிவிடி'யாக டென்னிஸைத் தேர்ந்தெடுத்து, பயிற்சியைப் பற்றி விசாரிக்க என்னிடம் வரும் தாய்மார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுவதே இதற்குச் சாட்சி!'' என்கிறார் பெருமையாக.

அப்படிப்பட்ட தாய்மார்களின் சார்பாக ஜோஷியிடம் சில அடிப்படைச் சந்தேகங்களைக் கேட்கிறார் இளம் டென்னிஸ் ப்ளேயர் சித்தார்த்.

சித் : டென்னிஸ் பயிற்சியை ஆரம்பிக்கச் சரியான வயது எது?

ஜோஷி : ஏழு வயது.

சில சென்டர்களில் ஐந்து வயது குழந்தைகளை எடுத்துக் கொள்கிறார்கள், உண்மை. ஆனால் என்னைப் பொறுத்தவரை ஏழுதான் சரியான வயது என்று உறுதியாகச் சொல்வேன். இதற்கு இரண்டு காரணங்கள்.



• ஜோஷி

1. பயிற்சியைத் தொடங்கும் அளவிற்கு குழந்தையின் உடம்பில் பலம் சேருவது ஏழு வயதில்தான்.

2. டென்னிஸ் என்பது ஓட்டப் பந்தயம் அல்லது நீச்சல் போன்ற விளையாட்டு அல்ல. அந்த விளையாட்டுகளில் நாம் நம்முடைய உடம்பை மட்டுமே உபயோகிக்கத் தெரிந்தால் போதும். ஆனால் டென்னிஸ் என்பது ஒரு சாதனத்தை, 'ரேக்கட்'ஐ உபயோகப்படுத்தும் ஒரு விளையாட்டு. இன்னொரு சாதனத்தைக் கையாண்டு ஒரு குழந்தை விளையாட வேண்டும் என்றால் அதற்கு ஒரு குறிப்பிட்ட மன முதிர்ச்சி வேண்டும். அந்த முதிர்ச்சி குறைந்தது ஏழு வயதில்தான் ஏற்படுகின்றது.

ஐந்து வயது குழந்தை 'எனக்குக் கற்றுக் கொடுங்கள்' என்று ஆர்வமாய்க் கேட்டால் கூட, அதன் கையில் ஒரு ரேக்கட்டைக் கொடுத்து பந்தைத் தட்டிக் கொண்டிருக்கச் சொல்லலாமே தவிர கட்டுக்கோப்பான பயிற்சியை அதன் மேல் திணிக்கக் கூடாது.

சித் : ஆரம்பத்தில் ஒரு குழந்தை, சராசரி ஒரு வாரத்துக்கு எத்தனை மணி நேரங்களை பயிற்சியில் செலவிட வேண்டியிருக்கும்?

ஜோஷி : ஆரம்பத்தில் ஒரு நாளுக்கு ஒரு மணி நேரம் விகிதம் வாரத்துக்கு மூன்று நாட்கள்தான் பயிற்சி கொடுப்போம். இது முதல் ஸ்டேஜ்.

விளையாட்டின் அடிப்படைகளை ஓரளவு குழந்தை புரிந்து கொண்டு விடுவது இரண்டாவது ஸ்டேஜ். அப்பொழுது, வாரத்துக்கு நான்கு நாட்கள்.

அடிப்படைகளில் நன்கு தேர்ந்து டென்னிஸை ஒரு முழு விளையாட்டாக குழந்தை என்ஜாய் பண்ண ஆரம்பிப்பது மூன்றாவது ஸ்டேஜ். அப்பொழுது, வாரத்துக்கு ஐந்து நாட்கள்.

ஒவ்வொரு ஸ்டேஜையும் தாண்ட மாதக் கணக்கு ஆகலாம்; அல்லது வருடக் கணக்காகலாம். அது ஒவ்வொரு குழந்தையின் ஆர்வத்தையும் திறமையையும் உடல் பலத்தையும் பொறுத்த விஷயம். போகப் போக, 'ஒரு வாரத்துக்கு இத்தனை நாள்' என்கிற நாள் கணக்கைத்தான் கூட்டுவோமே தவிர,




• சித்தார்த்

சாமானியத்தில், 'ஒரு நாளுக்கு இத்தனை மணி நேரம்' என்கிற மணிக்கணக்கைக் கூட்ட மாட்டோம். குழந்தைக்கு வயதும் போதிய சக்தியும் வந்து விட்டது என்ற நிலையில் மட்டுமே அதில் கை வைப்போம்.

சித்: இப்படி ஒரு பயிற்சியில் குழந்தையை ஈடுபடுத்தும் போது படிக்கும் நேரம் குறைந்து விடுகிறது என்று தாய்மார்கள் கவலைப்படுகிறார்களே...

ஜோஷி : நம்முடைய சீதோஷ்ண நிலைப்படி டென்னிஸ் விளையாட சிறந்த நேரம் காலை 6.00 – 7.00 மணி. பள்ளிக்கூட வேலைகளில் குறுக்கிடாத நேரம் இது. அதோடு, குழந்தையை டிரெயினிங் சென்டருக்கு அழைத்துக் கொண்டு போகவும் வரவும் சௌகரியமான, டிராஃபிக் குறைச்சலான நேரம். பிறகு என்ன பிரச்னை? இதுவே ஐரோப்பாவை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே டென்னிஸ் விளையாட உகந்த நேரம் என்ன தெரியுமா? காலை 9.00 மணியும் இரவு 10.00 மணியும். அவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்துச் சந்தோஷப்படுங்கள்.



படிக்கும் நேரம் குறைகிறது என்று கவலைப்படும் தாய்மார்களுக்கு ஒரு வார்த்தை. தயவுசெய்து குழந்தைகளைப் புத்தகப் புழுக்களாக உருவாக்காதீர்கள். அவர்களுடைய ஆல்-ரவுண்டு வளர்ச்சி முக்கியம். ஒரு குழந்தைக்கு ஏழு விதமான அறிவு தேவை. அதில் புத்தக அறிவு என்பது ஒன்றுதான். சரி, உங்களுடைய வழிக்கே வருகிறேன். இதைப் போன்ற உடற்பயிற்சியில் ஈடுபடும் குழந்தைகள்தான் படிப்பிலும் சுட்டிகையாக இருக்கிறார்கள் தெரியுமா? இந்தப் பயிற்சி அவர்களுடைய நினைவாற்றலை, 'கான்ஸன்ட்ரேஷன் பவர்'ஐ, 'அலர்ட்னஸ்'ஐ நேரடியாக அதிகப்படுத்துகிறது. இது நான் நடைமுறையில் பார்த்த உண்மை.

சித் : கோச்சிங் ஃபீஸ் எப்படி?

ஜோஷி: ஃபீஸ் என்பது சென்டருக்கு சென்டர் வேறுபடும். தோராயமாக, வாரத்துக்கு மூன்று நாட்கள் என்றால் மாதம் ரூ 330

டென்னிஸைக் காதலிக்கிறீர்களா?




ஆகும். இதுவே படிப்படியாக அதிகரித்து வாரத்துக்கு ஆறு நாட்கள் என்று வரும் பொழுது மாதம் ரூ 550 ஆகிவிடும். ப்ரொஃபெஷனல் லெவல்களில் பயிற்சி கொடுக்கும்பொழுது, மாதம் மூவாயிரத்தி ஐந்நூறு ரூபாய் வரை போகலாம்.

சித் : ரேக்கட் போன்ற சாதனங்களுக்கு அதிகமாகச் செலவழிக்க வேண்டுமா?

ஜோஷி : இதுவும் கோச்சிங் ஃபீஸ் மாதிரி தான். பயிற்சியை ஆரம்பிக்கும் குழந்தைக்கு முந்நூறு ரூபாயிலிருந்து நானூறு ரூபாய் மதிப்புள்ள ரேக்கட் வாங்கினால் போதும். விளையாட்டில் அதனுடைய தேர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க ரேக்கட்டுகளை மாற்ற வேண்டி வரும். அப்போது ரேக்கட்டின் விலையும் கூடும்.

சித் : பயிற்சியைத் தொடங்கும்போது நீங்கள் கற்றுக் கொடுக்கும் விஷயங்கள் என்ன?

ஜோஷி : ரேக்கெட்டைப் பிடித்துக் கொள்வது எப்படி, ரேக்கெட்டைப் பிடித்துக் கொள்ளும்போது கிரிப் எப்படி இருக்க வேண்டும், பந்தை அடிக்கும்போது ரேக்கெட்டை எப்படி வீச வேண்டும், ஃபுட்-வர்க்- அதாவது கால்கள் எப்படிச் செயல்பட வேண்டும், கோர்ட்டில் நம்முடைய மூவ்மெண்ட் எப்படி இருக்க வேண்டும் போன்ற அடிப்படை விஷயங்களோடுதான் பயிற்சியை ஆரம்பிக்கிறோம்.



சித் : டென்னிஸ் பயிற்சியை எடுத்துக் கொள்ளும் போது கூடுதல் உடற்பயிற்சிகள் செய்ய வேண்டுமா?

ஜோஷி : விளையாட்டை முழுமையாக கற்கும் வரை எந்தவிதமான உடற்பயிற்சிகளும் தேவைப்படாது. அதற்குப் பிறகு ஜாகிங், ஸ்கிப்பிங் போன்ற இயற்கையான உடற்பயிற்சிகளைச் செய்யச் சொல்வோம், அவ்வளவுதான். ப்ரொஃபெஷனல் லெவலுக்கு வரும் பொழுதுதான் ஸ்ட்ரெச்சிங் போன்ற ஸ்பெஷல் உடற்பயிற்சிகள் செய்யவேண்டி வரும். பொதுவாக பாஸ்கெட்பால் அல்லது ஃபுட்பால் விளையாட்டில் ஆர்வம் உள்ள குழந்தைகள் நல்ல டென்னிஸ் வீரர்களாக உருவாகிறார்கள். காரணம், அந்த விளையாட்டுக்கள் 'ball sense'ஐ அதிகப்படுத்தி விடுகின்றன. பந்தை எப்படி அடித்தால் அது எங்கே போகும் என்று தெரிந்து கொள்வதுதான் 'ball sense.' அதனால் டென்னிஸ் பயிற்சி எடுத்துக் கொள்ளும் குழந்தைகளிடம் "பள்ளியிலோ அல்லது உங்கள் காலனிகளிலோ நேரம் கிடைக்கும் பொழுது இந்த இரண்டு விளையாட்டுக்களை விளையாடுங்கள். அதுவே ஒரு சிறந்த உடற்பயிற்சி!" என்று நாங்கள் சொல்வதுண்டு.


சித் : 'ஸ்டாமினா', அதாவது உடல் பலம் ரொம்ப அதிகமாகத் தேவைப்படுமோ?

ஜோஷி : எதுக்குத்தான் ஸ்டாமினா தேவையில்லை, சொல்லுங்கள்! படிப்பதற்குக் கூடத்தான் ஸ்டாமினா வேண்டும்!

ஒரு ஆரோக்கியமான குழந்தைக்கு எவ்வளவு ஸ்டாமினா இருக்குமோ அந்த அளவு ஸ்டாமினா இருந்தால் போதும், பயிற்சியை ஆரம்பிக்க. அதை அடிப்படையாக வைத்து மேற்கொண்டு எப்படி உடல் பலத்தை அதிகரிப்பது என்பதை நாங்கள் பார்த்துக் கொள்வோம், கவலைப்படாதீர்கள்.

சித் : சிறுவனோ சிறுமியோ நல்ல பயிற்சியைப் பெற்று விட்டார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து என்ன?

ஜோஷி : இப்போது அவர்களின் ஆர்வத்தை ஆராய்வோம். ஒரு பொழுதுபோக்காகவோ, வெறும் உடற்பயிற்சியாகவோ

அல்லது கூடுதல் தகுதி பெறவோ மட்டும் டென்னிஸ் ஆடினால் போதும் என்று அவர்கள் நினைத்தால் எங்கள் மேற்பார்வையில் எங்கள் பள்ளி வளாகத்துக்கு வந்து அவர்கள் தொடர்ந்து விளையாடலாம் என்று சொல்லி, பயிற்சியை முடித்துக் கொள்வோம்.

போட்டிகளில் விளையாட வேண்டும் என்று அவர்கள் விரும்பினால் முதலில் பயிற்சி நேரத்தைக் கூட்டுவோம். பயிற்சி முறைகளைக் கடுமையாக்குவோம். பலன் திருப்தியாக இருந்தால், அவர்களுடைய வயதைப் பொறுத்து, அவர்களின் ஆர்வத்தைப் பொறுத்து, உள்ளூர் டூர்ணமெண்ட்டுகளில் ஆட வைப்போம். உள்ளூர் டூர்ணமெண்ட்டுகளைப் பற்றிய தகவல்கள் டிரெயினிங் சென்ட்டர்களுக்கு வந்து கொண்டே இருக்கும். அதனால் 'என்ட்ரி ஃபார்ம்'களை அனுப்புவதில் பிரச்னை இல்லை.

சித்: உள்ளூர் டூர்ணமெண்ட்டுகளில் நன்றாக விளையாடி டென்னிஸைத் தொழிலாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் வந்து விட்டால்...

ஜோஷி : நிறைய டூர்ணமெண்ட்டுகள் ஆட வேண்டும். அதற்கு ஏற்றபடி பயிற்சி நேரம் அதிகரிக்கும். வாழ்க்கை முறையே மாறும். பலன், படிப்பு• என்று வரும்போது அடிப்படைக் கல்வி மட்டுமே சாத்தியம். அதனால் ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசித்து முடிவெடுங்கள்.

இதே பிரச்னைக்கு இன்னொரு கோணம் உண்டு. "படிப்பெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான் பெரிய டென்னிஸ் வீரரானால் போதும்!" என்று சில சிறுவர்கள் ஆர்வக் கோளாறினால் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். இதுவும் தவறு. டென்னிஸ் என்பது ஒரு குறிப்பிட்ட வயது வரைதான். அதற்குப் பிறகு வாழ்க்கையைத் தொடர வேண்டாமா? அதற்கு அடிப்படைக் கல்வி அவசியம் வேண்டும்!

சித் : டென்னிஸைத் தொழிலாக எடுத்துக் கொள்ள விரும்பும் சிறுவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ஜோஷி : நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுத்தவன் என்கிற முறையில் சொல்லுகிறேன். பெரிய டென்னிஸ் வீரராக வரவேண்டும் என்றால் மூன்று விஷயங்களை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்...

1. நல்ல அஸ்திவாரம் என்பது மிகவும் முக்கியம். இதற்கு நல்ல பயிற்சி மையத்தைத் தேர்ந்தெடுங்கள்.

2. அயராது பயிற்சி செய்யுங்கள். 'கோர்ட்'டில் எத்தனை மணி நேரம் விளையாடுகிறோம் என்பது முக்கியமல்ல. எப்படி விளையாடுகிறோம் என்பதுதான் முக்கியம். எவ்வளவு ஈடுபாட்டோடு விளையாடுகிறோம், என்பதுதான் பிரதானம். கோர்ட்டில் நான்கு மணி நேரம் இருந்தேன் என்று சொல்வதை விட, கவனத்தைச் சிதற விடாமல் மனத்தை விளையாட்டில் ஒருமுகப்படுத்தி ஒரு மணி நேரம் விளையாடினேன் என்று சொல்வதைப் பெருமையாக நினையுங்கள்.

3. பயிற்சி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நல்ல டூர்ணமெண்ட்டுகளைப் பார்ப்பது. ஒரு டூர்ணமெண்ட்டை உன்னிப்பாக கவனித்தாலே எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இவை மூன்றையும் செய்து பெற்றோர்களிடமும் 'கோச்'சிடமும் நல்ல பெயர் வாங்கி விட்டீர்களா?

டென்னிஸை தொழிலாக எடுத்துக் கொள்ளும் பெரிய முடிவுக்குப் போவதற்கு முன்னால் இன்னும் ஒரு கேள்வி பாக்கியிருக்கிறது. அது, "டென்னிஸை நீங்கள் காதலிக்கிறீர்களா?", "டென்னிஸ் என்றால் உங்களுக்கு ஒரு வெறி வருகிறதா?" என்பதுதான். இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் 'ஆம்' என்றால் நீங்கள் நிச்சயம் விம்பிள்டன் ப்ளேயர்தான்!

ஆல் தி பெஸ்ட்!

தொகுப்பு : **கிருஷ்**
படங்கள் : **ஸ்ரீஹரி**



ஐம்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

சகுனத் தடை

மரத்தடியில் ஒதுங்கி நின்ற படகைப் பார்த்ததும் வந்தியத்தேவன் அதிர்ஷ்ட தேவதை மறுபடியும் தன் பக்கம் வந்திருப்பதாக எண்ணி உற்சாகம் அடைந்தான். தனக்குப் படகோட்டத் தெரியாவிட்டாலும், கருத்திருமன் படகோட்டுவதையே தொழிலாகக் கொண்டவன். அவனுடைய உதவியுடன் படகைத் தள்ளிக்கொண்டு வடவாற்று நீரோட்டத்தோடு சென்றால், அந்த ஆற்று வெள்ளம் கோடிக்கரைக்குப் பாதி வழி வரையில் கொண்டு சேர்த்துவிடும்.

"பார்த்தாயா, கருத்திருமா! இந்தப் படகு ஆற்றில் அமிழாமல் மிதந்து வந்து நமக்காகவே காத்திருக்கிறது. உன்னுடைய படகோட்டும் திறமையைக் கொஞ்சம் காட்டினாயானால், பொழுது விடிவதற்குள் பாதி தூரம் போய்விடலாம். அப்புறம் குதிரை மேல் வருகிறவர்கள் கூட நம்மைப் பிடிக்க முடியாது!'' என்றான் வந்தியத்தேவன்.

கருத்திருமன் சிறிது சந்தேகக் கண்ணுடன் சுற்று முற்றும் பார்த்தான். மரத்துக்குப் பக்கத்தில் ஆற்றங்கரையில் மதில் சுவரோரமாக மண்டி வளர்ந்திருந்த புதர்களுக்கு மத்தியில் ஏதோ அசைவது போலத் தோன்றியது.

கருத்திருமன் ஒரு சிறிய கல்லைத்

அமரர் கல்கி

தூக்கிப் புதர்களுக்கு மத்தியில் எறிந்தான். அங்கிருந்து ஒரு பூனை துள்ளிப் பாய்ந்து வந்து பட-கில் ஏறிக் கொண்டது.

வந்தியத்தேவன் சிரித்துக்கொண்டே "படகோட்டி! என்னை விடப் பெரிய தைரியசாலியாயிருக்கிறாயே?" என்று சொல்லி, இன்னொரு சிறிய கல்லைத் தூக்கிப் படகுக்குள் விட்டெறிந்தான்.

பூனை மறுபடி படகிலிருந்து வெளியே துள்ளிப் பாய்ந்து இவர்களை நோக்கி ஓடி வந்து இரண்டு பேருக்கும் இடையில் புகுந்து ஓடியது.

இப்போது வந்தியத்தேவன் மிரண்டு இரண்டடி பின்னால் எடுத்து வைத்தான்.

"நீ ஒன்றும் என்னை விடத் தீரனாகத் தோன்றவில்லையே?" என்று ஏளனமாகக் கூறினான் கருத்திருமன்.

"எனக்குப் பூனை என்றால் பயம். அது என் மேலே பட்டாலே, உடம்பெல்லாம் மயிர்க்கூச்சு உண்டாகும். நல்லவேளை! அதுதான் போய்விட்டதே! வா, போகலாம்!" என்றான் வந்தியத்தேவன்.

"பூனை என் மேலே விழுந்தால்கூட எனக்குப் பயம் ஒன்றுமில்லை; ஆனால் குறுக்கே போனால்தான் பயம். சகுனத் தடை!" என்றான் கருத்திருமன்.

"சகுனமாவது, தடையாவது?" என்று சொல்லிக்கொண்டே வந்தியத்தேவன் கருத்திருமன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்ப் படகில் ஏறினான்.

கருத்திருமனும் படகின் ஒரு முனைக்குச் சென்று அதை மரங்களின்



வேர்களிலிருந்து தள்ளி விட முயன்றான்.

படகு சிறிது நகர்ந்ததோ, இல்லையோ, சடசடவென்று நாலு பேர் துள்ளிப் பாய்ந்து ஓடி



வந்து கண்மூடித் திறக்கும் நேரத்தில் படகில் ஏறிக்கொண்டார்கள்.

அவர்களில் இரண்டு பேர் வந்தியத்தேவன் மீது பாய்ந்து அவனைப் படகிற்குள்ளே தள்ளிப் படகின் குறுக்குச் சட்டங்களோடு சேர்த்துக்கட்டினார்கள்.

மற்ற இருவரும் வேல் பிடித்த கையுடன் கருத்திருமன் அருகில் சென்று இருபுறமும் காவலாக நின்றார்கள்.

வந்த நால்வரில் தலைவனாகத் தோன்றியவன் பாதாளச் சிறை வாசலிலிருந்து தங்களைத் தொடர்ந்து வந்த பருமனான மனிதன்தான் என்பதை வந்தியத்தேவன் கண்டுகொண்டான். சுரங்க வழியின் வாசலருகில் அவன் அதற்குள்ளே படகிலே வந்து காத்திருந்ததை எண்ணி வியந்தான். அவன் சாதாரண காவலன் அல்ல, மிகக் கைதேர்ந்த ஒற்றனாயிருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். அவன் யாராயிருக்கும், எங்கோ பார்த்த நினைவாக இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே அவனுடைய பேச்சுக் குரல் காதில் விழுந்தது.

கருத்திருமனைப் பார்த்து அக் காவலன் "அப்பனே! இத்தனை வருஷம் சிறையில் கழித்துவிட்டு வெளி வந்திருக்கிறாய். உடனே இந்தத் துன்மதியாளன் வார்த்தையைக் கேட்டு ஏன் ஓடப் பார்த்தாய்? போனாற் போகட்டும். உன்னை மறுபடியும் கட்டிப் போட மனமில்லை. நான் சொல்கிறதைக் கேட்டு அதன்படி செய்தாயானால் உனக்குத் தீங்கு ஒன்றும் நேராது!" என்றான்.

ஓடக்காரனும் "அப்படியே, ஐயா! முதன்மந்திரி எனக்கு விடுதலை அளிக்க ஆள் அனுப்பினார். ஆனால் இந்த மூடன் பேச்சைக் கேட்டு நான் கெட்டுப் போனேன். இனி நீங்கள் சொல்கிறபடி செய்கிறேன். இனி என்னைப் பாதாளச் சிறைக்கு மட்டும் மறுபடி அனுப்பி விடாதீர்கள்!" என்றான்.

"ஆமாம், ஆமாம்! முதன்மந்திரி உன்னிடம் சில விவரங்கள் கேட்க விரும்புகிறார். அவற்றை நீ உண்மையாகச் சொல்லிவிட்டால், உன்னைப் பாதாளச் சிறைக்கு அனுப்ப மாட்டார். வேண்டிய பொன்னும் மணியும் பொருளும் பரிசு கொடுத்து அனுப்புவார். நீங்கள் எங்கே போவதென்று புறப்பட்டீர்கள்?"

"ஈழ நாட்டுக்குப் போவதென்று புறப்பட்டோம்."

"அழகாயிருக்கிறது. முதன்மந்திரியை ஏமாற்றிவிட்டு, வேளாரின் காவலை மீறி விட்டு, அவ்வளவு தூரம் போய் விடலாம் என்று எண்ணினீர்களா? ஆனால் இந்த முரட்டு வாலிபன் அம்மாதிரி யோசனை சொல்லக்கூடியவன் தான். முன்னொரு தடவை, சின்னப் பழுவேட்டரையரின் காவலுக்குத் தப்பி ஓடியவன் அல்லவா? போகட்டும்; இப்போது படகை ஆற்று நீர் ஓட்டத்துக்கு எதிராகச் செலுத்த வேண்டும். என்னுடன் வந்தவர்களில் ஒருவனுக்குத் தான் படகு செலுத்தத் தெரியும். அவனும் கற்றுக்குட்டி. வரும்போது நாங்கள் நீரோட்டத்தோடு வந்தபடியால், தட்டுத் தடுமாறி வந்துவிட்டோம். இப்போது நீ கொஞ்சம் உன் கைவரிசையைக் காட்ட வேண்டும். அக்கரைக்குச் சமீபமாகப் போய் அங்கிருந்து வடக்குக் கோட்டை வாசலை நோக்கிப் படகைச் செலுத்து. பார்க்கலாம்!"

"அக்கரை சென்று அங்கிருந்து நடந்து போய்விடலாமே, ஐயா! நீரோட்டம் வெகுவேகமாகச் செல்கிறது. எதிர்முகமாக அதிக தூரம் படகு செலுத்துவது கஷ்டமாயிற்றே?"

"அக்கரையில் இறங்கினால் இந்த முரட்டு வாலிபன் மறுபடியும் ஏதாவது தகராறு செய்வான்! ஆகையால் ஆற்றோடுதான் மேலே போக வேண்டும்!" என்றான் காவலர் தலைவன்.

படகைக் கருத்திருமனும் மற்றொருவனும் தள்ளத் தொடங்கினார்கள்.

காவலர் தலைவன் வந்தியத்தேவனின் அருகில் வந்து, "அப்பனே! உன் வேலைத்தனத்தை மறுபடியும் காட்டப் பார்க்காதே!" என்றான்.

"ஐயா! என்னைப் பற்றி உமக்கு ரொம்பத் தெரியும் போலிருக்கிறதே!" என்றான் வந்தியத்தேவன்.

"ஏன் தெரியாது? வைத்தியர் மக

னைச் சிறையிலே உனக்குப் பதிலாக அடைத்துவிட்டு நீ வெளியிலே வந்ததைத்தான் பார்த்துக்கொண்டிருந்தேனே? அப்புறம் எங்களை ஏமாற்றி விட்டு ஓடிப் போகப் பார்த்தாய் நீ!''

வந்தியத்தேவன் மிக ஆச்சரியப் பட்டவனைப் போல், "ஐயா! என்னை விடக் கெட்டிக்காரர் தாங்கள்! பாதாளச் சிறையில் நடந்ததை ஒருவரும் கவனிக்கவில்லை என்று நினைத்தேன்!'' என்றான்.

''தம்பி! எங்கள் முதன்மந்திரியின் கண்களும் காதுகளும் எட்டாத இடம் சோழ சாம்ராஜ்யத்தில் எங்கும் இல்லை. அவை ஈழ நாட்டிலும் உண்டு; காஞ்சியிலும் உண்டு; கடம்பூர் மாளிகையிலும் உண்டு. பாதாளச் சிறையிலும் உண்டு. அந்த வைத்தியர் மகன் பினாகபாணி சுத்த மூடன் என்பது முதன்மந்திரிக்குத் தெரியும். அதனாலே தான், அவன் பின்னால் என்னையும் அனுப்பி வைத்தார்!''

''நான் இந்த வழியாக வெளியேறுவேன் என்பதும் முதன்மந்திரிக்குத் தெரிந்திருந்தது போலும். அவருடைய கண்களும் காதுகளும் அதிசயமானவைதான். அப்படியானால், நான் நிரபராதி என்பதும், என்னைப் பாதாளச் சிறையில் அடைத்தது தவறு என்பதும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?''

"அது முதன்மந்திரியின் பொறுப்பு அல்ல. நீ குற்றவாளியா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பது சக்கரவர்த்தியின் பொறுப்பு. நீ பாதாளச் சிறையிலிருந்து தப்ப முயன்றதற்குத் தண்டனை கொடுப்பது கொடும்பாளூர் பெரிய வேளாரின் பொறுப்பு!'' என்றான் காவலன்.

"ஐயா! என்னை இப்போது எங்கே கொண்டு போகிறீர்கள்?''

"முதலில் கொடும்பாளூர் வேளாரிடம் கொண்டு போகிறேன். அவர் வடக்குக் கோட்டை வாசலில் காத்திருக்கிறார்."

''எனக்காகவா பெரிய வேளார் காத்துக்கொண்டிருக்கிறார்?''

"ஆகா! உன் கர்வத்தைப் பார்! தென் திசை மாதண்ட நாயகரும் சோழ நாட்டுக் குறுநில மன்னர்களில் முதல் மரியாதைக்குரிய மன்னரும் சோழ குலத்தின் பரம்பரைத் துணைவரும் பாண்டிய குலத்தை வேரோடு களைந்தவரும் ஈழங் கொண்ட வீராதி வீரருமான கொடும்பாளூர் வேளார் சேனாதிபதி பூதி விக்கிரமகேசரி உனக்காகக் கோட்டை வாசலில் காத்துக் கொண்டிருப்பார் என்று நினைத்தாயா?''

''பின்னே, யாருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்?''

"பழுவேட்டரையர்களையும் மற்றும் திருப்புறம்பயத்தில் கூடியிருந்த சிற்றரசர்களையும் அழைத்துக்கொண்டு பார்த்திபேந்திரன் வருகிறான்..."


''பெரிய பழுவேட்டரையர் கூடவா?"

"ஆமாம்; அவர் கூடத்தான். இளவரசர் கரிகாலரின் மரணத்தைப் பற்றி அவருக்கு உண்மை தெரியுமாம். அவர் வந்த பிறகு சக்கரவர்த்தியின் முன்னிலையில் விசாரணை நடைபெறும். நீ குற்றவாளி அல்லவென்றால், அப்போது அதை நிரூபிக்க வேண்டும்.''

வந்தியத்தேவன் இதைக் கேட்டுப் பெருங் கவலையில் ஆழ்ந்தான். பழுவேட்டரையர்களும் பார்த்திபேந்திரனும் சேர்ந்து தன் பேரிலேதான் குற்றத்தைச் சுமத்துவார்கள். கடவுளே! அந்தக் குற்றச்சாட்டுடனே சக்கரவர்த்தியையும் இளவரசர் அருள்மொழிவர்மரையும் எப்படி நிமிர்ந்து பார்ப்பது? என்ன சாட்சியத்தைக் காட்டி நான் குற்றவாளி அல்லவென்று நிரூபிக்க முடியும்?

"ஐயா! நான் தங்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லையே? என்னைத் தப்பிப் போகும்படி விட்டு விடுங்கள்! உண்மையில் நான் குற்றவாளி அல்ல. காலமான இளவரசருக்கு அத்தியந்த நண்பனாயிருந்தவன். சந்தர்ப்பவசத்தினால் இத்தகைய பயங்கரக் குற்றம் சாட்டப்பட்டேன். தாங்கள் முதன்மந்திரியின் சேவகர். சிறையிலிருந்த பைத்தியக்காரனைக் கொண்டு வரும்படி தானே தங்களுக்கு முதன்மந்திரி கட்டளையிட்டார்? இவனை அழைத்துப் போங்கள்





"என்னை விட்டு விடுங்கள்! உங்களுக்குப் புண்ணியம் உண்டு!" என்று வந்தியத் தேவன் இரக்கமாகக் கேட்டான்.

"உன்னை விட்டு விட்டால் எனக்கு என்ன தருவாய்?" என்றான் காவலன்.

"பின்னால் சமயம் வரும்போது பதிலுக்குப் பதில் உதவி செய்வேன்."

"அப்படிச் சமயம் வரப் போவதுமில்லை; வந்தாலும் உன் உதவி எனக்குத் தேவையும் இல்லை. இப்போது உடனே என்ன தருவாய் என்று சொல்லு!"

வந்தியத்தேவனுக்கு அவனுடைய அரைக்கச்சில் கட்டிக் கொண்டிருந்த பொற்காசுகளின் நினைவு வந்தது.

"உம்முடைய இரண்டு கைகளும் நிறையும்படி பொற்காசுகள் தருவேன்."

"ஆகா! அப்படியா? பொற்காசுகளா? எங்கே காண்பி!" என்றான் காவலன்.

"கொஞ்சம் என் கட்டுக்களைத் தளர்த்தி விடு! அரைக்கச்சிலிருக்கிறது; எடுத்துக் காட்டுகிறேன்!" என்றான் வந்

தியத்தேவன்.

"மறுபடி உன் வேலைத்தனத்தை மட்டும் காட்டிவிடாதே!" என்று சொல்லிக்கொண்டே காவலன் குனிந்து வந்தியத்தேவனுடைய கட்டுக்களைச் சிறிது தளர்த்திவிட்டான்.

வந்தியத்தேவன் அந்தக் காவலனின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே அரைக் கச்சை அவிழ்த்துப் பொற்காசுகளை எடுத்துக் கொடுத்தான்.


அக் காசுகளைக் காவலன் கை நிறைய வைத்துக்கொண்டு, "தம்பி! இக் காசுகளைப் பழுவேட்டரையரின் பொக்கிஷத்திலிருந்து எடுத்து வந்தாயா? அல்லது வார்ப்படச் சாலையிலிருந்தே அடித்துக்கொண்டு வந்தாயா? உன் பேரில் இப்போது மூன்று குற்றங்கள் ஆயின. கொலைக்குற்றம் ஒன்று, சிறையிலிருந்து தப்பிய குற்றம் ஒன்று. இராஜ்ய பொக்கிஷத்திலிருந்து திருடிய குற்றம் ஒன்று. ஆக மூன்று குற்றங்கள். ஒவ்வொரு குற்றத்துக்காகவும் உன்னைத் தனித்தனியே கழுவில் ஏற்றலாம்" என்றான்.


"ஐயா! சோழ ராஜ்யத்துக்கு நான் எத்தனையோ சேவைகள் செய்திருக்கிறேன். பலமுறை தூது சென்றேன். என் உயிரைக் கொடுத்துக் கரிகாலரின் உயிரைக் காப்பாற்ற முயன்றேன். இந்தச் சில பொற்காசுகளை என் சேவைக்குக் கூலியாகப் பெற எனக்கு உரிமை உண்டு. அதுவும் பிரயாண வசதிக்காகவே எடுத்துக் கொண்டேன்" என்றான் வந்தியத்தேவன்.

"இதையெல்லாம் நீ உன்னை விசாரணை செய்யும்போது சொல்லிக் கொள்ளு!" என்றான் காவலன்.

"அப்படியானால், நீர் என்னைக் கட்டவிழ்த்து விடப் போவதில்லையா?" என்று கேட்டான் வந்தியத்தேவன்.

"கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் திருமாலைக் காட்டிலும் பரமசிவன் பெரிய தெய்வம் என்று ஏற்பட்டாலும், நான் சில பொற்காசுகளுக்காக இராஜ்யத் துரோகம் செய்ய மாட்டேன்" என்றான் காவலன்.





கருத்திருமன் என்ன செய்கிறான் என்று வந்தியத்தேவன் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டான். அவன் தன்னை ஆர்வத்துடன் நோக்கிக்கொண்டு சமிக்ஞையை எதிர் பார்த்திருந்தவனாகத் தோன்றியதைக் கவனித்தான்.

உடனே அவ் வீர வாலிபன் ஏற்கெனவே தளர்த்தி விட்டிருந்த கட்டுக்களை இன்னும் சிறிது தளர்த்திக் கொண்டு சட்டென்று அந்தக் காவலனுடைய முகத்திலிருந்த மீசையையும் தலைக்கட்டையும் பிடித்து இழுத்தான்.

அவை அவன் கையோடு வந்து விட்டன. சாக்ஷாத் ஆழ்வார்க்கடியான் காட்சி அளித்தான்.

''வேஷதாரி வைஷ்ணவனே! நீதானா?'' என்றான் வந்தியத்தேவன்.

ஆழ்வார்க்கடியான் தனது மீசையையும் தலைப்பாகையையும் காப்பாற்றிக் கொள்ள முயன்றபோது அவன் கையிலிருந்த பொற்காசுகள் சிதறி விழுந்தன.

வந்தியத்தேவன் ஒரு நொடியில் தன் கட்டுக்களிலிருந்து விடுபட்டு ஆழ்வார்க் கடியானைக் கீழே தள்ளினான்.

சற்று முன் தன்னைக் கட்டியிருந்த கயிற்றைப் போட்டு ஆழ்வார்க்கடியானைப் படகின் குறுக்குச் சட்டங்களோடு சேர்த்துக் கட்டினான்.

அவன் அரையில் தரித்திருந்த வாளை அதன் உறையிலிருந்து இழுத்து எடுத்துக் கையில் ஏந்திக்கொண்டான்.

வந்தியத்தேவன் இச் செயல்களில் ஈடுபட்டிருக்கையில் கருத்திருமன் சும்மா இருக்கவில்லை. அவன் அருகில் நின்ற காவலனைத் திடீரென்று தாக்கி ஆற்று வெள்ளத்தில் வீழ்த்தினான். அவன் நதி வெள்ளத்தில் போராடலானான்.

மற்ற இருவரில் ஒருவன் படகோட்டியை நோக்கியும் இன்னொருவன் வந்தியத்தேவனிடத்திலும் நெருங்கினார்கள். இருவரும் பயத்துடன் தயங்கித் தயங்கியே வந்தார்கள். வந்தியத்தேவன் அவனை நோக்கி வாளை வீசிக் கொண்டு முன்னால் சென்றதும் அவ் வீரன் தானாகவே வெள்ளத்தில் குதித்து விட்டான்.

இன்னொருவனை இதற்குள் கருத்திருமன் தன் கையிலிருந்த துடுப்பினால் ஓங்கி அடித்துப் படகில் வீழ்த்தினான்.

இருவரும் சேர்ந்து அவனையும் குறுக்குச் சட்டத்தில் கட்டிப்போட்டார்கள்.

படகு நதி வெள்ளத்தோடு போய்க் கொண்டிருந்தது. வெள்ளத்தில் விழுந்த இருவரும் அக் கரையை நோக்கி நீந்திச் செல்ல முயன்றுகொண்டிருந்தார்கள்.

வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியான் அருகில் சென்று "வீர வைஷ்ணவ சிகாமணியே! இப்போது என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான்.

"என்னத்தைச் சொல்வது? எல்லாம் நாராயண மூர்த்தியின் செயல். கட்டுகிறவனும் அவன்; கட்டப்படுகிறவனும் அவன். தள்ளுகிறவனும் அவன்; தள்ளப்படுகிறவனும் அவன்! தூணிலும் உள்ளான்; துரும்பிலும் உள்ளான்; உன் கை வாளிலும் உள்ளான்; என் தோளிலும் உள்ளான்!''

''அப்படியானால், இந்த ஆற்று வெள்ளத்திலும் உள்ளான்! உன்னைக் கட்டித் தூக்கி இந்த வெள்ளத்தில் போட்டு விடலாம் அல்லவா?''

"பிரஹலாதனைக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் போட்டார்கள். அவனை நாராயணமூர்த்தி காப்பாற்றிக் கரை சேர்க்கவில்லையா? அப்படிப் பகவான் வந்து என்னைக் கரை சேர்க்க முடியாவிட்டால், சாக்ஷாத் வைகுண்டத்துக்கு நேரே அழைத்துக்கொள்கிறார்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

இதைக் கேட்ட வந்தியத்தேவன் சிறிது யோசித்துவிட்டு, "இதோ பார்! நீ சில சமயம் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாய். என்ன எண்ணத்துடன் காப்பாற்றினாயோ, தெரியாது! எப்படியிருந்தாலும், உன்னை நான் கொல்ல விரும்பவில்லை. ஆயினும், உன் உயிரைக் காப்பாற்றுவதாயிருந்தால், எனக்கு ஓர் உதவி நீ செய்ய வேண்டும்!'' என்றான்.

''அப்பனே! பரோபகாரம் இதம் சரீரம் என்ற கொள்கை உடையவன்.

என்ன உதவி உனக்குத் தேவையோ, கேள்! கட்டை அவிழ்த்துவிட்டால் செய்கிறேன்'' என்றான் திருமலை.

''உன் சரீரத்தினால் உதவி எனக்கு இப்போது தேவையில்லை. எனக்கும் இவனுக்கும் இரண்டு குதிரைகள் வேண்டும். எதற்காக என்று கேட்கிறாயா? தப்பிச் செல்லுவதற்குத்தான்! அதற்கு ஏதேனும் வழி சொன்னால், உன்னை இப்படியே படகில் மிதக்கவிட்டு விட்டு நாங்கள் கரையில் இறங்கி விடுகிறோம். படகு கரையில் ஒதுங்குமிடத்தில் நீ உன் சாமர்த்தியத்தை உபயோகித்துக் கொண்டு பிழைத்துக் கொள்!''

''என்னால் முடிந்த உதவியைக் கேட்கிறாயே, அதைப் பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன்.''

''குதிரைகள் கிடைக்க எனக்கு வழி சொல்ல முடியுமா?''

''முடியும்! உங்கள் இரண்டு பேருக்கும் இரண்டு குதிரைகள் இருக்குமிடம் எனக்குத் தெரியும்... வாணி அம்மை வீடு உனக்குத் தெரியும் அல்லவா?''

''எந்த வாணி அம்மை?''

''தஞ்சைத் தளிக் குளத்தார் ஆலயத்துக்குப் புஷ்ப கைங்கரியம் செய்யும் வாணி அம்மை. பிறவி ஊமை. சேந்தன் அமுதனின் தாயார்.''

இவ்வாறு ஆழ்வார்க்கடியான் சொல்லிக் கொண்டிருந்த போது கருத்திருமன் அருகில் நெருங்கி ஆவலாகக் கேட்டான்.

''தெரியும்; அந்த வீடு எனக்குத் தெரியும். நந்தவனத்தில் இருக்கிறது.''

''அங்கே இரண்டு குதிரைகள் இந்தக் கணத்தில் இருக்கின்றன.''

''எப்படி?''

''ஒன்று, என் குதிரை, வாணி அம்மையின் குடிசைக் கருகில் அதைக் கட்டிப் போட்டுவிட்டு இந்தப் படகில் ஏறி வந்தேன். இன்னொன்று, சேந்தன் அமுதன் ஏறி வந்த குதிரை. பாவம்! அமுதன் குதிரை ஏறி வழக்கமில்லாதவன். வழியில் அந்த முரட்டுக் குதிரை அவனைக் கீழே தள்ளிவிட்டது. முன்னமே சுரத்தினால் பலவீனமடைந்திருந்தான். கீழே விழுந்த அதிர்ச்சியால் மறுபடியும் படுத்துவிட்டான். பிழைத்தால் புனர்ஜன்மம் என்று சொல்கிறார்கள். ஆகையால் குதிரை இனி அவனுக்குத் தேவையிராது.''

வந்தியத்தேவன் மிக்க கவலையுடன் ''அவனைக் கவனிக்க அங்கே யார் இருக்கிறார்கள்?'' என்றான்.

''அவனுடைய தாயாரும் பூங்குழலியும் இருக்கிறார்கள்!'' என்றான் திருமலை.

கருத்திருமன் திடீர் என்று அச்சம்பாஷணையில் பிரவேசித்து ''எந்தத் தாயார்?'' என்று கேட்டான்.

இருவரும் ஒரு கணம் அவனை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

''என்ன கேட்டாய்?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''சேந்தன் அமுதன் உயிருக்கு அபாயம் என்னும் செய்தி பெரிய பிராட்டி செம்பியன் மாதேவிக்குத் தெரியுமா என்று கேட்டேன்.''

''ஆமாம்; செம்பியன் மாதேவிதான் அவர்களுக்குப் புஷ்ப கைங்கரியத்துக்கு மானியம் கொடுத்து ஆதரித்து வருகிறார். ஆனால் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் இப்போது கரிகாலர் மரணத்தினால் ஏற்பட்ட துயரத்தில் மூழ்கிக் கிடக்கிறார்களே? அமுதனை எங்கே கவனிக்கப் போகிறார்கள்?''

வந்தியத்தேவன் கருத்திருமனைப் பார்த்து, ''நீ என்ன சொல்கிறாய்? சேந்தன் அமுதனையும் அவன் அன்னையையும் போய்ப் பார்த்துவிட்டுப் போவோமா?'' என்றான்.

கருத்திருமன் தலையை அசைத்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.

''அப்படியானால், படகைக் கரையை நோக்கிச் செலுத்து!'' என்று வந்தியத்தேவன் கூறிவிட்டு, ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''வைஷ்ணவனே! இதில் ஏதாவது உன் சூழ்ச்சி தந்திரத்தைக் காண்பித்திருந்தாயோ, பார்த்துக் கொள்! என்னுடைய கதி எப்படியானாலும் உன்னைக் கைலாஸத்துக்கு அனுப்பி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன்!'' என்றான்.

"வேண்டாம், தம்பி! வேண்டாம்! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். நித்திய சூரிகள் புடைசூழ ஸ்ரீமந் நாராயண மூர்த்தி மகாலக்ஷ்மி சகிதமாக வீற்றிருக்கும் வைகுண்டத்துக்கு என்னை அனுப்பி வை!" என்றான் வைஷ்ணவன்.

அறுபதாம் அத்தியாயம்

அமுதனின் கவலை

நந்தவனத்து நடுவில் இருந்த குடிலில் சேந்தன் அமுதன் நோய்ப்பட்டுப் படுத்திருந்தான். பூங்குழலி அவனுக்கு அன்புடன் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். வாணி அம்மை பாகம் செய்து கொடுத்த கஞ்சியைக் கொண்டு வந்து அவனை அருந்தும்படி செய்தாள்.

சற்று முன்னாலேதான் சுந்தர சோழ ஆதுரசாலையிலிருந்து வைத்தியர் வந்து சேந்தன் அமுதனைப் பார்த்துவிட்டுப் போயிருந்தார். போகும்போது அவரிடம் பூங்குழலி தனியாக விசாரித்தாள். அமுதனுக்கு எப்படியிருக்கிறது, - பிழைத்து எழுந்து விடுவானா என்று கேட்டாள்.

"முன்னமே ஒரு தடவை காய்ச்சல் வந்து பலவீனமாயிருந்தான். அத்துடன் நீண்ட பிரயாணம் போய்த் திரும்பிக் குதிரை மேலிருந்தும் கீழே விழுந்திருக்கிறான். அதனாலெல்லாம் பாதகமில்லை. ஆனால் அவன் மனத்தில் ஏதோ கவலை வைத்துக்கொண்டிருக்கிறான். அதனாலேதான் உடம்பு குணமடைவது தடைப்படுகிறது!" என்றார் வைத்தியர்.

இதை உள்ளத்தில் வைத்துக்கொண்டு பூங்குழலி, "அமுதா! உன் மனத்தில் என்ன கவலை? ஏன் உற்சாகமே இல்லாமலிருக்கிறாய்? உன் மனக் கவலையினால்தான் உன் உடம்பு குணப்படுவ்து தாமதமாகிறது என்று வைத்தியர் சொல்கிறாரே?" என்றாள்.

அமுதன், "பூங்குழலி! உண்மையைச் சொல்லட்டுமா? அல்லது மனத்தில் ஒன்று வைத்துக்கொண்டு வெளியில் ஒன்று பேசட்டுமா?" என்றான்.

பூங்குழலி, "நான் அப்படி உள்ளொன்று புறமொன்றுமாகப் பேசுகிறவள் என்று சுட்டிக் காட்டுகிறாயா?" என்று கேட்டாள்.

"பூங்குழலி! உன்னுடன் பேசுவதே அபாயகரமாயிருக்கிறது. நீ பேசாமலிருந்தால் உன் முகத்தைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பேன்."

"என் அத்தைமார்களைப் போல் நானும் ஊமையாய்ப் பிறந்திருந்தால் உனக்குச் சந்தோஷமாயிருக்கும் அல்லவா?"

"ஒரு நாளும் இல்லை. நீ பாடும்போது நான் அடையும் ஆனந்தத்துக்கு அளவேயில்லை. வெறும் பேச்சிலே என்ன இருக்கிறது? ஒரு தேவாரப் பண் பாடு!"

"அதெல்லாம் முடியாது. உன் மனத்தில் என்ன கவலை என்பதைச் சொன்னால்தான் பாடுவேன்."

"அப்படியானால் சொல்கிறேன், கேள்! என்னுடைய கவலையெல்லாம் என் உடம்பு சீக்கிரமாகக் குணமாகி விடப் போகிறதே என்றுதான்."

"இது என்ன இப்படிச் சொல்லுகிறாய்? உனக்கு உடம்பு குணமாக வேண்டும் என்று நான் எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டிருக்கிறேனே? நீ குணமாகி விடுமே என்று கவலைப்படுவது ஏன்?"

"என் உடம்பு குணமாகிவிட்டால் நீ என்னை விட்டு விட்டுப் போய் விடுவாய் அல்லவா? அதை எண்ணித்தான் கவலைப்படுகிறேன், பூங்குழலி!"

பூங்குழலியின் முகம் காலைப் பனித்துளிகளுடன் ஒளிர்ந்த மலர்ந்த செந்தாமரை போல் விளங்கியது. அவள் இதழ்களில் புன்னகை விரிந்தது; கண்களில் கண்ணீர் துளித்தது.

"அமுதா! உன் அன்பை எண்ணி என் நெஞ்சு உருகுகிறது. உன்னை விட்டு

விட்டுப் போகவும் மனம் வரவில்லை; போகாதிருக்கவும் முடியவில்லை.''

''ஆமாம்; அலைகடல் உன்னை அழைத்துக்கொண்டிருக்கிறது. அதனால் என்ன? நானும் உன்கூட வருகிறேன். அதற்கு உன் சம்மதத்தைத் தெரியப் படுத்து. என் உடம்பும் குணமாகிவிடும்.''

''அமுதா! நான் என் மனத்திற்குள் செய்துகொண்டிருக்கும் சபதம் அதற்குத் தடையாயிருக்கிறது.''

''அது என்ன சபதம்?''

''புவி ஆளும் மன்னனை மணந்து அவனுடன் சிங்காதனத்தில் அமர வேண்டும் என்பது என் மனோரதம். இது முடியாவிட்டால் கன்னிப் பெண்ணாகவே காலங் கழிக்கச் சபதம் செய்திருக்கிறேன்.''

''ஆமாம்; பொன்னியின் செல்வர் உன் மனத்தில் இடம் பெற்றிருக்கிறார். ஆனால், பூங்குழலி! அது நடக்கிற காரியமா?''

''நீ தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறாய். பொன்னியின் செல்வரிடம் இச் சோழ நாட்டில் பிறந்தவர்கள் அனைவரும் அன்பு கொண்டிருக்கிறார்கள். ஆடவர்கள், மங்கையர்கள், வயோதிகர்கள், சின்னஞ் சிறு குழந்தைகள் எல்லாரும் அருள்மொழி வர்மரிடம் நேயம் கொண்டிருக்கிறார்கள். அது போலவே நானும் அவரிடம் அபிமானம் வைத்தேன். அவர் காய்ச்சலுடன் படகில் கிடந்தபோது நீயும் நானும் சேர்ந்துதான் அவருக்குப் பணிவிடை செய்து காப்பாற்றினோம்...''

''அப்படியானால், அவரிடம்... அவரிடம்... வேறு வித எண்ணம் உனக்கு நிச்சயமாக இல்லையா?''

''அமுதா! பொன்னியின் செல்வரை மணக்கப் பிறந்தவள் வேறொருத்தி இருக்கிறாள். அவள் கொடும்பாளூர் இளவரசி வானதி. நான் அவளிடம் ஏதோ விளையாட்டாகப் பேசப் போக அந்தப் பெண் 'நான் சிங்காதனம் ஏறுவதில்லை' என்று சபதம் செய்தாள்...''

''மன்னர் குலத்தில் பிறந்தவள் அவ்வாறு சொல்லிச் சபதம் செய்திருக்கிறாள். நீயோ 'சிங்காதனம் ஏறித்தான் தீருவேன்' என்கிறாய். இல்லாவிட்டால் கன்னிப்பெண்ணாகவே காலங் கழிப்பேன் என்று சொல்லுகிறாய்.''

''அமுதா! என் அத்தை, அரசர் குலத்தில் பிறந்தவரை நேசித்தாள். அதனால் அவளுடைய வாழ்க்கை துன்பமயமாயிற்று. என் அத்தை அடையத் தவறிய பாக்கியத்தை நான் என் வாழ்நாளில் அடைவேன். ஏன் கூடாது?''

''உனக்கு அந்த ஆசை ஏற்பட்டது என்னுடைய பாக்கியக் குறைவினால் தான்!'' என்றான் அமுதன்.

''அப்படி ஏன் நீ நிராசையடைய வேண்டும்? அரச குலத்தில் பிறந்தவர்கள் தான் அரசர்களாயிருக்கலாம் என்று விதி ஒன்றும் இல்லை. உன்னைப் போல் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்கள் தங்கள் வீர பராக்கிரமச் செயல்களினால் இராஜ்யங்களை ஸ்தாபித்துச் சிங்காதனம் ஏறியிருக்கிறார்கள். நீயும் இன்றைக்கு அத்தகைய சபதம் எடுத்துக் கொள். இந்தப் பெரிய பாரத நாட்டிலோ, கடல் கடந்து அயல்நாடுகளிலோ உன் புஜ பல பராக்கிரமத்தினால் ஒரு இராஜ்யத்தை ஸ்தாபிக்கத் தீர்மானம் செய்துகொள். நான் உன்னை விட்டுப் பிரியாமல் உனக்குத் துணையாயிருக்கிறேன்'' என்றாள் பூங்குழலி.

''பூங்குழலி! அத்தகைய காரியங்களுக்கு நான் பிறக்கவில்லை. என் மனம் கத்தி எடுத்துப் போர் செய்வதில் ஈடுபடவில்லை. ஒரு சிறு பிராணியை இம்சிக்கவும் நான் விரும்பவில்லை. மணிமகுடமும் சிங்காதனமும் என் உள்ளத்தைக் கவரவில்லை. சிவபெருமானையும் சிவனடியார்களையும் ஏத்திப் பரவிப் பாடிக்கொண்டு காலங் கழிக்க விரும்புகிறேன். ஆகையால் உனக்கும் எனக்கும் பொருத்தமில்லைதான்! உன்னை நான் மணக்க விரும்புவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போலத்தான். பூங்குழலி! உன்னை இங்கே தாமதிக்கச் சொல்வதில் பலனில்லை. நீ போய் விடு! என் உடம்பு குணமாவதற்காகக் காத்திராதே!'' என்றான் சேந்தன் அமுதன்.

அச்சமயம் அக் குடிலின் வாசலில் காலடிச் சப்தம் கேட்கவே இருவரும் பேச்சை நிறுத்தினார்கள்.

(தொடரும்)

என். நாராயணன்

தலைவர்:

தமிழ்நாடு

பிராமணர் சங்கம்

இனியும் இளிச்சவாயர்களாக இருக்க மாட்டோம்!

பழங்கதைகளைப் பேசி பிராமணர்களுக்கும் மற்ற சமுதாயத்தினருக்கும் இடைவெளியை உண்டாக்கியதில் திராவிட இயக்கத்தினருக்குப் பெரிய பங்குண்டு. அவர்கள் இப்படிச் செய்ததற்குக் காரணம், மற்ற பிராமணரல்லாதவரைக் கவர்ந்து அவர்களிடம் ஓட்டு வாங்கி அரசியலில் திராவிட இயக்கத்தை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில்தான்!

இவர்கள் புண்ணியத்தால் பிராமண சமூகம் ஒரு கட்டத்தில் பொது வாழ்க்கையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டது உண்மை. பிராமணர்களின் உணர்வுகள் புண்படுத்தப்பட்டது சத்தியம். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் உச்சகட்டமாக, 'பிராமண சமூகத்துப் பெண்கள் தேசியமயமாக்கப்பட வேண்டும்'



என்று காட்டுமிராண்டித்தனமான பேச்சுக்கள் நிலவியபோதுதான் வெகுண்டு எழுந்தது பிராமண சமூகம். கோவையில் சங்கம் துவங்கப்பட்டது அப்பொழுதுதான். அதாவது 1980ல்.

சங்கம் துவங்கியகையோடு பிராமணர்களிடம் உள்ள உட்பிரிவு வேறுபாடுகளைக் களைந்து அவர்களை ஒரே அணியாக இயக்குவதை லட்சியம் ஆக்கிக் கொண்டோம்; வரதட்சணைக் கொடுமையை ஒழித்துக் கட்டுவதை நோக்கமாக்கிக் கொண்டோம்; இதர சமூகத்தினருடன் கலந்து பழகுவதைப் பிரதானமாக்கிக் கொண்டோம்; சமுதாயத்தில் இழந்த சிறப்பை மீட்டுவிட உறுதி பூண்டோம்.

மக்கள் மத்தியில் ஒரு பொதுஜன கருத்தை உருவாக்குவது பிராமண சமூகம்தான்; அவர்கள்தான் ட்ரெண்டு-செட்டர்கள்; எந்த ஒரு விஷயத்தையும் சோதித்துப் பார்க்கும் தளமாக அவர்கள் இருக்கிறார்கள்; உதாரணமாக, அரசாங்கம் குடும்ப நலத்

இட்டத்தை அறிமுகப்படுத்தியபொழுது அதற்கு ஏகோபித்த ஆதரவு கொடுத்தது பிராமண சமூகம்தான்; பிராமினிஸம் என்றால் என்ன? தேசபக்தி, தெய்வபக்தி, கற்றல், கற்பித்தல், நல்ல ரசனை, மனித நேயம், நாகரிகமாக வாழுதல்- இதுதான் பிராமினிஸம். இதைக் கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்குப் புரிய வைத்தோம் சங்கத்தின் மூலமாக.

தமிழ்நாட்டில் ஐந்தாவது பெரிய சமூகம் பிராமண சமூகம்தான். நாற்பத்தைந்து லட்சம் பிராமணர்கள் இருக்கிறோம். எங்கள் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில், ஒரு கட்சி குறைந்தது அறுபது தொகுதிகளில் வெற்றி பெறுவது நிச்சயம். இதைத் தெரிந்து கொண்டு, தேர்தலையொட்டி, பல்வேறு கட்சித் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் எங்கள் ஆதரவைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நலன்களைக் கட்டிக்காக்கக் கூடிய அணி எதுவோ, எங்களது கோரிக்கைகளைப் பணிவுடன் கேட்டு நடைமுறைப்படுத்தக்கூடிய அணி எதுவோ, அதற்குத்தான் எங்கள் ஆதரவு இருக்கும்.

எங்கள் கோரிக்கைகள்...

1. நீதித்துறைக்கும் சட்டத்துறைக்கும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அரிய சேவை செய்துவரும் பிராமண சமூகத்துக்கு உயர்நீதி மன்ற நீதிபதிகள் நியமனத்தில் தக்க பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். பிராமண சமூகத்து நீதிபதி ஓய்வுபெற்றால், அந்த இடத்துக்கு பிராமண சமூகத்தைச் சார்ந்தவர்களைத்தான் நியமிக்க வேண்டும்.

2. கல்வி, வேலைவாய்ப்பில் முற்பட்ட சமூகத்தினருக்குப் பத்து சதவிகித இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

3. பிராமண சமூகத்துக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் வேண்டும்.

4. அரசு, கலை, விஞ்ஞானம், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இரண்டாவது ஷிஃப்ட் முறையை அமுல்படுத்த வேண்டும். இதன் மூலம் அதிக அளவில் மாணவர், மாணவிகள் குறைந்த கட்டணத்தில் அரசு கல்லூரியில் சேரும் வாய்ப்பு அதிகரிக்கும்.

5. தமிழக அரசின் பாடத் திட்டம் தற்கால விஞ்ஞான தொழில் நுட்பத்தைக் கணக்கில் கொண்டு திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

6. ஆன்மிகத்தில் அதிகம் தொடர்புடைய பிராமண சமூகத்தினரைக் கோயில் அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும்.

எங்களுக்கு கலைஞர் அரசு மீது வருத்தம் உண்டு.

சின்னச் சின்ன உட்பிரிவுகளுக்குக் கூட அமைச்சரவையில் இடம் கொடுத்த கலைஞர், பிராமணர்களுக்கு இடம் கொடுக்கவில்லை;

அறநிலையத் துறை செயல்பாடு எங்களுக்குக் கொஞ்சம் கூட திருப்தியாக இல்லை. மத உணர்வுகளையும் கடவுளையும் கிண்டல் செய்து கடந்த காலத்தில் பேசியவர்கள்தான் அறங்காவலர்களாக இருக்கிறார்கள்;

முற்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று லட்சக்கணக்கானவர்களிடம் கையெழுத்து பெற்று வைத்திருக்கிறோம். முதல்வரிடம் அதைக் கொடுப்பதற்கு நேரம் கேட்டால் வேண்டுமென்றே இழுத்தடிக்கிறார்கள்.

தி.மு.க. அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது என்றாலும் ஒரு பொதுவான அதிருப்தி மாநிலம் முழுக்க நிலவுகிறது. ஜெயலலிதாவைச் சிறையில் அடைத்ததையும் அவர் மீது வழக்குகள் தொடர்ந்ததையும் பழி வாங்கும் நடவடிக்கையாக தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக பெண்கள், நினைக்கிறார்கள்.

எது எப்படி என்றாலும் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நலனைக் கருத்தில் கொண்டு தான் எங்கள் ஆதரவு அமையும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இனியும் பிராமணர்கள் இளிச்சவாயர்களாக இருக்க மாட்டோம்!

படம்: **ராஜன்**

நானும் என் மனைவியும் எதற்கு எடுத்தாலும் பெட் (பந்தயம் தான்!) கட்டுவது வழக்கம். கிரிக்கெட் ஸ்கோர் மற்றும் தேர்தல் வெற்றி தோல்வி நிலவரம் முதல் வீட்டின் அன்றாட நிகழ்ச்சிகள் வரை எல்லாவற்றுக்கும் 'பெட்'தான்.

பந்தயத்தில் ஜெயித்தவருக்கான தொகை சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரை இருக்கும். பந்தயங்களில் கிடைக்கும் பரிசுத் தொகையை இருவரும் தனித்தனியே சேமிப்பு வங்கியில் போட்டு வைப்போம். இந்தப் பந்தய விஷயத்தை அறிந்த எங்கள் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பலர், "இதுபோன்ற விளையாட்டுக்காக செய்யும் விஷயங்கள் சில சமயம் குடும்பத்தில் வீண் சண்டையை, குழப்பத்தை ஏற்படுத்தி விடும்" என்று எச்சரித்துக் கொண்டே இருந்தாலும் நாங்கள் கண்டு கொள்வதாய் இல்லை.

பல்வேறு செலவுகளின் காரணமாக ஒரு குறிப்பிட்ட வருடம் எங்கள் திருமண நாள் கொண்டாட்டத்துக்கு வழக்கமாக வாங்கும் துணிமணி, நகைகளை வாங்க முடியாத சூழ்நிலை.

திடீரென்று எனக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை, மனை

கல்கி — ரமணி Vs ரமணி இணைந்து நடத்திய 'தம்பதி தமாஷ்' போட்டியில் ரூ. 2000 மதிப்புள்ள பட்டுப் புடைவையை ஆறுதல் பரிசாகப் பெறும் கட்டுரை.

விக்குத் துணிமணிகள் வாங்க வழக்கமாகச் செலவழிக்கும் தொகையை விட ஒரு கூடுதலான தொகையை அன்பளிப்புக் காசோலையாக்கி திருமண நாளன்று காலையில் அவரிடம் நீட்டி அவரை சந்தோஷத்தில் ஆழ்த்தினேன். அவரோ, ஒரு படி மேலே போய் என் பெயர் பொறித்த அழகான மைனர் சங்கிலி ஒன்றை எனக்குப் பரிசாகக் கொடுத்து என்னைத் திக்குமுக்காட வைத்து விட்டார். இருவருக்கும் பணம் எப்படிக் கிடைத்தது என்று யோசிக்கிறீர்களா? தனித்தனியே சேமித்து வைத்திருந்த பந்தயப் பணம்தான்!

நாங்கள் பரஸ்பரம் அடைந்த மகிழ்ச்சிக்கும் எங்கள் சுற்றத்தார் அடைந்த ஆச்சர்யத்துக்கும் அளவே இல்லை. அந்த வருடத் திருமண நாள் எங்கள் வாழ்வில் என்றும் மறக்க முடியாத நாளாகி விட்டது.

எங்களுடைய பந்தயங்கள் இன்றும் தொடர்கின்றன!

— என். செல்வராஜ்



'பெட்' கட்டலையோ 'பெட்'?

என்ன செய்யப் போகிறாய்?



- நீ பார்க்கும்போதெல்லாம்
யாராவது பார்த்து
விடுவார்களோயென்று
அங்குமிங்கும் பார்க்கிறேன்.
எப்போதுதான்
நாமிருவரும்
பார்த்துக்
கொள்வோமோ?

- நாளையிலிருந்து
உனைப் பார்க்கவோ பேசவோ
கூடாதென்று முடிவெடுத்தும்
எனக்கு வருவதென்னவோ
இன்றுகள் மட்டும்தான்

• இடி மழை நாட்களில்
உன் தாமதத்தில் தவிக்கிற
என் தருணங்களை
வெறும் காதலென்று
சொல்லிவிடாதே.

• உன்னைப்
பார்க்கிறவர்களெல்லாம்
காதலித்திருப்பார்கள்.
நீ பார்த்தவர்களெல்லாம்
என்ன
ஆனார்களோ?

• என் மேல் பிரியம்
இவருக்கு என்று
ஒற்றை வரியில் சொல்லாதே
ஈரத்திற்காக மட்டுமே
மழையைச் சாரல் என்று
சொன்ன மாதிரி
ஆகிவிடும்.

• உன்னைச்
சந்திக்க
பிரியமாயிருக்கிறது.
வேறு யாரோடும்
உன்னைச் சந்திக்கப்
பிரியமாயில்லை!

• நீ என்
கனவிலேயே வா.
நிஜத்தில்
நீ நீயாகவே
இருக்கிறாய்.

• என் மனத்துக்குள்
படர்ந்திருப்பவளே
நீ மட்டும்தான்
எந்த மாநகராட்சியாலும்
அகற்ற முடியாத
விசித்திர
ஆக்கிரமிப்பு.

• எட்டிப் பார்
உன் வாசலில்...
கனிந்த என்னுள்ளம்
எப்போதும்
காத்திருக்கும்.

• அவள் நாற்று
நடுவதற்காகத்தான்
வயலுக்கு வந்தாள்
இதயத்தில்
முளைத்தது
பயிர்.

• என்ன வரம்
வேண்டுமானாலும்
தருகிறேன்.
என் மேல் ஒரு பூ
உதிர்த்துவிட்டுப்
போ.

வஸந்த் செந்தில்


...ஜெ டிஸ்னி

'அப்படி யாரும் இங்கே இல்லையே?' என்று ரிசப்ஷனிஸ்ட் சொன்னதைக் கேட்டு வருணின் நெற்றிப் பரப்பில் வியப்பு வரிகள் ஜனித்தன.

"ப்ளீஸ் செக் யுவர் ஆன்ஸர். ரூம் நெம்பர் த்ரீஃபோர் செவன். கஸ்டமர் பேர் பர்வதராஜகுமாரி."

ரிசப்ஷனிஸ்ட் புன்னகை செய்தாள். "ஸாரி டு ஸே திஸ். நீங்க சொல்ற நேம்ல எந்த கஸ்டமரும் கிடையாது. அதே போல் ரூம் நெம்பர் த்ரீ ஃபோர் ஸெவன்ல கடந்த ஒரு வார காலமா எந்த கஸ்டமரும் தங்கவேயில்லே... இந்த ரூம் ஸ்டில் வேக்கண்ட். ஒருவேளை நீங்க ஹோட்டல் மாறி வந்திருக்கலாம்...."

"இது ஹோட்டல் பட்டர்ஃபிளை தானே?"

"எஸ்..." என்ற ரிசப்ஷனிஸ்ட் வருணுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் கேட்டாள்.

"நீங்க சொல்ற அந்த பர்வதராஜகுமாரி மிஸ் ஆர் மிஸஸ்...?"

"தெரியாது..."

"எப்படியிருப்பாங்க... கேன் யூ ஐடென்டிஃபை ஹெர்...?"

"ஸாரி... அவங்களை நான் பார்த்தது இல்லை. திஸ் ஈஸ் த வெரி ஃபர்ஸ்ட் டைம். இன்னிக்கு மத்தியானம் எனக்கு ஃபோன் பண்ணி பட்டர்ஃப்ளை ஹோட்டலில் ரூம் நெம்பர் த்ரீ ஃபோர் செவனில் தன்னை வந்து பார்க்கும்படியா சொன்னாங்க. பேரைக் கேட்டேன், பர்வதராஜகுமாரின்னு சொன்னாங்க..."

"யாரோ விளையாடியிருக்காங்க." ரிசப்ஷனிஸ்ட் தோள்களைக் குலுக்கினாள். தலையைச் சாய்த்து மெல்லச் சொன்னாள்.

"ஐயாம் ஸாரி."

"நோ.. ப்ராப்ளம். உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துட்டேன்."

வருண் திரும்பி ஹோட்டலின் வாசல் நோக்கி நடந்தான். இதயத்தின் ஒரு மூலையில் கோபத் தீ பற்றிக் கொண்டது.

'யாரவள்... என் பூர்வாசிரமம் தெரிந்த பர்வதராஜகுமாரி...?'

'அலைக்கழிக்கிறாள்...'

'எதற்காக...?'

சல்யூட் அடித்து கண்ணாடிக் கதவைத் திறந்துவிட்ட வெள்ளுடுப்பு பேரர்க்கு செல்டேப் ஒட்டிய ஐந்து ரூபாய் நோட்டொன்றைத் திணித்து விட்டு வெளியே வந்தான். ஃபோர் - வீலர்ஸ் பார்க்கிங்கைக் கடந்து பிரதான கேட் வழியாக ரோட்டின் ப்ளாட்பாரத்துக்கு வந்தான். நான்கு மணி சூரியன் பிடரியில் உறைத்தான்.

ரோட்டைக் கடந்து எதிர்ப்பக்கம் போய் விடலாமா என்று யோசித்த விநாடி -

வருணுக்கு வெகு அருகே அந்தக் கார் ஹாரன் சப்தம் கேட்டது.

திரும்பினான். ஒரு மெரூன் நிற மாருதி ஜென் மெதுவாய் ஊர்ந்து வந்தது. ட்ரைவிங் சீட்டில் ஒரு அழகான பெண். தலையை வெளியே நீட்டிப் புன்னகை செய்தாள்.

"ஹலோ வருண்..." மாருதி ஜென் அவனுடைய இடுப்பை உரசிக் கொண்டு நின்றது. வருண் அவளைக் குழப்பமாய்ப் பார்த்தான்.

"யார் நீங்க...?"

"யாரைத் தேடிக்கிட்டு இந்த ஹோட்டலுக்கு வந்திங்களோ அதே பர்வதராஜகுமாரி..."

வருணின் முகத்துக்குக் கோப ரத்தம் பாய்ந்து கண்களில் நிரம்பியது. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு கடைவாயில் வார்த்தைகளை அரைத்தான்.

"என்ன விளையாட்றியா...?"

"இனிமேத்தான் விளையாட்டே இருக்கு. கார்ல ஏறி உட்காருங்க வருண்...!"

"நோ... எனக்கு காரணம் தெரியணும்."

6 மூடுபனி நிலவு

ராஜேஷ்குமார்

"என்ன காரணம்?"

"என்னோட பழைய வாழ்க்கையைத் தெரிஞ்சுக்கிட்டு எதுக்காக இந்த டார்ச்சர்...?"

"இதை டார்ச்சர்ன்னு ஏன் நினைக்கறீங்க...?"

"இந்தப் பூனை எலி விளையாட்டு எனக்குப் பிடிக்கலை. உனக்கு என்ன வேணும் சொல்லு..."

"நீங்க மொதல்ல கார்ல ஏறுங்க."

"ஏறாட்டி...?"

"இப்போ உங்களுக்குக் கிடைச்சிருக்கிற வேலை போயிடும். வேலை போறது மட்டும் இல்லை. காதலும் போயிரும்."

"என்ன ப்ளாக்மெயிலா...?"

"ஓ..! இதுக்கு இப்படி ஒரு பேர் இருக்கா. அது ப்ளாக்மெயிலோ ஒயிட் மெயிலோ. இப்ப நீங்க. கார்ல ஏறணும். சரியா அரை நிமிஷம் அவகாசம். முப்பதே செக்கண்ட்ஸ்..! முப்பத்தியோராவது செக்கண்ட் கிளம்பிப் போய்க்கிட்டே இருப்பேன். அப்புறம் இந்த பர்வதராஜகுமாரி உங்க பார்வைக்குக் கிடைக்கவே மாட்டாள்" சொன்னவள் தன் மணிக்கட்டில் பதித்து இருந்த வாட்ச்சைப் பார்த்தாள்.

"கௌண்ட் டவுன் பிகின்ஸ்..."

வருண் தன் தாடையை அவஸ்தையாய்த் தேய்த்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். போக்குவரத்து நெரிசலில் வாகனங்கள் ஊர்ந்து கொண்டிருக்க, ஜனங்கள் வேகவேகமாய் ஜீப்ரா லைனைக் கடந்து கொண்டிருந்தார்கள்.

அவள் விநாடிகளை எண்ணிக் கொண்டிருந்தாள். "இருபத்தேழு... இருபத்தாறு... இருபத்தைந்து இருபத்தி நாலு..."

வருண் யோசித்தான்.

'என்ன செய்யலாம்...?'

'சர்தான் போடி!' என்று சொல்லி நடையைக் கட்டி விடலாமா...?'

கால்கள் பெயர மறுத்தன.

"இருபத்தி மூணு... இருபத்தியிரண்டு..."

காருக்குச் சாவியைக் கொடுத்தாள். அது மெல்ல கனைத்து உயிர் பெற்றுக் கொண்டது.

"வருண்! நீங்க இப்போ ஏறலைன்னா இனிமே உங்க வாழ்க்கையில் சந்தோஷமான விநாடிகளே வராது. இது உதார் கிடையாது. வெரி பவர்ஃபுல் வார்னிங். கால் நிமிஷம் போயாச்சு. இன்னும் ஃபிப்டீன் செகண்ட்ஸ் மட்டுமே... பதினாலு, பதிமூணு, பன்னிரண்டு, பதினொன்று..."

வருண் அவளருகே குனிந்தான்.

"என்னை எங்கே கூட்டிட்டுப் போகப் போறே...?"

"பத்து... ஒன்பது... எட்டு... ஏழு..."

"நான் கேட்ட கேள்விக்குப் பதில்?"

அவள் வருணைப் பொருட்படுத்தாமல் காரின் ஃபர்ஸ்ட் கியரைப் போட்டுக் கொண்டே, "ஆறு... ஐந்து... நான்கு" என்று சொல்ல ஆரம்பிக்க –

வருண் காரின் பின்பக்கக் கதவை 'ப்ளக்'கென்று திறந்து கொண்டு உள்ளே போய் கோபத்தோடு சாய்ந்தான்.

"இது புத்திசாலித்தனம்..." அவள் சிரித்துக்கொண்டே காரைக் கிளப்பி அடுத்த ஐந்தாவது விநாடி போக்குவரத்தில் கலந்தாள்.

அகில் அனலடிக்கும் முகத்தோடு யமுனாவை ஏறிட்டான்.

"ராங் நெம்பர்ன்னு நீ சொன்னது பொய் தானே...?"

யமுனா சிரமமாய் எச்சில் விழுங்கி விட்டு கணவனை இயல்பாய்ப் பார்த்துப் புன்னகைக்க முயன்றாள்.

"இல்லீங்க... நான் எதுக்குப் பொய் சொல்லணும்? அது ராங் நெம்பர்தான்..."

"வா...! இப்படி வந்து என் முன்னாடி நில்லு." அகில் இறுகிய முகத்தோடு கையசைக்க, யமுனா அவனுக்கு முன்பாய் வந்து நின்றாள். உடம்பில் மெலிதாய் ஒரு நடுக்கம் தொற்றியிருந்தது.


"உன்னோட முகத்தை நீயே கொஞ்சம் தொட்டுப் பாரு... எப்படி வேர்த்திருக்குன்னு உனக்கே தெரியும். போன்ல ஏதாவது வேண்டாத செய்தி வந்

"உங்கப்பா ரொம்ப நல்லவர்!"

"எப்படிச் சொல்றீங்க?"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதா கேட்டேன். 'பார்த்தா நல்ல பையனா தெரியற. விஷப் பரீட்சையில இறங்க வேண்டாம்'னு அட்வைஸ் பண்ணினார்!"

– கொங்கணாபுரம்
வே. செந்தில்



திருக்கணும். இல்லேன்னா வேண்டாத நபர் பேசியிருக்கணும். இந்த ரெண்டுல எது உண்மை...?"

"அது... வந்துங்க..."

"ம்... சொல்லு..."

"நான் சொல்றேன். ஆனா நீங்க கோபப் படக்கூடாது"

"மொதல்ல நீ விஷயத்தைச் சொல்லு. கோப்படறதா வேண்டாமாங்கிறதை நான் முடிவு பண்ணிக்கிறேன்..."

யமுனா தயங்கிவிட்டுத் தொடர்ந்தாள்.

"கடந்த ஒரு வாரமாவே இந்த நேரத்துக்கு ஒரு ஃபோன்கால் வருது. மாமாவோ அத்தையோ போய் ரிஸீவரை எடுத்தா வெச்சுடறாங்க. நான் போய் ரிஸீவரை எடுத்தால் எவனோ ஒருத்தன் மோசமான வார்த்தைகளாலே பேசறான். ஐ லவ் யூ சொல்றான். அவன் பேச ஆரம்பிச்சதுமே நான் ராங் நெம்பர்ன்னு சொல்லி ரிஸீவரை வெச்சுடுவேன்..."

அகில் முகம் மாறினான்.

"யாரவன்...?"

"தெரியலை..."

"எத்தனை நாளா இப்படி நடக்குது...?"

"ஒரு வாரமா..."

"இதை ஏன் என்கிட்ட சொல்லலை...?"

"அது... வந்து.. அவன் மிரட்டினான்..."

யமுனாவுக்குப் பொய் சரளமாய் வந்தது. "வீட்ல யார்கிட்டேயும் இதைப் பத்திச் சொல்லக்கூடாது. சொன்னா மோசமான விளைவுகள் ஏற்படும்ன்னு மிரட்டினான். அதான் பயந்துட்டு உங்ககிட்ட சொல்லலை."

"என்ன யமுனா இப்படி வெள்ளந்தியா இருக்கே...? இது எவ்வளவு பெரிய விஷயம்...? முதல் தடவை டெலிபோன் வந்தப்பவே நீ இதைச் சொல்லியிருந்தா இந்நேரம் அவனை மடக்கி போலீஸ்ல 'ஹேண்ட் ஓவர்' பண்ணியிருக்கலாம்..."

"எனக்கு பயமாயிருந்ததுங்க..."

"உனக்கு எல்லாமே பயம்தான். இன்னிக்கே நம்ம டெலிபோன்ல ஒரு காலர் ஐ.டி. ஃபிக்ஸ் பண்ணிடலாம். அந்த ராஸ்கல் போன் பண்ணினா எந்த நெம்பரிலிருந்து பேசறான்னு தெரிஞ்சிடும்."

"அப்படி ஒண்ணு இருக்கா...?"

"உனக்கு எதுதான் தெரியுது... குளிச்சுட்டு பூஜை பண்றதும் சமைச்சுப் போடறதும் மட்டும் வாழ்க்கை கிடையாது... அதுக்கும் மேலே..."

போர்டிகோவில் கார் ஹார்ன் சப்தம். யமுனா பரபரத்தாள்.

"என்னங்க லலிதாம்பிகை கோயிலுக்குப் போய்ட்டு அத்தையும் மாமாவும் வந்துட்டாங்க போலிருக்கு. இதைப் பத்தியெல்லாம் அவங்ககிட்ட சொல்ல வேண்டாம். வீட்ல ஒரு கல்யாண காரியம் நடக்கப் போகுது. எல்லாருமே சந்தோஷ மூடில் இருக்கிற இந்த நேரத்துல இந்த முள் உறுத்தல் வேண்டாம்..."

யமுனா சொல்லிக் கொண்டிருக்கும் போதே –

சிவப்பிரகாசமும் திலகவதியும் ஹாலுக்குள் நுழைந்தார்கள். சிவப்பிரகாசம் கைகளில் மஞ்சள் தடவிய கல்யாண இன்விடேஷன் பண்டில்.

"அம்மா யமுனா! இதை வாங்கிட்டுப் போய் பூஜை ரூமுக்குள்ளே வையம்மா. குரு பிறை எத்தனை மணிக்கு வருதுன்னு பார்த்து பண்டிலை எடுத்து முதல் இன்விடேஷனை எழுதணும்."

"சரிங்க மாமா..." தலையாட்டிய யமுனா பண்டிலை வாங்கிக் கொண்டு பூஜையறையை நோக்கி நடக்க முயன்ற விநாடி திலகவதி குறுக்கிட்டாள்.

"யமுனா... நில்லு..."

நின்ற யமுனாவின் தோளைத் தொட்டு மோவாயை நிமிர்த்தினாள் திலகவதி.

"என்ன முகமெல்லாம் வாடிக்கிடக்கு... உடம்புக்கு ஏதாவது முடியலையாம்மா...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்தே... நான் நல்லாத்தான் இருக்கேன்..."

"பொய் சொல்லாதே...! நானும் உன்னோட மாமாவும் கோயிலுக்குப் புறப்பட்டுப் போகும்போது ஏத்தி வ்ச்ச குத்து விளக்காட்டம் இருந்த உன் முகம் இப்போ இருளோன்னு இருக்கு..."

சிவப்பிரகாசம் அகிலிடம் திரும்பினார். "ஏன்டா, யமுனாவை நீ ஏதாவது சொன்னியா...?"

"அய்யோ அப்பா...! உங்க தங்கமான மருமகளை நான் ஒரு வார்த்தை கூடச் சொல்

"கொதிக்கற ரசத்துல தக்காளியை ஏன் இதயம் வடிவில் நறுக்கிப் போடுறே?"

"இதுதாங்க காதல் ரசம்"

– சோழபுரம் யாக்கோபு



லலை."

"நீ ஏதாவது சொல்லியிருப்பே... உன்னோட துர்வாச கோபத்தைப் பத்தித் தான் எல்லார்க்கும் தெரியுமே...?"

"மாமா...! அவரை ஒண்ணும் சொல்லாதீங்க. என்னைக் கடிந்து அவர் ஒரு வார்த்தை கூடப் பேசலை. எனக்குக் காலையிலிருந்தே கொஞ்சம் தலைவலி. மாத்திரை போட்டும் குறையலை. பின்னந் தலையில் 'விண் விண்'ன்னு வலி."

திலகவதி படபடத்தாள். "தலையை ஈரம் போக துவட்டியிருக்க மாட்டே. வா.. நான் சாம்பிராணி புகை போட்டு விடறேன். பால் சாம்பிராணி புகைக்கு தலைவலி காணாமே போயிடும்.."

"அதெல்லாம் வேண்டாம் அத்தே.. இன்னொரு மாத்திரை எடுத்துக்கிட்டா சரியாப் போயிடும்..."

"தலை ஈரம் காயாமே அதெப்படி தலைவலி சரியாப் போகும்...? போய் பூஜை ரூம்ல பண்டிலை வெச்சுட்டு நீ சமையல் கட்டுக்கு வா... ஒரு ரெண்டு நிமிஷம் புகையில் நின்னா போதும்... நான் தூபத்துக்கு ஏற்பாடு பண்றேன் வா..."

திலகவதி சமையல்கட்டை நோக்கிப் போக, கண்களில் நிறைந்து விட்ட நீரோடு யமுனா பூஜையறையை நோக்கிப் போனாள். மனம் கனத்தது.

'இப்படியொரு அத்தை எந்தப் பெண்ணுக்குக் கிடைப்பாள்...?'

இன்ஸ்பெக்டர் பால்பாண்டியனும் தற்கொலை செய்து கொண்ட லீலா கிருஷ்ணனும் நினைவில் ஒருகணம் மின்னிவிட்டுப் போக இதய மையத்தில் ஒரு குண்டூசி குத்தப்பட்ட நினுசில் வலி.

இன்விடேஷன் பண்டிலை வெங்கடாசலபதி படத்துக்கு முன்னால் வைத்தவள் அப்படியே மண்டி போட்டுக் கும்பிட்டாள். ஸ்ரீ வெங்கடேச ஸ்தோத்ரம் உதடுகளிலிருந்து வெளிப்பட்டது.

கமலா குசசூசுக குங்குமதோ
நியதாருணி தாதுல நீலத தோ
கமலாயத லோசந லோகபதே
விஜயீ பவ! வேங்கட சைலபதே!

ஸ்தோத்ரத்தை உச்சரித்து கண்களில் நீரோடு எழ முயன்றாள். தலைக்குள் ஏதுவோ சுழன்றது. கால்கள் பிடிப்பில்லாமல் நழுவ அப்படியே அறுந்த தோரணமாய்ச் சரிந்தாள்.

(தொடரும்)

KALKI SHOPPING PAGE

நடக்குமென் பார்


பிப்ரவரி 14 முதல் 20 வரை

மேஷம்



உங்களுக்கான கிரகங்கள் எல்லாம் நல்ல நிலையில இருக்கறதால இந்த வாரம் செம ஜாலிதான். முக்கியமானவங்க உங்களைத் தேடி வந்து பார்த்து திக்குமுக்காட வைக்கப் போறாங்க. அரசு அலுவலகங்கள்ல வேலை பார்க்கிற சிலருக்குப் பிரமோஷன் காத்திருக்கு. பணப் பிரச்னை சுத்தமா இல்லை. வீட்ல சுப நிகழ்ச்சி நடக்க சான்ஸ் இருக்கு. இதனால குடும்பத்துல குதூகலம் தலைவிரிச்சாடும். இருந்தாலும் சின்ன சின்னப் பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. ஜாக்கிரதை.

மிதுனம்



இதுவரை டென்ஷனாக்கிட்டு இருந்த பிரச்னைகள் இப்ப மாயமாகிடும். சுறுசுறுப்பா செயல்படுவீங்க. தொட்டதெல்லாம் பொன்னாகுங்கற மாதிரி எடுத்த காரியங்கள் எல்லாம் வெற்றிதான். பின்னால இருந்து உங்களை அட்டாக் பண்ண நினைச்சவங்க இப்ப ஜூட்! இருந்தாலும் தம்மாத்துண்டுப் பிரச்சனைகள் வந்து அடிக்கடி எரிச்சல்படுத்தும். புதிய துறைகள்ல எதுவும் முதலீடு செய்ய வேண்டாம். இருக்கற பணத்தைத் 'தாம்தூம்'னு செலவழிச்சிடாதீங்க. அப்புறம் உதட்டைப் பிதுக்கி கவலைப்பட வேண்டியிருக்கும். அரசியல்வாதிகள் அறிக்கைகளைப் பார்த்து விடுங்க.

சிம்மம்



உங்களோட புத்திசாலித்தனம் வெளிப்படற நேரம் இது. சிலருக்கு ஊதிய உயர்வு டிரான்ஸ்பர் புரமோஷன் கிடைக்க வாய்ப்பிருக்கு. துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் வந்து கதவைத் தட்டப் போகுது. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழும் பாராட்டும் கூடப் போகுது. வீட்ல சுப காரிய செலவுகள் இருக்கு. டூர், பார்ட்டி, ஜாலின்னு சுத்தற மாதிரியான சம்பவங்கள் வரும். மனசுல சின்னச் சின்னக் குழப்பங்கள் வரும். அலட்டிக்காதீங்க.

ரிஷபம்



மத்தவங்க பாராட்டுற மாதிரி எதையாவது நீங்க செய்வீங்க. பா.ம.க. அ.தி.மு.க. அணிக்குப் போனதால ஜெயலலிதாவுக்கு வந்த சந்தோஷம் மாதிரி மகிழ்ச்சில திக்குமுக்காடப் போறீங்க. கணவன் மனைவிக்குள் இருந்த உப்பு, புளி, மிளகாய்ப் பிரச்னை, இனி இருக்காது. கோர்ட் வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமா தீர்ப்பு வரலாம். அலைச்சல் அதிகமா இருக்கும். பயணத்தை இப்ப தவிர்த்திடறது நல்லது. வார்த்தைல உஷ்ணம் இல்லாம பேசறது நல்லது.

கடகம்



அப்பாடா! இதுவரை இருந்து வந்த பணப் பிரச்னை இப்ப இருக்காது. உங்க பர்ஸ் நிரம்ப பணம் வரப் போகுது. கொடுக்கல் வாங்கல்ல கவனமா இருங்க. வீட்டுல 'டும்டும்'க்கான சந்தர்ப்பம் கூடி வரும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்களுக்கெல்லாம் கற்பனைத் திறமை அதிகரிக்கும். மனசுக்குப் பிடித்தமான இனிய சம்பவங்கள் நடக்கப் போகுது. கோடீஸ்வரன் பணமழை மாதிரி அதிர்ஷ்ட வாய்ப்புகளும் இந்த வாரம் உங்களுக்கு உண்டு. செலவு எகிறும். பர்ஸ் பத்திரம்.

கன்னி



நீங்க எதிர்பார்த்துட்டிருந்த தகவல் வெளிநாட்டுல இருந்து வரப் போகுது. வீட்ல சுபகாரியங்கள் நடக்கறதுக்கான சந்தர்ப்பம் வரப் போகுது. பணப் பிரச்னை இருக்காது. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அடிக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குச் செழிப்பான நிலைதான். அப்பா அம்மா உடல் நலன்லயும் கொஞ்சம் கவனம் வையுங்க. வெளியூர் பயணம் போனா கவனமா இருங்க. திருட்டுப் போக வாய்ப்பிருக்கு.

துலாம்

இந்த வாரம் மனசுல ஏதாவது குழப்பம் இருந்துட்டே இருக்கும். கோபத்தைக் கொஞ்சம் ஆறப் போடறது நல்லது. எதிலயும் அவசரப்படாதீங்க. பேச்சில நிதானம் முக்கியம். கொஞ்சம் உடல் நலன்லயும் கவனம் வைக்க வேண்டியிருக்கும். அனாவசியமா வீண்பழி வந்து சேர வாய்ப்பிருக்கு. ரொம்ப ஜாக்கிரதையா நடந்துக்குங்க. எதிர்பாராத செலவுகள் வந்து இம்சை பண்ணும். வீண் அலைச்சலைத் தவிர்க்கறது நல்லது. கடவுளை நல்லா நேர்ந்துக்கங்க.

தனுசு

'அட இங்க பாரய்யா!' என்று நண்பர்கள் / நண்பிகள் ஆச்சர்யப்படற மாதிரி அழகா தெரியப் போறீங்க. இதுக்காக ஆயிரத்தெட்டு கிரீம்களை முகத்துல அப்பிட்டு அலையாதீங்க. டூர், பார்ட்டி, ஜாலின்னு ஜமாய்க்கப் போறீங்க. அதுக்காக ரொம்ப ஆட்டம் போடாதீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கும் உற்சாகமான வாரம்தான். பேச்சுல நிதானத்தைக் கடைபிடிக்கிறது நல்லது. கோபத்தைத் தவிர்த்துடுங்க. கொடுக்கல் வாங்கல்ல கவனமா இருங்க. புதுசா எதுலயும் இப்ப முதலீடு செய்ய வேண்டாம்.

கும்பம்

குடும்பத்துல ஒரு சுப காரியம் நடக்கப் போகுது. இதனால மனசு மகிழ்ச்சியில துள்ளும். நீங்க எந்தக் காரியத்தை எடுத்தாலும் அது வெற்றியடையும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டுக் கூடும். பெண்கள் புதுசா ட்ரெஸ், நகைகள், வாங்க சான்ஸ் இருக்கு. நெருங்கிய நண்பர்கள் உதவ முன் வருவாங்க. தாய் வழி உறவினர்கள் மூலமா நன்மை வரப்போகுது. அலைச்சல் அதிகமாகும். மக்கள் நலன்ல கவனம் வையுங்க. பெரியவங்க ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது.

நடக்கும்

விருச்சிகம்

குருவோட பார்வை உங்க பக்கம் திரும்பி இருக்கறதால ஆடம்பரப் பொருட்கள் வாங்க சந்தர்ப்பம் இருக்கு. சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு இது நல்ல நேரம். ஜமாய்க்கப் போறீங்க. அரசியல்வாதிகளோட செல்வாக்கு உச்சத்துக்குப் போகப்போகுது. சிலருக்குக் கட்சியில புதுப் பொறுப்புகள் தரப்படலாம். கணவன் மனைவி உறவு சீரா இருக்கும். பொருளாதாரம் திருப்தியா இருக்கும். பயணத்தைத் தவிர்க்கறது நல்லது.

மகரம்

எல்லா ராசியும் உங்களுக்கு ஆதரவா இருக்கறதால உங்க திறமை பளிச்சிடப் போகுது. வீட்ல விஷேசம் நடக்க வாய்ப்பிருக்கு. மனசுல துணிவும் தன்னம்பிக்கையும் எக்கச்சக்கமா அதிகரிக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்க பாராட்டு மழைல நனையப் போறாங்க. வேலை இல்லாதவங்களுக்கு வேலை வாய்ப்புக் கதவைத் தட்டப்போகுது. புதுசா சொத்து வாங்க வாய்ப்பிருக்கு. பொருளாதாரம் திருப்தியா இருந்தாலும் செலவை இறுக்கிப் பிடிக்கறது நல்லது. வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். மனசுல எப்பவாவது குழப்பம் வந்து டென்ஷன் பண்ணும். அமைதியாச் செயல்படுங்க.

மீனம்

உங்க திறமை வெளிப்படற நேரம். புகழ் பாராட்டு கூடும். அரசியல்வாதிகளுக்கு நல்ல வரவேற்பு உண்டு. எதிரிங்க விலகிப் போவாங்க. கூடப் பிறந்தவங்களால உங்களுக்கு நன்மை வரப் போகுது. அதே மாதிரி உங்களாலயும் அவங்களுக்கு நல்லது நடக்கப் போகுது. பெண்கள் உற்சாகமான நிலைக்குப் போவாங்க. கொடுக்கல் வாங்கல் விவகாரத்துல கவனமா இருங்க. பயணம் தொடர்பான விஷயங்கள்ல ரொம்ப கவனம் வேணும். அலைச்சலைத் தவிர்க்கறது நல்லது.

அக்னி சர்மா பக்கம்

கல்யாணபுரம் ஆராவமுதன்

ஸ்ரீ ராமபிரான் தன் அவதார காலம் முடிந்து மண்ணுலகை விட்டு வைகுந்தம் செல்லப் புறப்பட்டுவிட்டான். ஹனுமான் அவனோடு செல்ல மறுக்கிறான்! ராமநாமம் இல்லாத வைகுந்தத்துக்குப் போய் என்னத்தைச் செய்வது!

''நான் இங்கேயே உன் நாமத்தை ஜபித்தபடி இருக்கிறேன்'' என்கிறான் ஸ்ரீ ராமனிடம்.

''ஆஞ்சனேயா! உன் விருப்பப்படியே ஆகட்டும். இந்த கல்பம் முடியும்வரை நீ சிரஞ்சீவியாக வாழ்ந்து முடிவில் வைகுண்டம் வந்து சேருவாய்!'' என்று கருணையுடன் சொன்னான் ஸ்ரீ ராமன்.

அவ்வளவுதான்! ஹனுமான் ஒரேயடியாகக் கலவரமாகி விட்டான்.

''ஹே ராமா! அத்தனைக் காலமும் நான் எப்படி உன்னைப் பாராது இருப்பேன்...?'' என்று கண்ணீர்ப் பெருக்குடன் கேட்டான்.

ஸ்ரீ ராமன் எல்லையற்ற கருணையுடன் அவனுக்குப் பதில் சொன்னார்:


''வருந்தாதே, ஆஞ்சனேயா! சேது அணையைக் காவல் காத்து வா. துவாபர யுகத்தின் முடிவில் உனக்கு நான் காட்சி அளிப்பேன்.''

இதைக் கேட்ட ஹனுமான் ஒரு நிபந்தனை விதித்தான்.

''ஸ்ரீ ராமா! நீங்கள் எனக்குக் காட்சியளிக்கும்போது தேவியுடன் சீதாராமனாக தரிசனம் தர வேண்டும்.''

''அப்படியே ஆகட்டும்'' என்றான் ஸ்ரீ ராமன்.

ராமபிரான் நியமித்தபடி சேதுக் கரையில் ஹனுமான் அமர்ந்து ராம





ஸ்ரீ ராமபக்த ஹனுமான்

29

நாமத்தை ஜபித்து வந்தார்.

ஒரு சமயம் அர்ஜுனன் அங்கே தீர்த்த யாத்திரையாக வந்தான். சமுத்திரத்துக்குக் குறுக்கே கட்டப்பட்டிருந்த சேது அணையைக் கண்டான். பார்த்தவன் தனக்குத்தானே உரக்கப் பேசிக் கொண்டான்.

"ஹும்! ராமனும் ஒரு வீரனா! அவன் மட்டும் சிறந்த வில்லாளியாக இருப்பானாகில் இப்படிப் பாறைகளைக் கொண்டு பாலம் அமைத்திருப்பானோ...? பாணங்களால் அல்லவா அவன் பாலம் கட்டியிருப்பான்...!"

அருகிலேயேதான் அமர்ந்து ராமநாம ஜபம் செய்து கொண்டிருக்கிறான் ஹனுமான். அர்ஜுனன் பேசியது அவன் காதில் விழுகிறது. விழுந்ததோ இல்லையோ, ஏகமாய்க் கோபம் வருகிறது அவனுக்கு! 'தனது பிரபுவான ராமபிரானை ஒருத்தன் இப்படித் தரக்குறைவாக விமர்சிப்பதா!' என்று கொடூரமான கோபம்!

உடனே அர்ஜுனனை அணுகி, "யாரப்பா, நீ? என் பிரபு ராமனைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? பாணங்களால் பாலம் என்று ஏதோ சொன்னாயே...? உன்னாலே அப்படியொரு பாலத்தை அமைத்துவிட முடியுமா...? அவ்வாறு நீ அமைக்கிற பாலம் என் ஒருவனைத் தாங்குகிறதா என்று முதலில் பார்ப்போம்..." என்று சவால் விடுகிறான்.

அர்ஜுனனுக்குக் கோபம் வரக் கேட்பானேன்...? 'ஒரு குரங்கு தன்னிடம் சவால் விடுவதா!' என்று ரௌத்திரமாகிறான்.

உடனே தனது காண்டீபத்தை எடுத்துச் சரம்சரமாக அம்புகளைத் தொடுத்து, அவற்றைக் கொண்டே ஒரு பாலத்தை அமைத்துவிடுகிறான்.

'இப்போது என்ன சொல்கிறாய்!' என்பது போல் ஹனுமானை ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கேட்கிறான்:



"ஏய் குரங்கே! இதன் மேல் ஏறி நிற்பாயா? இந்தப் பாலத்தின் பலத்தைச் சோதித்துவிடலாம்..."

ஆஞ்சனேயனும் அந்தப் பாலத்தின் மேல் ஏறி நிற்க, அது அப்படியே உடைந்து விழுந்து விட்டது!

அர்ஜுனனுக்கு அதிர்ச்சி ஒருபுறம் அவமானம் மறுபுறம்! குறுகிப் போய் மனமுடைந்து 'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என்று புலம்புகிறான். "என்னைக் கைவிட்டுவிட்டாயே கிருஷ்ணா!" என்று அரற்றுகிறான்.

அந்த சமயத்திலே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஒரு வயோதிகன் ரூபத்தில் வந்து அர்ஜுனனைப் பார்த்தார். "யாரப்பா நீ? எதற்காக இப்படிச் சோகமே உருவாய் காட்சியளிக்கிறாய்?" என்று கேட்டார்.

நடந்த கதையெல்லாம் எடுத்துச் சொன்னான் அர்ஜுனன்.

"அப்படியா! இதுபோன்ற போட்டியென்றால் நடுவர் ஒருவரை வைத்துக் கொள்வது அவசியம் அல்லவா... இதோ! நான் நடுவராக இருக்கிறேன். என் எதிரே நீயே மீண்டும் அம்புச்சரங்களால் சேதுவைக் கடக்க ஓர் அணையைக் கட்டு பார்க்கலாம்..." என்றார்.

அதன்படியே அர்ஜுனன் மீண்டுமொரு அணை கட்டினான்.

கிழவர் ஆஞ்சனேயரை அழைத்தார். "இந்த அணைமேல் ஏறிப்பார்..." என்று பணித்தார். ஹனுமானும் அந்த அணை மேலே ஏறி நடந்து, ஓடி, குதித்து, தாவி... துவம்சம் செய்ய முயன்றான். என்ன செய்தும் அணைக்கு எந்த பாதிப்பும் இல்லை!

உடனே ஹனுமான், "ஹே ராமா! இது என்ன சோதனை!" என்று வருத்தத்தில் அரற்றினான்.

அந்தக் கணத்தில்... எதிரே நின்ற முதியவர் மாயமாக மறைந்திருந்தார். அவரிடத்திலே, அர்ஜுனனுக்கு ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவும் ஆஞ்சனேயனுக்கு ஸ்ரீராம பிரானும் ஒரு சேரக் காட்சியளித்தார்கள்!

ஆஞ்சனேயர் அடைந்த ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை.

பகவான் ஹனுமானைப் பார்த்து அர்ஜுனனை அறிமுகப்படுத்துகிறார்:

"ஆஞ்சனேயா! இவன் என் அன்பன் அர்ஜுனன்."

அறிமுகம் செய்துவிட்டுத் தொடர்கிறார்: "பாரத யுத்தத்தில் இவனுக்கு நான் சாரதியாக இருக்கப் போகிறேன். இவனுடைய தேரில் உள்ள கொடியில் நீ கொலுவிருந்து இவன் வெற்றிக்குத் துணை செய்வாயாக..."

"பிரபோ! இது என் பாக்கியம்!" என்று அர்ஜுனனை ஆரத் தழுவிக் கொண்டான் ஹனுமான்!

அந்த இரண்டு மாபெரும் வீரர்களும் ஒருத்தரையொருத்தர் தழுவிக் கொண்ட காட்சி எப்பேர்ப்பட்டதாக இருந்திருக்கும்!



அர்ஜுனனின் கொடியில் இடம் பெற்றான் ஆஞ்சனேயன். அதை சத்குரு தியாகராஜர் எத்தகைய அழகோடு பாடுகிறார் பாருங்கள்:

கீதார்த்தமு ஸங்கீதாநந்தமு
நீதாவுந ஜூடரா ஓ மனஸா
(கீதா)
ஸீதாபதி சரணாப்ஜமு விடுகொந்த
வாதாத்மஜுநிகி பாக தெலுஸுரா.
(கீதா)

இதன் அர்த்தம் இதுதான்:

'ஏ மனமே! பகவத் கீதையின் அர்த்தத்தையும் சங்கீதத்தின் ஆனந்தத்தையும் ஒருசேர உன்னிடமே நீ காண்பாயாக. ஸீதாபதியான ராமபிரானின் திருவடித் தாமரைகளைத் தனது ஹ்ருதயத்திலே தாங்கியிருக்கும் ஸ்ரீராமபக்த ஹனுமானுக்கு இந்த அனுபவ ஆனந்தம் உண்டு. அதைப் போல் நீயும் அடைவாயாக...'

சங்கீத ரஸிகன், உபாஸகன் ஹனுமான் என்பதைப் பார்த்திருக்கிறோம். சங்கீதானந்தத்துடன் கீதார்த்தத்தையும் முற்றிலுமாக அவன் அறிந்தது எப்படி என்று கேட்டால், அர்ஜுனனின் தேர்க்கொடியில் அமர்ந்தபடி அந்தப் பரமாத்மா அருளிய பகவத் கீதை மொத்தத்தையும் கேட்கிற பாக்கியம் அவனுக்கு வாய்த்ததே!

அதே மஹாபாரதத்தில் இன்னொரு நிகழ்ச்சி....

அர்ஜுனன் பாசுபதாஸ்திரத்தைப் பெறுவதற்காகத் தவமியற்றப் போய்விட்டான். தருமர் பீமன் முதலானவர்கள் காட்டிலே

இருந்தார்கள். அப்போது சௌகந்திகா புஷ்பம் ஒன்று காற்றிலே பறந்து வந்தது. அதை எடுத்து முகர்ந்து பார்த்த திரௌபதி அதுபோன்ற புஷ்பங்கள் தனக்கு வேண்டும் என்று கேட்கிறாள்.

பீமன் புறப்பட்டுப் போகிறான். சௌகந்திகா புஷ்பத்தின் நறுமணம் வருகிற திசையில் தேடி வெகுதூரம் போய்விடுகிறான்.

வழியிலே, குறுக்காக ஒரு கிழக் குரங்கு நீட்டிப் படுத்திருக்கிறது!

"ஏ குரங்கே! வழியை விடு!" என்கிறான் பீமன்.

"நீ யாரப்பா? என்னை இந்த விரட்டு விரட்டுகிறாய்?"

"நான் பெரிய வீரன்! ஒரு விலங்கைத் தாண்டலாகாது என்பதால் பொறுமையாக உன்னிடம் பேசுகிறேன். என் கால் சுண்டு விரலால் தள்ளினால் நீ பல காத தூரம் தாண்டிப் போய் விழுந்துவிடுவாய் தெரியுமா!"

படுத்திருந்த வானரம் ஓரக் கண்ணால் ஒரு பார்வை பார்த்தது பீமனை.

"அப்படியா செய்தி! நீயே என் வாலைச் சற்று நகர்த்திவைத்துவிட்டு உன் வழியில் தொடர்ந்து போய்க் கொள்ளலாமே..." என்றது.

பீமன் மிகுந்த அலட்சியத்துடன் அந்த வாலை நகர்த்த முற்பட்டான். அசைக்கவே முடியவில்லை. முயற்சி முழுவதையும் திரட்டிச் செயல்பட்டான். அப்போதும் முடியவில்லை.

அவனுக்கு ஒரு புறம் வியப்பான வியப்பு. இன்னொரு புறம் தாளாத அவமானம், கோபம்!

"ஏய் குரங்கே! நீ யார்?" என்று ஓர் அதட்டுப் போடுகிறான்.

"நான் ஆஞ்சனேயன்; ராம பக்தன்!"

அவ்வளவுதான்! "அண்ணா! தாங்களா?" என்று காலில் விழுந்து விடுகிறான். "நானும் வாயு குமாரன்-பீமன்" என அறிமுகம் செய்து கொள்கிறான்.

ஆஞ்சனேயனுக்குத் தாளவொண்ணாத மகிழ்ச்சி. பாரதப் போரில் அர்ஜுனனின் தேர்க் கொடியில் வீற்றிருக்க தனக்குக் கட்டளை வந்திருப்பதைச் சொல்லி பீமனை ஆரத் தழுவுகிறான்.

"இதற்குமேல் உன்னால் இவ்வழியே செல்ல இயலாது. யக்ஷர்களும் கந்தர்வர்களும் காவலிருப்பார்கள். நான் போய் சௌகந்திகா புஷ்பத்தைக் கொண்டு வருகிறேன்..." என்று பீமனை இருக்கச் சொல்லி விட்டு ஹனுமான் போய்ப் பூவைக் கொண்டு வருகிறான்!

துவாரகையில் இருந்த சமயம், பலராமன், ஸத்யபாமா இருவரது கர்வத்தையும் ஹனுமானைக் கொண்டே போக்குகிறான் பரமாத்மா. அந்த சமயத்திலே ருக்மிணி சமேத கிருஷ்ணன், ஆஞ்சனேயனுக்கு சீதாராமனாகவே காட்சியளிக்கிறான்.

இப்படி யுகந்தோறும் ஸ்ரீ சீதா ராமனை தரிசிக்கும் பாக்கியசாலியான ஹனுமான், ஒரு ராமாயண கதாபாத்திரம் என்று சாமானியமாகச் சொல்லிவிடக் கூடியவனல்ல.

வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டிய ஜீவபுருஷன்; அசஞ்சல பக்தன். 'சிரஞ்சீவியாக நீ இருப்பாய்' என்று ஸ்ரீ ராமன் அவனை ஆசிர்வதித்ததுதான் எத்தனை பொருத்தம்! யுக யுகத்துக்கும் ஆதர்ச குணவானாக, உதாரண புருஷனாக விளங்கி, மாயா மோகங்களில் உழலும் மனிதர்களை வழிபடுத்தி ஸ்ரீ ராமனின் சரணாரவிந்தங்களில் கொண்டு சேர்ப்பவன் அல்லவா அந்த ஸ்ரீ ராம பக்த ஹனுமான்!

(நிறைந்தது)

கல்யாணபுரத்தில் ஆஞ்சநேயர்

திருவையாறுக்கருகில் காவிரி, குடமுருட்டி ஆகிய இரு நதிகளுக்கு இடையில் அமைந்துள்ள அழகான கிராமம் கல்யாணபுரம். அங்கு உறைகின்ற ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஆலயம் மிகவும் புராதனமானது. ஆண்டுதோறும் பல உத்ஸவங்கள் நடைபெறுகின்றன. அதில் குறிப்பாக கடந்த 60 ஆண்டுகளாக நடைபெறுவது கல்யாண உத்ஸவம். வைதீக முறைப்படி 5 நாட்கள் ஔபாஸன ஹோமங்களுடன் நடைபெறும் உத்ஸவம் இது.

திருவையாறில் வாழ்ந்த ஸத்குரு தியாகராஜஸ்வாமி தினசரி தனது உஞ்சவ்ருத்தியின்போது இக்கோவிலுக்கு விஜயம் செய்வது வழக்கம்.

இங்கு உறைகின்ற பக்த ஆஞ்சனேயர் வரமருளும் வள்ளல்– இவருக்கு வடைமாலை சாற்றுவதாகப் பிரார்த்தித்துக் கொண்டோர் தங்கள் காரியம் சித்தியடைந்து மகிழ்வது கண்கண்ட உண்மை– ஹனுமத் ஜயந்தி ஆண்டு தோறும் விமரிசையாக நடைபெறும்.

ஒரு கம்பலனின் பொன்மொழி!



குழந்தைகளை வெறுக்கும் எவனோ ஒரு கம்பலன், 'Children are comfort to us in our old age and then help us reach it faster too' என்று சொல்லி விட்டுப் போனான்.

ஆனால் பெற்றோரையும் மற்றோரையும் சந்தோஷப் படுத்துகிற குழந்தைகள்தான் நாடு முழுவதும் நிறைந்திருக்கிறார்கள். சந்தேகமாயிருந்தால் ஸ்டார் ப்ளஸ்ஸில் ஹர்ஷா போக்ளே நடத்தும் ஸ்போர்ட்ஸ் ஒலிம்பியாட் நிகழ்ச்சிகளைப் பாருங்கள். பங்கு கொள்ளும் மாணவ மாணவிகள் ஹர்ஷாவின் புதிர்க் கேள்விகளுக்குப் பளிச்சென்று பதிலளிப்பதைக் கவனியுங்கள். விடை சரியாயிருந்தால் ஒருவரையொருவர் கைதட்டிப் பாராட்டிக்கொள்வதையும், தப்பாகி விட்டால் உதட்டைப் பிதுக்குவதையும், அரங்கம் நிறையக் குழுமியிருக்கும் மற்றக் குழந்தைகள் ஆரவாரம் செய்து குதூகலிப்பதையும் காணும்போது ஏற்படுகிற புத்துணர்ச்சி எத்தனை வைட்டமின் மாத்திரைகளை விழுங்கினாலும் ஏற்படாது.

அன்றைய நிகழ்ச்சியில் ஒரு எக்ஸ்ட்ரா சந்தோஷம். கொச்சி குழந்தைகளும் பெங்களூர் பிள்ளைகளும் கலந்து கொண்டபோதும் நம்ம சென்னை செட்டிநாடு பள்ளியின் மாணவர்கள்தான் வானளாவக் கொடி கட்டிப் பறந்தார்கள்.

க்ரோர்பதிக்காரர் பண்பாடுள்ளவர்தான். 'கோன்



ரிமோட்

பனேகா'வைக் கண்ணியமாக நடத்துகிறவர்தான். ஆனால் பச்சனுக்காகக் கேள்வி தயாரித்துத் தருபவர்களில் சில கொச்சையான பேர்வழிகளும் இருப்பார்கள் போலும். Less mature than one would expect.

சென்ற வாரம், 'பங்களாதேஷ் பிரதம மந்திரி ஹசீனாவின் அப்பா யார்?' என்று ஒரு கேள்வி. நான்கு பெயர்களைக் கொடுத்து, இவரா, இவரா, இவரா, இவரா என்று கேட்டது A. அநாகரிகம் B. அக்கிரமம் C. அருவருப்பு D அசட்டுத்தனம். எது சரி? எல்லாமே சரி.

நல்ல காலம், கோடியைத் தேடி வந்த ஒரு நல்ல மனிதர், முஜிபூர் ரஹ்மான் என்ற சரியான பெயரைச் சொல்லி அசிங்கம் நேராமல் காப்பாற்றினார்.

'There are two things in life that you can look at forever. One is the sea and the other is the elephant' என்று கேரளாக்காரர் ஒருவர் ஒரு பத்திரிகையில் எழுதியிருந்தார். மூன்றாவது ஒன்று உண்டு: 'சந்திரலேகா' படத்தின் க்ளைமாக்ஸில் வரும் அந்த ட்ரம் டான்ஸ். (ஸன் டீவியில் மூன்றரை மணி நேரப் படம்.)

கையைச் சொடுக்கினால் எல்லா கிராஃபிக்ஸ் வித்தையையும் காட்டிவிட முடிகிறது இப்போதெல்லாம். ஆனால் ஐம்பது வருடத்துக்கு முன்னால் எப்படித்தான் செய்தார்களோ இப்படியொரு அற்புதத்தை! பிரமாண்டமான செட் போட்டது இருக்கட்டும். காமெரா எந்தக் கோணம் போனாலும், ட்ரம்களின் மீது ஆடும் டஜன்கணக்கான குமரிகளின் வளைவுகளில் கடுகத்தனை கோணல்? ஊஹூம் பிரமிக்கப் பண்ணும் choreography.

கல்யாணத்துக்கு நான் ரெடி. நீங்க ரெடியா?

– சரத்குமார்

ஓ! நான் எப்பவோ ரெடி.

– ராதிகா

வினோத்





திடுக்கிடும் தகவல்கள்!

தமிழ்த் தீவிரவாதத்துக்கு அமெரிக்க அமைப்பின் ஆதரவு!

தீவிரவாத இயக்கமான தமிழ் தேசிய விடுதலைப் படை இணைய தளம் (வெப் சைட்) துவக்கி அதில் வன்முறையைத் தூண்டி விட்டு தலித் தமிழ்நாடு பிரசாரத்தைச் செய்து வருகிறது என்ற செய்திகள் அடிபட்டன...

உடனே மத்திய மாநில அரசுகள் அந்த இணைய தளம் இந்தியாவில் தடை செய்யப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்று அறிவித்தன.

இதற்கிடையில் விடுதலைப்படை தீவிர வாதிகள் வீரப்பனோடு இணைந்து செயல் படுவதும் அம்பலமானது. இதன் தலைவன் மாறன், வீரப்பனுடன்தான் காட்டில் சுற்றித் திரிகிறான் என்று ஒரு தகவல் சொல்கிறது. இல்லை, அவன் வெளியே தலைமறைவாக இருக்கிறான் என்றும் சொல்கிறார்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர், இந்த இயக்கத்தைத் தடை செய்யக் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியது. ஆனால் மத்திய அரசு இதுவரை தடை யேதும் போடவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் தேசிய விடு தலைப் படையின் இணைய தளமான www.dalistan.org/tamilஐ நடத்துவது யார் என்ற தகவல்கள் கிடைத்துள்ளன. அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள பான் நீக்ரோ என்ற இயக்கத்தினரால்தான் இந்தத் தளம் நடத்தப்படுகிறது. இந்த இயக்கத்தின் சூத்திரதாரியாக இருப்பவர் ஹெலன் ஹூக் லூந்து என்ற கறுப்பர் பெண்மணி.

'சர்வம் நீக்ரோ மயமாக்கல்' என்ற கொள்கையுடையது இந்த இயக்கம். நீக்ரோக் களும் தமிழர்களும் ஒரே இனம் என்பது இவர்கள் வாதம். எனவே ஆரிய மக்களிடம் 'அடைபட்டுக் கிடக்கும்' தமிழக மக்களை - குறிப்பாக தலித் மக்களை விடுதலை பெறச் செய்ய வேண்டும், தலித் தமிழ் நாடு அமைக்க வேண் டும் என்ற அடிப் படையால் தமிழ்நாட் டிலுள்ள சிறு சிறு தலித் இயக்கங்களைத் தொடர்பு கொண்டு செயல்படுகிறது இந்த பான் நீக்ரோ இயக்கமும் இதனுடன் சேர்ந்து செயல்படும் 'பிளாக் சர்ச் மூவ் மெண்ட்' என்ற அமைப்பும்.

இந்தியாவில் நமது இனத்தை அழிக்க நினைக்கின்றன 'இந்துத்வா' அமைப்புகள். எனவே நாம் தலித் மக்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்று நிதியும், தார்மிக ஆதரவும் கொடுத்து வருகிறது இந்த பிளாக் சர்ச் அமைப்பு.

பான் நீக்ரோ அமைப்பின் முக்கிய குறிக்கோள் இந்தியாவில் - குறிப்பாக தமிழ் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆங்காங்கே வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க வேண்டும் என்பது தானாம். அப்போது ஏற் படும் ஸ்திரமற்ற தன்மையைப் பயன்படுத்தி, வன் முறை கொள்கையுடைய தலித் இயக்கங் கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள எதற்கும் துணிவார்களாம்.

சமீபத்தில் பாண்டிச்சேரியில் இந்த இயக்கத் தைச் சேர்ந்த கணவன் - மனைவி கைது செய் யப்பட்டார்கள். அவர்கள் வைத்திருந்த டயரி யில் ஹிட் லிஸ்ட் என்று குறிப்பிட்டு சில தமி ழக தலைவர்களின் பெயர்கள் இருந்தன.

பெங்களூரில் இருந்து வெளிவரும் 'தலித் வாய்ஸ்' என்ற பத்திரிகைக்கும், பான் நீக்ரோ இயக்கத்துக்கும் தொடர்பு இருப்பதாகச் சொல் கிறார்கள். அந்தப் பத்திரிகை ஆசிரியர் குழு வில் தலித் எழில்மலையின் பெயரும் இருந்தது. மத்தியில் அமைச்சரான பின்பு பெயரை எடுத்து விடுமாறு எழில்மலை கேட்டுக் கொண் டாராம். மத்திய மாநில புலனாய்வு வட்டாரங் கள் அதிர்ச்சியடைந்துள்ளன. இந்தத் தொடர்பு களைத் துவக்கத்திலேயே கிள்ளி எறியவும் வேலைகளைச் செய்யத் துவங்கியிருக்கின்றன.

- சஞ்சயன்

கேதாரிக்கு இருப்பு கொள்ளவில்லை. உரலை விழுங்கி விட்டு உப்பில்லா பத்தியம் இருப்பவரைப் போல, தவியாய்த் தவித்தார். பின்னே என்ன... அஜய்யிடமிருந்து பதில் வராமல் மகள் ஏமாந்து விடக்கூடாதே என்று, இவர்பாட்டுக்கு ஒரு ப்ரவுசிங் சென்டருக்குப் போய் அஜய் அனுப்பியதாக, புதிதாக ஓர் இணைய முகவரி கொடுத்து, மகளின் அலுவலக வெப்சைட்டுக்கு மெயில் அனுப்ப...

குழந்தை பாவம்.. ஏமாந்து போய், இப்படித் தனக்குள் மகிழ்ந்தும் அப்பாவுக்கு ஸ்னோஃபீல்டில் பர்ஷியன் டிலைட் வாங்கிக் கொடுத்தும், கொண்டாடுவதைப் பார்க்கையில் - வயிற்றுக்குள் புளியைக் கரைக்கிறது.

அது சரி... 'இந்தப் பிள்ளையாண்டான் பரீட்சைக்கு எழுதுவது போல, எழுதி எழுதி பறக்கவிட்ட லவ் லெட்டர்- காதல் கடிதாசு - ப்ரேம லிகிதம் இதெல்லாம் எங்கே போயிற்று... யாருக்குப் போயிற்று?'

கண்டுபிடிக்காவிட்டால் தலையே சுக்கு நூறாய் வெடித்து விடும் போல.

'எல்லாவற்றுக்கும் மேலே கடிதத்தைப் பார்த்தவன் பதிலுக்கு என் தேவதை போன்ற பெண்ணிடம் ஒரு முத்தத்தைக் கூட பறக்க விடாமல் பெங்களூருக்குப் பறந்து விட்டானாமே.. அப்படி என்ன வைத்து வாழுகிறது அங்கே.'

கேதாரிக்கு எரிச்சல் மண்டுகிறது.

கம்ப்யூட்டரும், பிசினஸ் மேனேஜ்மெண்ட்டும் தெரிந்த அளவுக்கு இந்தக் காலத்துப் பையன்களுக்கு ரொமான்ஸ் நாலெட்ஜ் இல்லை என்கிற முடிவுக்கு வந்தே விட்டார் அவர்.



அதற்கு மேல் அவரது தேகம் வீட்டிலிருக்க அனுமதிக்கவில்லை. நேரே ஈஸ்வரன் தம்பதியைப் போய்ப் பார்த்து கொஞ்

17 இனிமேல் ஆரம்பம்

சம் பேசி விட்டு வந்தால் தேவலை என் பதைப் போல...

அவர் ப்ரீத்திக்கு தெரியாமலேயே - ஈசுவரன் மீனாட்சியை சந்திக்க கையில் லேட்டஸ்ட் சங்கீத கேசட்ஸ் சிலவற்றுடன், அவருக்கென்றே லஸ் சிதம்பரம்சாமி தோட்டம் தெருவில் ஸ்பெஷலாக ஒரிஜினல் நெய்யில் ஸ்வீட் போட்டுத் தரும் மனிதரிடம் போய் உட்கார்ந்து, அவசரமாய் இரண்டு கிலோ பாதுஷாவும், காராசேவும் சுடச்சுட வாங்கிக் கட்டிக் கொண்டு கிளம்பி விட்டார்.

இவர் போன சமயம் ஈசுவரன் 'ஹாய்' யாக வாசல் வராண்டாவில் அமர்ந்து, மத்தியான காப்பியை ருசி பார்த்துக் கொண்டிருக்க பக்கத்திலேயே அனுசரணையாய் மீனாட்சி, காப்பியைப் பதமாக ஆற்றி, கொஞ்சம் கொஞ்சமாக தம்ளரில் விட்டுக் கொண்டிருக்க...

அடடா... கண் கொள்ளாத காட்சி.

அந்த இடத்தில் மானசீகமாக அஜய்யையும், தன் மகளையும் நிறுத்தி வைத்துப் பார்த்தார் கேதாரி. கண்களும் மனசும், ஒருசேர நிரம்பித் தளும்பின.

''அடடே... வாங்கோ வாங்கோ... உங்களைப் பத்தி நினைக்காத நாளில்லே.''

ஈசுவரனின் குரல் உற்சாகத்தில், தனது வழக்கமான சுருதியைக் காட்டிலும், ஒரு கட்டை உயர்வாகவே ஒலித்தது. மீனாட்சியின் பார்வை - கேதாரியின் முதுகுக்குப் பின்னால் யாரையோ தேடியது.

"ப்ரீத்தி வரலையா?"

கேதாரி இந்தக் கேள்விக்கு மிக சாமர்த்தியமாகச் சமாளித்தார்.

"நன்னாயிருக்கு போங்கோ... அவ இந்த நேரத்துல ஆபீசுலே இருப்பா. சாதாரணமா பாஸ் இருக்கற சமயத்திலேயே அவ லீவு போட மாட்டா. இப்போ அவர் வேற ஊர்ல இல்லே போலிருக்கே. நான் வாரா வாரம் இங்கே பக்கத்துலே ஒரு இடத்துல ஸ்வீட் காரம் பண்ணித் தரச் சொல்லி வாங்கிட்டுப் போவேன். அப்படியே புது கேசட்ஸ் ஏதாவது வந்திருக்கான்னு ஒரு ரவுண்ட் கேஸட் கடைப்பக்கம் சுத்திட்டு வருவேன். அப்படி போனப்போ இந்தத் தடவை சார் ஞாபகம் வந்தது. சரி, வழியிலேதானே இருக்கு வீடு. போய்ப் பார்த்து விசாரிக்கறதுலே தப்பு இல்லேன்னு உள்ளே நுழைஞ்சுட்டேன். ப்ரீத்திக்குத் தெரிஞ்சா - என்னைக் கொன்னே போட்டுடுவா. அவ எல்லாம் இங்கிலீஷ்காரா மாதிரி... ஒரு இடத்துக்குப் போகணும்னா - அப்பாயின்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணிக்காம போகவே கூடாதும்பா. நான் அந்தக் காலத்து மனுஷன். மனசுல தோணினா உடனே செஞ்சுடணும்."

ஈசுவரன், சந்தோஷமாய்த் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

"பேஷா... நம்ம வீட்டுக்கு வர்றதுக்கு எதுக்கு அப்பாயிண்ட்மெண்ட்டும், ஃபார்மாலிட்டியும்..."

"நீங்க சொல்றேள். இந்தக் காலத்துக் குழந்தைகளுக்குப் புரியமாட்டேன்கிறது. ஆனாலும் ஒரு சின்ன சந்தேகம்."

"என்னது?"

"ஏகாந்தமா மாமியோட உட்கார்ந்திருந்தேள். பூஜை வேளை கரடியாய் வந்துட்டேனா?"

கேதாரி, தனக்கே உரிய குறும்புடன் அப்பாவிப் பார்வை பார்த்தபடி கேட்க - ஈசுவரன் பத்து வயசுப் பையன் மாதிரி கைகளைக் கொட்டிச் சிரித்தார்.

"சரிதான் போங்கோ. இங்கே 24 மணி நேரமும் பூஜைதான். அதெல்லாம் பார்த்தால் முடியுமா? மீனாட்சி... சாருக்கு காப்பி கொண்டாயேன். எங்கே மீனாட்சி?"

அனுராதா ரமணன்

அவர் தனக்குப் பின்னால் திரும்பிப் பார்த்துத் தேட, கேதாரி அவர் அருகில் நெருக்கமாக நாற்காலி போட்டு அமர்ந்து, சிரித்தபடி சொன்னார் –

"நீங்க சொல்றதுக்கு முன்னாலேயே மாமி உள்ளே போயாச்சு. காப்பி வாசனையிலே இருந்தே தெரிகிறது. இங்கே எப்படி.... பீபரியும் ப்ளாண்டேஷன் 'ஏ'யும் சரிபாதியாய்க் கலந்து வறுத்து அரைக்கறதுதானே வழக்கம். அதோட வறுக்கறப்பவே ஒரு டீஸ்பூன் சர்க்கரையையும் அதுலே தூவிட்டா, காப்பி கொட்டை படபடன்னு பொரிஞ்சு, நிருநிருன்னு மலை ஜாதி பொண்ணு மாதிரி வசீகரமா இருக்கும். டிகாக்ஷனும் படு ஸ்ட்ராங்கா இருக்கும். ஆனா இந்தக் காலத்துலே யார் வீட்டுல காப்பி கொட்டை வறுக்கறா..."

– இப்படி ஆரம்பித்த பேச்சு, எங்கெங்கோ போய் குஜராத் நடுக்கத்தை ஆராய்ந்து, ஐஸ்வர்யாராய் – சல்மான்கான் காதல் பற்றிப் பேசி, சங்கீத சீசனை விமர்சித்து, கன்னட ராஜ்குமார் சென்னை வந்தது பற்றி கருத்துப் பரிமாறி, கடைசியில் அஜய் பெங்களூர் போயிருக்கும் விஷயத்தில் வந்து நின்றது.

"என்ன திடீர்னு உங்க பிள்ளை பெங்களூருக்குப் போயிருக்காராமே... நேத்து சாயந்திரம் ப்ரீத்தி என்கிட்டே சொல்லிச் சொல்லி மாய்ஞ்சு போனா. திடீர்னு கிளம்பிட்டார் அப்பா. ஆபீஸ்லே எல்லாரும், உனக்கு முன்னாலேயே தெரியாதான்னு கேட்கறாங்க. எனக்கே தெரியாதுன்னு சொன்னா நம்ப மாட்டேன்கறாங்கன்னு..."

ஈசுவரன் பெருமூச்செறிந்தார். காப்பி கொண்டு வந்த மனைவியைக் கடைக் கண்ணால் பார்த்தபடியே கேதாரியிடம் கூறினார்.

"ஆமா, அவன் இப்போ பெங்களூர் போயிருக்கறதுதான் எங்க கவலையே."

"கவலையா? இப்போ அங்கே எந்தக் கலவரமும் இல்லே சுவாமி. எல்லாம் சகஜ நிலைக்கு வந்தாச்சு."

கேதாரிக்குத் தெரியும்; எப்படி வார்த்தையைப் போட்டால் விஷயம் வெளியே வரும் என்று. அவரது எதிர்பார்ப்பு வீண் போவது இல்லை. ஈசுவரன் விஸ்தாரமாக கேசவ்ராம் பற்றியும், அவர் மகள் சுஜா பற்றியும், அஜய்க்கும் சுஜாவுக்கும் இடையில் நெருக்கமான காதல் பற்றியும், அதற்கு இந்தப் பக்கம் பச்சைக் கொடி காட்டியும், அந்தப் பக்கம் கேசவ் இதற்குச் சம்மதம் கொடுக்காததுடன் ஏற்கெனவே தனது பல லட்சங்களை விழுங்கி ஏப்பம் விட்டது மட்டுமல்லாமல், இப்போது மகளையும் அடக்கி வைத்திருப்பதையும் சொல்கிறார். அவருக்குத் தொண்டை கம்மிய இடத்தில், கூடவே சேர்ந்து பாடும் பிரதம சிஷ்யை போல மீனாட்சி, அவர் விட்ட இடங்களை நிரப்புகிறாள்.

"அஞ்சு வருஷத்துக்கு ஒருத்தரை ஒருத்தர் பார்க்கவும் கூடாது. பேசவும் கூடாதுன்னு கேசவ் சொல்லிட்டான். உங்க அப்பா பணத்துல நீ நிற்கக் கூடாது. உனக்குன்னு ஒரு அந்தஸ்து, உத்தியோகம் எல்லாம் வரட்டும். அப்போ வந்து பொண்ணைக் கேளு.

"என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா. சும்மா பக்கத்தில் வந்து உட்காரு!"

"வேண்டாம்! உங்க கை சும்மா இருக்காது. என் சுண்டல் தீர்ந்ததும் வந்து உட்கார்ந்துக்கறேன்!"

– ஜி. லீலா



அதுவரைக்கும் பேசக் கூடாதுன்னுட்டான்.

"இதுதான் நடந்தது. எப்படியும் சுஜா இவனைக் கல்யாணம் செஞ்சுக்கப் போறது இல்லை. அந்த கேசவ் ஏதோ பெரிய அரசியல்வாதிகளை எல்லாம் மடக்கிப் போட்டு வெச்சிருக்கான். ஏதோ அந்தப் பொண்ணு இவனை தீபாவளி, பொங்கல், பிறந்த நான்னா ஈமெயில்ல வாழ்த்துவா. உடனே இவனும் விழுந்தடிச்சுட்டு அவளுக்குப் பதில் அனுப்புவான். இந்தத் தடவை என் பிறந்த நாளைக்குக் கூட வாழ்த்து அனுப்பியிருந்தா. அதோட சரி. அவ இவனை பெங்களூருக்கு வரச் சொல்லியிருந்தாளாம். இவன் ஓடியிருக்கான்.

"திரும்பி வர்றப்ப குழந்தை மனசு நொந்து போய் வரப் போறானேன்னுதான் கவலையா இருக்கு."

தம்பதியர் சொல்ல, கேதாரிக்குள் சில நிமிடங்களுக்கு குஜராத் மாநிலத்தை விடவும் மோசமான நடுக்கம். ஒருகணம் அதிபுத்திசாலியான அவர் - வெறும் பரபிரம்மமாய் நின்றார். கொஞ்சம் கொஞ்சமாக விஷயம் புரிபடத் துவங்கியபோது - சொல்லத் தெரியாத பயம், உடம்பெங்கும் பரவியது.

'எப்படி ப்ரீத்திக்கு வந்த ஈமெயில் அஜய் அனுப்பியது இல்லையோ - அப்படியே அஜய்க்குக் கிடைத்த மெயிலும் சுஜா அனுப்பியது இல்லை.'

'உங்களைச் சந்திக்கக் காத்திருக்கிறேன்' - என்று ப்ரீத்தி அனுப்பியது... அவசரத்திலும், ஆனந்தத்திலும், மெயில் எங்கிருந்து அனுப்பப்பட்டது என்பதைக் கூடப் பார்க்காமல், விழுந்தடித்துக் கொண்டு ஓடியிருக்கிறான் அஜய்.


'ஐயோ... அப்போ ப்ரீத்தியோட கதி என்ன?'


விரலை உதறிக் கொண்டார் கேதாரி.

"என்ன சார்... காப்பி சுட்டுடுத்தா..."

இப்படி பரமாத்தியாகக் கேட்ட ஈசுவரனிடம் கேதாரி தனது நெஞ்சே சுருங்கி சாம்பலாகிக் கொண்டிருப்பதைச் சொல்ல முடியாத காரணத்தினால் சிரித்தபடி தலையசைத்தார். அந்தச் சிரிப்பில் ஜீவன் இல்லை.

(தொடரும்)





அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வேர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

குவிஸ் போட்டி — 15

காதலர் தினத்தை முன்னிட்டு இந்த வாரக் கேள்விகள் அனைத்தும் காதல் தொடர்பானவை. விடைகளை கவனமாக கூப்பனில் பூர்த்தி செய்து முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்தி ஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!

மலேஷியா — சிங்கப்பூர் பயணம் மூன்றாவது பரிசு!

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!

குவிஸ் கூப்பன் — 15

1) பரதத்திலும் கதக்கிலும் தேர்ச்சி பெற்ற டோனா காதலித்துத் திருமணம் செய்து கொண்ட பிரபல கிரிக்கெட் வீரர் யார்?
2) 'காதலுக்கோர் கலங்கரை விளக்கம்' என்று பாராட்டப்பட்ட தேவதாஸ் திரைப்படத்தின் மூலக்கதையை எழுதியவர் யார்?
3) "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" எனத் தொடங்கும் பதிகத்தை இயற்றிய 'நால்வரில் ஒருவர்' யார்?
4) அமைச்சர் மேனகா காந்தியினுடையதும் காதல் திருமணம்தான். அவரது க்ணவரின் பெயர் என்ன?
5) 'ஆதலினால் காதல் செய்வீர்' என்ற பாரதியின் கவிதை வரியைத் தலைப்பாகக் கொண்டு தொடர்கதை எழுதிய எழுத்தாளர் யார்?
6) 'மன்மத லீலை' திரைப்பட இயக்குனர் யார்?

விடைகள்:

1) ....
2) ....
3) ....
4) ....
5) ....
6) ....


சூப்பர் சலவை தரும்!
'டோட்டல்' முழுதிருப்தி அளிக்கும்!!
• செழுமையான நுரைவளம்
• கூடுதல் செயல் திறன்
• பளிச்சிடும் வெண்மை
• டோட்டல் மதிப்பு
Total
Rs 12.75
BLUE DETERGENT BAR
அதிகபட்ச
விலை
500 கிராம் ரூ.12.75
300 கிராம் ரூ.8.25
Total
நீல டிடெர்ஜெண்ட் பார்
டோட்டல் அற்புதமான சலவை பார் மிக
செறிந்த நுரைவளத்துடன், தண்ணீரில்
மிருதுவாகும் தன்மை கொண்டது. உங்கள்
துணிகளுக்கு முழுமையான சலவை தருகிறது
நியாயமான விலையில் !
MSIL தயாரிப்பு
MSIL
மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட்
கன்ஸ்யூமர் புராடெக்ட் டிவிஷன்
36, கன்னிங்ஹாம்ரோடு, பெங்களூர் 560 052

"விஞ்ஞானத் துறையில் எனக்குள்ள தகுதிகளை எல்லாம் விட கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் தலைவர் என்பதில்தான் எனக்குப் பெருமை!" இப்படிப் பேசியிருக்கிறார் விஞ்ஞான மேதை டாக்டர். கே. எஸ். கிருஷ்ணன், ஒரு மேடையில். அந்த பாரதி தமிழ்ச் சங்கத்துக்கு இன்று வயது அறுபது.


கவியரங்கம், வழக்காடு மன்றம், இசைக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி என்று அமர்க்களமாக நடந்து கொண்டிருக்கின்றன, அதனுடைய மணிவிழா ஏற்பாடுகள். விழா, பிப்ரவரி பதினெட்டாம் தேதி முதல் இருபதாம் தேதி வரை, கோல்கத்தாவில்.

'அரசியல் கலக்காமல் தமிழ் இலக்கியத்தை, குறிப்பாக, பாரதியைப் பரப்புவதே சங்கத்தின் நோக்கம்' என்கிறார் அதன் முன்னாள் தலைவர் மு. ஸ்ரீநிவாஸன். பாரதியின் படைப்புகளையும் பாரதி - தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றையும் தமிழில் வெளியிட்டிருப்பதோடு, ஆங்கிலம், வங்க மொழி, இந்தி, மராத்தி ஆகிய பல மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து நூல்களை வெளியிட்டிருப்பது; கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தமிழுக்கென்று 'பாரதி இருக்கை' அமைத்திருப்பது; கணக்கற்ற புத்தகங்களைக் கொண்ட ஒரு அற்புதமான வாசக சாலையை நடத்துவது; வாரந்தோறும் சனிக்கிழமைகளில் தமிழ் இலக்கிய பேச்சுக்களை ஏற்பாடு செய்வது; கல்லூரி மாணவர்களுக்கு இலக்கிய வகுப்புகள் மற்றும் தமிழ் வகுப்புகள் நடத்துவது இவை சங்கத்தின் முக்கியமான பணிகள்.

ராஜாஜி, காமராஜ், போன்ற தலைவர்கள் முதல், டி.கே.சி., கல்கி, சதாசிவம் போன்ற சான்றோர்கள் வரை பலரை கௌரவ உறுப்பினர்களாகக் கொண்ட பெருமை சங்கத்துக்கு உண்டு. ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி இப்போதும் கௌரவ உறுப்பினர்.

"பாரதி நூற்றாண்டு விழாக் குழு, சென்னையில், கோட்டையில், எம்.ஜி.ஆர். தலைமையில் கூடியபோது 'இப்போது நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று திட்டமிடப்போகிறோமோ அவை எல்லாவற்றையும் ஏற்கெனவே கல்கத்தாவின் பாரதி தமிழ்ச் சங்கம் செய்து முடித்து விட்டது!' என்று கூறினார் ம.பொ.சி!" என்று பெருமையுடன் நினைவு கூர்கிறார் ஸ்ரீநிவாஸன்.

மணிவிழாவோடு தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் நூற்றாண்டு விழாவையும் கொண்டாடுகிறார்கள்.



• பாரதி தமிழ்ச்சங்க வெளியீடுகள்

தமிழ் வளர் வங்கம்!




காதல் சடுகுடு

அவள் ஒரு ராட்சசி. அவளை பார்க்கிறவர்களுக்கு அழகான ராட்சசி என்றோ, அவளோடு பழகியவர்களுக்கு அன்பான ராட்சசி என்றோ எப்படி வேண்டுமானாலும் தோன்றலாம். என்னைப் பொருத்தமட்டில் அவள் ஒரு அறிவான ராட்சசி. அதுவும், ரவியைப் போன்ற ஒரு அப்பாவியை, தன்னை நம்ப வைத்து, தன்னைக் காதலிக்கச் செய்து, போக்குக் காட்டி, கடைசியில் டாட்டா காண்பித்த அவளை, அந்த சித்ராவை என்னால் இன்னமும் மன்னிக்க முடியவில்லை.

'ஹாப்பி நியூ இயர்' வாழ்த்து அட்டைகள் பரபரப்பாக விற்றுக் கொண்டிருந்த, வருடத்தின், கடைசி மாதத்தின், கடைசி வாரம். ரவி என்னை அழைத்துக் கொண்டு போய் 'லேண்ட்மார்க்' கடையில் கார்டு செலக்ட் செய்யச் சொன்னான். "யாருக்குடா?" என்றேன். உள்ளுக்குள் முழுசாக பற்றிய மகிழ்ச்சியை உதட்டில் மெலிதாகக் காண்பித்து "மனதுக்குப் பிடித்தவர்க்கு" என்றான். "பிடித்தவர் ஆணா? பெண்ணா?" என்றேன் அடுத்த அடியில். "பெண்ணுன்னே வைச்சுக்கோயேன். அப்பத்தான் அழகானதா செலக்ட் செய்வே!" என்றான். இதற்கு மேல் துழாவுவானேன் என்ற நினைப்பில் விட்டுவிட்டேன். கிட்டத்தட்ட நூறு நூற்றைம்பது கார்டுகளைப் புரட்டிப் போட்டுவிட்டு ஒன்றைச் செலக்ட் செய்தேன். என் தேர்ந்தெடுப்பு அவனை மிகவும் கவர்ந்துவிட்டது போலும். செல்லமாகத் தோளில் குத்திவிட்டு, ஆவலாய் மீண்டும் மீண்டும் கார்டையே பார்த்தான்.

அன்றிரவு, பாதி



தூங்கி விழித்தபோது, மணி ஒன்றுக்கு மேலிருக்கும். எதையோ, பெரிதாய்ச் சிந்தித்து சிந்தித்து கார்டின் வெள்ளைப் பகுதியில் சிறுக்கிக் கொண்டிருந்தான். "டேய் தூங்கல?"- முனகினேன். அவன் காதில் விழவில்லை. போர்வையை தலைக்கு மேல் இழுத்துவிட்டுத் தூங்கிவிட்டேன்.

சென்னையில் ஒரு தனியார் பள்ளிக் கூடத்தின் வாத்தியாராகப் பொறுப்பேற்று ஐந்து வருடத்துக்கும் மேலாகிறது. என்னுடைய தமிழ்த் திறமையை வெளிக்காட்டவோ, எழுதிய கவிதை களை மற்றவர்களிடத்தில் பரிமாறிக் கொள்ளவோ, இந்தப் பள்ளியில் எனக்கேற்றவர் யாருமில்லை. வேலையோ ஐந்தாம் வகுப்புக்குப் பாடம் எடுப்பது. எடுத்த பாடத்தையே அதே வாக்கியங்களில் ஐந்து வருடமாகச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். மாணவர் களின் முகங்கள்தான் மாறுகிறதே தவிர பாடங்களின் அகம் மாறவேயில்லை. வேலையைத் தூக்கி எறிந்துவிட்டு ஓடிவிடலாம் போல்தான் தோன்றுகிறது. சேலம், தடாவூரில் என்னை நம்பி இருக்கிற மூன்று தங்கைகளுக்கும் வயதாகிப் போன அம்மா, அப்பாவுக்கும் எவன் கஞ்சி ஊற்றுவது?(இந்த லட்சணத்தில் எனக்குப் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறார் கள்!) பல்லை கடித்துக் கொண்டு காலத்தைச் சுழற்றுகிறேன்.

"இவ்வளவு பெரிய அறை எனக்கொருவனுக்கு எதுக்குடா? ஒரு நல்ல பையன் இருந்தா சொல்லேன், ரூம்மேட்டா சேர்த்துக் கறேன். எனக்கும் பேச்சுத் துணைக்கு உதவும் பாரு!" வாடகை காசைப் பங்கிட ஒருவன் கிடைத்தால் கவிதை புத்தகங்கள் வாங்கலாம் என்ற நினைப்பில்தான் தாஸிடம் விஷயத்தைச் சொன்னேன். கேட்டவன் இரண்டாவது மாதத்திதில் ஒருவனை அழைத்து வந்தான். அவன் பி.இ. படித்திருக்கிறானென்றும், அரசு வேலைக்கு முயற்சி செய்வதாகவும், தற்சமயம் தனியார் கம்பெனியான ரூபி இண்டஸ்ட்ரியில் வேலைக்கு இருப்பதாகவும் கரூர்தான் இவனுக்குச் சொந்த ஊர் என்றும் அவனைக் குறித்த பல தகவல்களை ஒரே மூச்சில் ஒப்பித்தவன், 'ஒன்று தெரியுமாடா, இவனும் ஒங்... சாதி தான். ஆமாடா... இவனுக்கும் கவிதைன்னா உயிரு...' என்றான். (காதிலிருந்து நெஞ்சுக் குள் ஐஸ் நதி!)

இப்படித்தான் அறிமுகமானான் ரவி. வெறும் ரூம்மேட்டாக அறிமுகமாகி இன்று என் நெருங்கிய நண்பனாக இருக் கிறான். இருப்பான்.

கவிதை எழுதுகிறவனுக்கும், வெறுமனே கவிதையை ரசிப்பவனுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. கவிதையை ரசிப் பவனுக்கு, தனக்குள் 'காதல்' முனைப்

சூர்யகுமாரன்

பதை மட்டும்தான் உணரமுடியும். ஆனால், கவிதை எழுதுபவனுக்கோ தனக்கு மட்டுமல்ல, பக்கத்தில் இருப்பவனுக்குள், காதல் முளைப்பதையும் அறிய முடியும். அனுப்புனர் முகவரி இன்றி வருகிற சில கடிதங்களைப் பிரித்துப் பார்த்து முகம் பூப்பது; அர்த்த ராத்திரியில் ஓடுகிற மின்விசிறியைப் பார்த்துக்கொண்டே... எழுதி எழுதி பத்துக் காகிதங்களுக்கு மேல் கிழித்துப் போட்டுவிட்டு கடைசியில் விடியும் தருவாயிலும் கடிதத்தை முடிக்காமல் திணறுவது; தேடித் தேடி காதல் கவிதைகளைப் படிப்பது; வேறு எந்த நல்ல கவிதைகளையும் முழுசாய் ஏற்றுக் கொள்ளாமல் ஒப்புக்கு 'ஓகே' என்பது- இப்படி காதலின் அங்க லட்சணங்கள் இவன் மீது படர ஆரம்பித்தது புரிந்தாலும், காட்டிக் கொள்ளாமல் இருந்தேன். ஒருவன் உள்ளுக்குள் காதலித்துக் கொண்டிருப்பது அவனின் தனி உரிமை. அது திடீரென்று பிரச்னைக்குள் சிக்கி, பிரச்னைக்கு அடுத்தவர் தீர்ப்பை எதிர்பார்க்கிறபோது தான் அது பொது உரிமை ஆகின்றது. நான் தனி உரிமைக்குள் தலையிட விரும்பவில்லை.

ஒரு நாள் அவன் படித்த காலேஜைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தான். ராஜ்குமார் என்பவரின் புகைப்பட திறமை குறித்தும், பணக்கார பந்தா எதுவுமில்லாமல் பழகிய பாலமுருகன் என்பவரைப் பற்றியும் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டே வந்த ரவி, சித்ரா என்ற பெயரைச் சொல்லிவிட்டு கொஞ்சம் எச்சில் விழுங்கினான். இருக்கையைச் சரிப்படுத்திக் கொண்டான். அவன் முகமெல்லாம் பூக்கள் பூத்தன. பேச்சு ஒலியில் கொஞ்சம் குழைவு புரண்டது. வித்தியாசத்தைக் கவனித்துவிட்டேன் என்று புரிந்து கொண்டிருப்பான் போலும். கொஞ்சம் குரலைக் குறைத்து, நெளித்து சாதாரணமாய்ச் சொல்வது போல் சொல்ல ஆரம்பித்தான். எனக்கு உள்ளுக்குள் சிரிப்பு.

"ஹய்ய...யோ, எப்படி கவிதை எழுதுவா தெரியுமா! ஒவ்வொன்னும் முற்போக்குச் சிந்தனையா இருக்கும். பெண்களைக் குறித்த அக்கறை அதுல அதிகமா இருக்கும். 'தீ விழி'ன்னு ஒரு கதை எழுதினா... அதுல கூட பெண்ணுரிமையை மதிக்காத ஆண்களைக் கிழி கிழின்னு கிழிச்சிருப்பா!" குரல் இப்பொழுது உச்ச ஸ்தாயியில் நின்றது.

"அவங்க காதலைப் பத்தி எழுதறதுண்டா?"

"ம்ஹூம். முற்போக்குச் சிந்தனைதான்!"

"ஏன்? காதல் பிற்போக்கா?" கேட்டேன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவ எழுதறதில்லே!"

"உனக்குக் காதல் கவிதைகள்தானே பிடிக்கும்?" கேள்வியில் கொக்கி வைத்தேன்.

மாட்டிக் கொண்டவனாய் "சே..சே.. யாரு சொன்னது அப்படி?" என்றான் சட்டென்று. பிறகு சுதாரித்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தான்.

கொஞ்ச நேரம் சென்றதும் நான் மீண்டும் ஆரம்பித்தேன்.

"காலேஜ் முடிச்சதும், அவுங்க பிரெண்ட்ஷிப்பைக் கன்டின்யூ பண்றே இல்லை?"

யோசித்தான். ஒரு கமாவுக்கான நிறுத்தத்தில் மீண்டும் தொடர்ந்தேன்.


"ஏன்னா... ஒரு நல்ல படைப்பாளியோட நட்பு தொடர்ந்து ஒரு ரசனைக்குரியவனுக்கு வேணுமே!"


"ஆமாமா... தொடருது!" அதற்கு மேல் அவன் பேசவில்லை. ரகசியம் காக்கிறான் என்று விட்டுவிட்டேன்.

இரண்டு வருடம் கழிந்து விட்டது.

அன்று பேருந்துகள் ஓடவில்லை. மத்திய அரசைக் கண்டித்து மாநில அரசு நடத்திய 'பந்த்'தால், இருவரும் வேலைக்குப் போக முடியாமல் அறையிலேயே இருந்தோம்.

11.00மணிக்குத் தபால்காரர் வந்தார். ரவியின் பெயரைச் சொல்லி அழைத்து ஒரு கவரைக் கொடுத்தார். கவரை அவசர அவசரமாகப் பிரித்த ரவியின் முகத்தில் பூந்





தோட்டம். ஆர்வத்தில் படிக்க ஆரம்பித்தான். நான் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு பாத்ரூமிற்குச் சென்றேன்.

பாத்ரூமிலிருந்து வெளியே வந்து உன் அறையிலிருந்து குரல் கொடுத்தேன்.

"ரவி, ஈவினிங் பீச்சுக்குப் போலாமா?"

பதிலில்லை.

உன் அறைக்கு வந்த நான் உறைந்து போனேன். ரவி ஒரு குழந்தையைப் போல அழுது கொண்டிருந்தான். என்னவோ, ஏதோவென பதற்றத்தில் "என்ன ரவி... ஏங்...ஏங்.... என்ன ஆச்சு?' என்றேன். பதிலில்லை. 'சொல்லும்மா... என்ன விஷயம்?"- அவனை உலுக்கினேன்.

"ஏமாத்திட்டா. ஏமாத்திட்டா...''

மீண்டும் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

எனக்குக் கொஞ்சம் புரிந்தது. நிறைய புரியவில்லை.

மூன்று மணி நேரம் நிசப்தம்.

அழுது அழுது தூங்கிப் போயிருந்தான். கொஞ்ச நேரக் குழப்பத்திற்குப் பிறகு நானும் தூங்கிவிட்டேன்.

இரவு ஒன்பது மணி. அவன்தான் எழுப்பினான்.

"வாங்க, சாப்பிடப் போலாம்."

எப்போதும் போல் சாப்பிட்டான். அதிகம் பேசவில்லை.

"என்ன ரவி, ஊர்ல யாருக்காச்சும்..."

"இல்ல... இல்ல... எல்லோரும் சௌக்கியமா இருக்காங்க."

"அப்புறம் ஏன் அழுத...?"

"யதார்த்தம் புரியாததுனால..."

"புரியல்லயே... ரவி."

"கவிதை, கதைன்னு... நம்மள மாதிரியே ஒத்த ரசனை இருக்கேன்றதுக்காக ஒருத்தன் ஒருத்தியைக் காதலிச்சான். பல வருட நட்புக்குப் பிறகு காதலைச் சொல்லலாம்னு நினைச்சான் அவன். ஒரு கடிதத்தில் அவளுக்கு அதைத் தெரிவிச்சான். அவளும் எப்படா இந்தக் கடிதம் வரும்ன்கிற மாதிரி சம்மதம் தெரிவிச்சு இவனைப் பத்தி ஒரு கவிதையும் அனுப்பி வைச்சா. கொஞ்ச நாளைக்கப்புறம் இன்னொரு கடிதம் வந்திச்சு. 'உங்களை என்னால பிரியவே முடியாது. ஆனா உங்களுக்குன்னு ஒரு அரசு வேலை இருந்தா... எங்கப்பா கிட்ட சொல்லி சம்மதம் வாங்கலாம். ஏன்னா இப்ப நான் "பி.டபிள்யூ.டி."யில் வேலை பார்க்குறேன். அதுலயும் நீங்க வேற சாதி, நான் வேற சாதி. அரசு வேலைன்னு சொன்னா சாதி வாயை அடைச்சுடலாம்'- அப்படின்னு அவ கடிதத்தில் எழுதியிருந்தா... இதனால அரசு வேலைக்காக இவனும் ராப்பகலாகக் கஷ்டப்பட்டுப் பார்த்தான். இதுவரைக்கும் நடக்கல. இதுக்குமேல பொறுத்திருந்தா கதைக்காகாதுன்னு அவ வேற யாரையோ கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சுட்டா"...- நிறுத்திவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

"அந்த 'அவன்' 'அவள்' யாரு?" என்றேன். பதிலில்லை.

"அதுக்காக நீயேன் அழுத?"

"நட்புக்காக!"

குழப்புகிறான். விட்டுவிட்டேன்.

சில மாதங்களுக்குப் பிறகு பழையபடி உற்சாகமாக ரவி வந்தான். கையில் வார இதழ் ஒன்றை வைத்திருந்தான். என்னிடம் கொடுத்து "இதிலொரு கவிதை வந்திருக்கிறது. படியுங்கள்'' என்றான். படித்தேன். நன்றாக இருந்தது.

"நான் சொல்லுவேன்ல எங்க காலேஜில சித்ரான்னு? அவ எழுதின கவிதைதான்..." கொஞ்சம் நிறுத்திவிட்டு கேட்டான். "கவிதை எப்படி இருக்கு. சூப்பர்தானே?"

நான் பதிலேதும் சொல்லவில்லை. அவனும் விடவில்லை.

"சொல்லுங்க எப்படி இருக்கு?"

"காதலைப் பற்றி சித்ரா எழுதியிருக்க வேண்டாம்!" என்றேன். ○

சென்ன
டு
சை
னா
6



இரண்டு மில்லியன் செல்போன்கள்!

"இன்றைக்கு நீங்கள் பார்க்க வேண்டியது ஜேட் புத்தா டெம்பிள்!" என்றார் கோபால். "டிரைவர் ஈக்வான் ஒன்பது மணிக்கு வந்து விடுவார். புறப்பட்டுப் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள்!"

என் உறவினர் மீராவும் கணவர் கோபாலும் ஷாங்காய்வாசிகள், கடந்த மூன்று வருடங்களாக. அதற்கு முன்பு ஹாங்காங் வாசிகள்.

ஜேட்–அதாவது மரகதப் பச்சை–புத்தர் கோயிலுக்குப் போனால், அங்கேயும் டூரிஸ்ட் கும்பல்தான்! இந்தச் சீனர்களைப் பார்த்தால் ஒருவிதத்தில் மகா பொறாமையாக இருக்கிறது.

5000 ஆண்டுக் கால நாகரிகம், 7000 ஆண்டுக் கால நாகரிகம் என்று சொல்லிக் கொண்டு, கிறிஸ்துவுக்கு முன் தங்கள் சக்ரவர்த்திகள் உருவாக்கிய சுகவாச ஸ்தலங்களையும், அரண்மனைகளையும், தொழுகை இடங்களையும் தோண்டி எடுத்து, புதுப்பித்து, ஏதோ நேற்றைக்குத்தான் கட்டி முடித்த மாதிரி பளபளவென்று வைத்து, உலகின் நாலாபுறத்திலிருந்தும் டூரிஸ்ட்டுகளை ஈர்த்து, நுழைவுக் கட்டணம் என்றும் அந்நியச் செலாவணி என்றும், கோடி கோடியாகப் பணம் பண்ணுகிறார்கள். நம்முடை

யது கம்யூனிஸ ஆட்சி ஆயிற்றே. புத்தர் சிலைகளையும், பகோடாக்களையும், அரச குடும்பத்து அரண்மனைகளையும், சமாதிகளையும் எதற்குக் கட்டிக் கொண்டு அழ வேண்டும்? உடைத்துத் தூள் பண்ணி விடுவோம் என்று நினைக்கவில்லை. நம் நாட்டில் என்னடா என்றால், சரித்திரச் சின்னத்தைக் கூட மதச்சின்னமாகவே பார்த்து, அப்பாவி மக்களை உசுப்பி விட்டு, ஏதோ அதை உடைத்துத் தகர்ப்பதுதான் முதலும், முக்கியமுமான வேலை என்று ஓடோடிப் போய் உடைத்து விட்டு வருடா வருடம் மதக்கலவரத்துக்கு விதை போடுகிறார்கள்!

"ஸோ, மிஸஸ் காண்டி ஹாஸ் பிகம் த பிரசிடெண்ட் அஃப் யுர் கண்ட்ரி?" என்று நம்மைப் பிடித்துக் கொண்டார் ஒரு அமெரிக்கன் டூரிஸ்ட், புத்தர் கோவிலில்.

"ஐயோ, அவர் நாட்டின் பிரசிடெண்ட் ஆகவில்லை. அவரது கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவ்வளவுதான்!" என்று புரிய வைக்க வேண்டியிருந்தது. கட்சித் தேர்தலில் தலைமைப் பதவிக்கு அவர் போட்டியிட்டதை பிபிஸியிலோ, சிஎன்என்னிலோ அறைகுறையாகக் கேட்டதன் பலன் இது.

"இங்கே அரசியலும், மதமும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கியமான அம்சங்களாக இல்லை. அதனால்தான் இங்கே கலவரம், கைகலப்பு, கலாட்டா எதுவுமே இல்லை. பெய்ஜிங் தான் தலைநகர். குடியரசுத் தலைவரும், பிரதமரும், அமைச்சர்களும் அங்கேதான் இருக்கிறார்கள். ஆனால் அரசின் எந்த அடையாளமாவது, எந்தச் சின்னமாவது வெளிப்படையாகத் தெரிந்ததா? இந்த பாலிடிக்ஸும், ரிலிஜனும்தான் உங்கள்

களில் பிரதானமான இடத்தைப் பிடித்திருக்கின்றன. அதனால்தான் மக்களின் தினசரி வாழ்க்கை இந்த அளவுக்குப் பாழ்பட்டிருக்கிறது'' என்று சொன்னார் கோபால்.

தொடக்கத்திலிருந்தே ஓர் ஒழுங்குக்கும், கட்டுப்பாட்டுக்கும் பழக்கப்பட்டுவிட்ட மக்களிடம் இது சாத்தியம்தான். ஆனால் ஜனநாயகம் என்று கட்டவிழ்த்து விட்டு விட்ட நம் நாட்டில் ஒழுங்குமுறை எல்லாம் சாத்தியமா?

"நகரம் முழுவதும் எப்படி ஜொலிக்கிறது பாருங்கள்! ஒரு நிமிடமாவது எலக்ட்ரிசிடி நின்று போயிற்றா? மூன்று மடங்கு சர்ப்ளஸ் பவர் இங்கே!" என்றார் கோபால்.

'1975 வரை, சுமார் 50 சதவிகித கிராமங்களில் மட்டுமே மின்சாரம் வழங்க முடிந்ததாம். 1996ல், 95 சதவிகிதம் கிராமங்களை மின்சாரம் பெறும் அளவுக்கு மாற்றியிருக்



• பல மாடிக் கடையில் ஒரு தளம் முழுக்க லெதர் ஐட்டங்கள்!



"ஸோ, மிஸஸ் காண்டி ஹால் பிகம் தி பிரசிடென்ட் அஃப் யுவர் கண்ட்ரி?"

கிறார்கள். பஞ்சாயத்து போன்ற உள்ளூர் தலைமைகளே, சிறிய நீர் மின் நிலையங்கள் தாங்களே நிர்மாணித்து, தாங்களே நிர்வகித்து, தங்கள் பகுதிகளில் உபயோகித்து வருகிறார்கள். இதற்கான நிதி ஆதாரத்தை உள்ளூர் அமைப்புக்களே தேடிக் கொள்கின்றன. சீன அரசு தொழில் நுட்ப அளவுகோல்களை நிர்ணயித்து, ஆராய்ச்சிக்கு மட்டுமே நிதியுதவி அளிக்கிறது. முதல் கட்டத்திலேயே 300 மிலியன் கிராமப்புற வாசிகள் மின்சாரம் பெற முடிந்திருக்கிறது. சீன நீர்வளத்துறை அமைச்சகம், 1985ல், மின்சாரத்தை அளிப்போம் வறுமையை ஒழிப்போம் என்கிற ரீதியில் ஒரு திட்டத்தை உருவாக்கி, ஒரே வருடத்துக்குள் 300 கவுன்ட்டிகளில் மின்சாரம் வழங்கியிருக்கிறது.

"இந்தத் திட்டத்தின் மூலம் உண்மையிலேயே வறுமையை விரட்டியடித்திருக்கிறது சீனா. இதில் 208 கவுன்ட்டிகளில் பொருளாதார வளர்ச்சி, தேசிய சராசரியை விடப் பல மடங்கு அதிகமாகி இருக்கிறது. வருடாந்தர தொழில் மற்றும் விவசாய உற்பத்தி சுமார் 19 சதவிகிதம் கூடியிருக்கிறது. 109 கவுன்ட்டிகளில், விவசாயிகளின் தனி நபர் வருமானம் இரண்டு மடங்கு ஆகியிருக்கிறது. திட்டங்களைத் தொடர்ந்து பராமரிக்க, உபரி வருமானத்தை மேலும் மேலும் மின்சாரம் உற்பத்தி செய்ய, உபயோகித்து வருகிறார்கள். இப்பொழுது மின்சாரத்தை எப்படிப் பயனுள்ள முறையில் உபயோகிக்கலாம் என்ற நிலைக்கு சீனா வந்து விட்டது."

– இதைச் சொல்லியிருப்பவர் ஒரு சர்வதேச அமைப்பின் (ICMOD) தலைவர் கமல் ரஜல்.

அன்று மாலை இரண்டு பிரும்மாண்டமான டிபார்ட்மென்ட் ஸ்டோர்களுக்குப் போனேன். மாடியில்தான் கார் பார்க்கிங். கீழே – மேலே போக எஸ்கலேட்டர்கள். எஸ்கலேட்டர்களில் ஏறுவதும் இறங்குவதுமே இங்கே ஒரு ஜாலியான அனுபவம்! (கையில் டாலரோ யுவானோ இல்லை என்றால் கூட இந்தத் திருவிழாக் கோலாகலத்தை ரசிக்கலாமே!)

ஒவ்வொரு தளத்திலும் கூட்டம்.

தோல் பொருட்கள் ஆகட்டும், காஸ்மடிக்ஸ் ஆகட்டும், நகைகள் – கைக் கடிகாரங்கள் ஆகட்டும், ஆடைகள் ஆகட்டும், ஸ்டேஷனரி ஆகட்டும், ஆயிரக்கணக்கில், பத்தாயிரக் கணக்கில் உற்பத்தி செய்து, தளம், தளமாக ஷோகேஸ்களிலும், ஸ்டாண்டுகளிலும் அடுக்கி குவித்திருக்கிறார்கள்.

ப்ரீஃப்கேஸ்கள், ஸ்கைபேகுகள், பெட்டிகள் எல்லாம் விதவித நிறங்களில், வித விதமாடல்களில். காலணிகள், கேட்கவே வேண்டாம். தேர்ந்தெடுக்கவே அரை நாள் ஆகும்.

சீனர்கள் ஓவியங்களை மிக மிக ரசிக்கிறார்கள். இதற்கான தனிப் பகுதியே எல்லா சூப்பர் ஸ்டோர்களிலும் இருக்கிறது. அது போலவே சைக்கிள்கள்!

இரவு வீடு திரும்பியதும் கோபால் கேட்டார், "வாங்க வந்த மக்கள் எல்லாம் யார்?"

"சீனர்கள்."

"அயல்நாட்டுக்காரர்களா அதிகம் இருந்தார்கள்?"

"இல்லை. பத்து சதவிகிதம்தான்!"

"இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்த மக்களின் வாங்கும் திறன் எத்தனை மடங்கு உயர்ந்திருக்கிறது என்று தெரியவில்லையா? தனியார் நிறுவனங்களின் பிரவேசம் இந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை எந்த அளவு உயர்த்தி இருக்கிறது! வழி எல்லாம் பார்த்தீர்களே அடுக்குமாடிக் குடியிருப்புகள்? இந்த மாதிரி அழகும், விஸ்தாரமான புல் தரையும் தோட்டமும், வெளியே செக்யூரிட்டியுமாக பம்பாயிலாவது பார்த்திருக்கிறீர்களா?"

உதட்டைப் பிதுக்கினேன்.

இத்தனை அழகான வீட்டு வசதி வளாகங்கள் தனியார் படைப்புத்தான். 800 அமெரிக்க டாலர் முதல் 5,000 – 10,000 டாலர் வரை மாத வாடகை. டீவி, சோஃபா செட்டுகள் எல்லாம் அதில் அடக்கம். ஆனால் ஏதாவது அதிருப்தி இருந்தால்

உடனே அறைகளில் மாற்றம் செய்து, விருப்பப்படி உருவாக்கிக் கொடுத்து விடுகிறார்கள்.

கீழ்மட்ட ஊழியர்கள் மாதம் 600 முதல் 800 யுவான் சம்பளம் பெறுகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் 10 யுவான் வாடகைக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டிக் கொடுத்திருக்கிறது. அவர்கள் மார்க்கெட்டுக்குப் போனால் மிகக் குறைந்த விலையில் காய்கறி கிடைக்கிறது. (அயல்நாட்டவர் என்றால் இரண்டு - மூன்று மடங்கு!)

செல்போன் இல்லாதவர்களே இல்லை. "இரண்டு மிலியன் செல்போன் ஷாங்காயில் மட்டும் உபயோகத்தில் இருக்கிறது!" என்றார் கோபால்.

காலை நாலு மணிக்கே துப்புரவுப் பணியாளர்கள் சாலையைச் சுத்தம் செய்யும் பணியில் இறங்கி விடுகிறார்கள். வயதானவர்கள் கூட, சம்பளத்தை எதிர்பார்க்காமல், உடல் பயிற்சிக்காக இந்தப் பணியைச் செய்வதாகச் சொன்னது ஆச்சரியமாய் இருந்தது.

வாக்கிங், பின்னோக்கி நடப்பது (இதயத்துக்கு நல்லதாம்!) எல்லாம் அதிகாலையிலேயே தொடங்கி விடுகிறார்கள். சங்கிலி பறிப்பு பயம் இல்லையே!

"நாளைக்கு ஹைட்ரோபிக் ஃபார்ம். புதிதாக வந்திருக்கும் 'மெட்ரோ' ஷாப்பிங் ஏரியா!" என்றாள் மீரா.

"தரையில் வேர் இல்லாமல், அந்தரத்தில் காய்த்துத் தொங்கும் குடைமிளகாய், வெள்ளரிக்காய், கத்தரிக்காய், செர்ரி டொமேட்டோ, இவற்றின் சைஸைப் பார்த்தாலே தின்னத் தோன்றும்!"

பெய்ஜிங்கில் 'சைனீஸ் அகடமி அஃப் அக்ரிகல்சுரல் மெகனைசேஷன் சைன்ஸஸ்' பார்த்தது நினைவுக்கு வந்தது.

அக்ரிகல்சுரல் பாங்க், கன்ஸ்ட்ரக்ஷன் பாங்க் என்று எல்லாவற்றுக்கும் தனித் தனி வங்கி.

ஊழலுக்கு?

இரண்டு அதிகாரிகள் லஞ்சம் பெற்றார்கள் என்று, மரண தண்டனை!

சங்க்வோனோ மாடர்ன் அக்ரிகல்சுரல் டெவலப்மெண்ட் ஸோன், மூன்று ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. கண்ணாடியில் ஆன க்ரீன் ஹவுஸ் பரிசோதனைக் கூடங்கள். பத்து மிலியன் யுவான் பரிசோதனைக்களுக்காக என்றே முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

நல்ல ஆரோக்கியமான சுற்றுச்சூழல், ஏராளமான விளைச்சல் என்பதே இந்த முயற்சியின் குறிக்கோள். விவசாயத்தைப் பொறுத்தவரை உலகத் தரத்து விளைச்சலுக்கும் சீன விளைச்சலுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் குறைத்து, அளவிலும், தரத்திலும் சாதனை படைக்க வேண்டும் என்பதற்காகவே இதை நிர்வகித்து வருகிறார்கள்.

இதில் என்ன விசேஷம் என்றால், மண் வளத்தைப் பயன்படுத்தாமலே ட்யூப் மூலம் நீர்பாய்ச்சி, அந்தரத்திலேயே வேர்களைத் தொங்கவிட்டு, அருகிலே காய்களும் காய்த்துத் தொங்கும் அதிசயம்தான். (Hydrobic culture of vegetables without soil and solid medium.) வேர்களை சத்துக் கலவையில் அமிழ்த்தித் தொங்கவிட்டிருக்கிறார்கள். தக்காளி, வெள்ளரிப் பிஞ்சு எல்லாமே இந்த வகையில் பயிரிடப்பட்டு காய்த்துத் தொங்குகின்றன! இரண்டு மடங்கு விளைச்சல். இதற்கு, கம்ப்யூட்டர் மூலம் செடிகளுக்கான நியூட்ரிஷனை நிர்ணயித்து, குழாய் மூலம் செலுத்தி விடுகிறார்கள். காப்ஸிகம் எனப்படும் குடமிளகாய் பச்சை, சிவப்பு, வெள்ளை, ஊதா என்று பல வண்ணங்களில்! செர்ரி டொமேட்டோ ஹைப்ரிட் ரகம் 85 முதல் 90 நாட்களில் விளைச் சலுக்குத் தயாராகி விடுகிறது. ஆனால் வருடத்துக்கு ஒரு முறைதான் பயிர் செய்கிறார்கள். சிவப்பும் மஞ்சளுமாகக் காய்த்துக் கொட்டுகிறது இந்தத் தக்காளி. ஒரு ஸ்கொயர் மீட்டருக்கு 15 முதல் 25 கிலோ விளைச்சல்!

> “வயதானவர்கள் கூட, சம்பளத்தை எதிர்பார்க்காமல், உடல் பயிற்சிக்காக என்று சாலையைச் சுத்தம் செய்கிறார்கள்...”

கீரையும், வெள்ளரிப் பிஞ்சும் வாங்கிக் கூடையில் போட்டுக் கொண்டோம்!

– அடுத்த வாரம்



உறவை நினைந்திருக்கும் உள்ளம்

சீதா ரவி

சங்கர் குஜராத் போயிருக்கிறான் என்றதுமே அப்பா கொஞ்சம் ஆடிப் போய்விட்டார்.

ஆனால் மைதிலிக்குத் தெரியும். ஜனவரி 26 மாலை டீவியில் செய்தியைப் பார்த்த கணத்திலேயே எதிர்பார்த்தாள். சும்மா சூள் கொட்டுகிறவர்கள்; உடனே செக் புத்தகம் எடுத்து நிவாரண நிதிக்குச் சில ஆயிரங்கள் எழுதுபவர்கள்; அலுவலக வேலை நேரத்தில் அங்கலாய்த்துப் பேசுபவர்கள் என்று பெரும்பான்மைக் கூட்டத்திலிருந்து மாறுபட்டவன் சங்கர். அதனால் தானே அவனை அத்தனை பிடிக்கிறது.

"அப்படியானால், நான் ஒரு 'ஃப்ரீக்'னு சொல்றியா? வினோதம் - விசித்ரம் அதனாலதானே இப்படி என்னோட பழகறே? வேடிக்கைப் பார்க்கறதுக்கு?"

பொய்யா மெய்யா என்று புலனாகாத வருத்தப் பூச்சு முகத்தில் கவிய அவன் கேட்ட தினத்தில் மைதிலி சில கணங்கள் தவித்துப் போனாள்.

"ஆமாம்! ஆனால் என்னவோ தெரியலை, இந்த மூஞ்சியையும் ரொம்ப பிடிச்சிருக்கு..."

இவ்வளவு வெட்கப்படுவான் என்று நினைக்கவில்லை அவள்.

தாழ்ந்த அவன் முகத்தை நிமிர்த்திப் பார்த்த கணம் மனத்தின் நிரந்தரப் பதிவுகளிடையே பத்திரமாக ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. அவற்றை ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்க்கிறபோது... உயிர்த் துடிப்புள்ள வலி ஒன்று வியாபித்துக் கொள்கிறது.

எதிர்ப்பில்லாமலே காதல் கைகூடும் என்று இருவருமே கனவு காணவில்லை. ஆனால் இது மூர்க்கம்! பக்குவமான பேச்சால் பகுத்தறிவு வாதங்களால் இளகாத மூர்க்கம்.

"ஏன்பா வேண்டாங்கறீங்க?"

தலை நிமிர்த்தாமல் உட்கார்ந்திருப்பார் அப்பா.

"சங்கர் எம்.சி.ஏ. படிச்சிருக்கான்."

"தெரியும்!"

"அவன் பிஸ்னஸ் நல்லா நடக்குது. இரண்டு குடும்பத்தைக் காப்பாத்தற அளவு சம்பாத்தியம். பொய் சொல்லாம, பித்தலாட்டம் பண்ணாம, ஊரைக் கெடுக்காம சம்பாதிக்கறான். எனக்கு அவனைப் பிடிச்சிருக்கு அவனுக்கு என்னைப் பிடிச்சிருக்கு... இன்னும் என்ன நீங்க எதிர்பார்க்கறீங்க?"

அப்பாவிடம் எதற்குமே பதில் இல்லை. அவர் சம்மதமும் இல்லை. தாயும் தந்தையுமாக இருபத்தி மூன்று ஆண்டுகள் இருந்துவிட்ட நியாயமான உரிமையில் அநியாயமாய்ப் பிடிவாதம் பிடிக்கிறார். எதிர்ப்புக்காகவே எதிர்ப்பு.

'இந்தப் பிடிவாதம் மாறுமா? காலம் அவரைக் கனியச் செய்யுமா? எத்தனை காலம் பிடிக்கும்? அவர் மாறாவிட்டால் தான் மீறுவதா?' என்றெல்லாம் சிந்திக்கத் துணிவில்லை. மனம் ஏற்காத விடைகளைப் பெற்று அவற்றையும் சேர்த்துச் சுமக்கும் தெம்பு இப்போது இல்லை.

ஆனால் சங்கர் சேவா சங்கத்தின

அருள்வாக்கு



பக்தியில் பூனைக்குட்டி முறை ஒன்று. அதாவது பக்தர்களில் ஒரு வகையினர், இந்தப்பூனைக் குட்டி தன் முயற்சியின்றி, தாய் விட்ட வழி என்றிருப்பது போலவே பகவானைச் சரணடைந்து இருப்பார்கள். அவரைப் பணிவுடன் வேண்டி அவரைத் துதித்துப் புகழ்பாடி அவருடைய அருளை வேண்டுவார்கள்.

பூனைக்குட்டிக்கு நேர் மாறு குரங்குக் குட்டி. குரங்கின் குட்டியானது அதன் தாயின் வயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும். இப்படிப்பட்ட குரங்கின் ரீதியிலலேயே, சில பக்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பகவானை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வார்கள். பகவானே அருள் செய்யட்டும் என்று காத்திராமல், அவன் உதறித் தள்ளினாலும் விடுவதில்லை என்று அவனைப் பிடித்துக் கொள்வார்கள். மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் 'பக்தி வலையில் படுவோன்' என்று கூறுகிறார். அப்படியானால், பக்தர்கள் பகவானைச் சிக்கென்று பிடிக்கிறார்களா, பகவான் பக்தரிடம் சிக்கிக் கொள்கிறானா என்ற கேள்வி வருகிறது. பக்தர்கள் கையிலிருந்து பகவான் தப்ப முடியாமல் வலையில் விழுந்த மீன்போலச் சிக்கிவிடுகிறார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ரோடு குஜராத் போயிருக்கிறான் என்றதும் தெம்பு கொஞ்சம் திரும்பியிருக்கிறது. அவன் செயல்பட்ட வேகம் அப்பாவை உலுக்கியிருப்பது புரிந்ததும் அந்தத் தெம்பு மெள்ள அதிகரித்திருக்கிறது.

நேற்று காலை பேப்பரைப் பிரித்து வைத்து, கண்ணீருக்கிடையே படிக்க முயன்று கொண்டிருந்தபோது பக்கத்தில் வந்து அமர்ந்தார்.

"மைதிலி..."

நிமிர்ந்தாள்.

"எதுக்கு அழுகை...?"

அவள் பதில் சொல்லவில்லை.

"அழாதே... வாழ்க்கைல நாலும்தான் நடக்கும்."

இறங்கி வருவார் என்று பார்த்தால் மேலும் இறுகினார்.

அடக்கி வைத்த கோபப் புயல் திமிறி வீசியது.

"ஆமாம், நாலுந்தான் நடக்கும்! அந்த நாலுல ஒண்ணு நிஜமான காதலாகவும் இருக்கலாம்னு ஏன் நீங்க ஒத்துக்க மாட்டேங்கறீங்க...?"

அதிர்ந்து பார்த்தார்.

"வலிக்குது. இந்த குஜராத் பூகம்பத்துனால ஜனங்க படற கஷ்டத்தைப் பார்க்கறப்போ எவ்வளவு வேதனையோ அவ்வளவு வேதனையா இருக்கு... சங்கரை ஏன்பா ஒத்துக்க மாட்டேங்கறீங்க...?"

விலகிப் போய் ஜன்னலருகே நின்று கொண்டவரை நெருங்கி, கண்ணுக்குள் பார்த்துச் சொன்னாள் :

"இப்படியொரு வலியை இதுவரைக்கும் நான் அனுபவிச்சதில்லே... ஆனா எனக்குப் பெருமையா இருக்கு. ஒவ்வொரு வலித் துளியும் என் காதலுக்குச் சாட்சி; நாங்க பரஸ்பரம் வைச்சிருக்கற அன்புக்கு சாட்சி..."

அதிசயத்துடன் சில விநாடிகள் அவளை உற்றுப் பார்த்துவிட்டுப் போய் விட்டார்.

இன்று பிற்பகல் அவர் ராமசாமியுடன் போன் பேசும்போதுதான் அது காதில் விழுந்தது :

"சங்கர்கூட குஜராத் போயிருக்கான்..."

அந்தப் பெயரை உச்சரிக்கக் கேட்டதுமே மனம் ஒரு குதிபோட்டு உட்கார்ந்தது. துளியூண்டு பெருமிதம் அந்த வாக்கியத்தில் தொனித்ததைக் குறிப்பெடுத்துக்கொண்டாள்.

'அன்பான சங்கருக்கு'... கடிதம் ஒன்று அவன் உள்ளூர் முகவரியுடன் தபாலில் சேர்ந்தது.

'நம் திருமணம் ஆன பிறகும் அந்த வலிகளை நான் மறக்க மாட்டேன். நம் அன்பின் ஆழத்துக்கு அவை நினைவுச் சின்னங்களாக என்னுடனேயே இருக்கும். அதோடு, அப்பாவின் மனத்தை மாற்றிய பெருமை எனக்கோ உனக்கோ கிடையாது. எல்லாப் பெருமையும் இந்த காதல் வலிக்குத்தான்...'

அடுத்த கடிதத்தை அப்பாவே கொண்டு தபாலில் சேர்க்கக்கூடும்.

தாமரைகளைக் காணோமே தாமரைக் கண்ணா!

ஸ்ரீரங்கம் கோயில் தெப்பக்குளம்.

மாசி மாத உற்சவத்தின் ஒன்பதாம் நாள் பெருமாள் எழுந்தருளி ஆயிரக்கணக்கான பக்தர்களுக்குக் காட்சி தரும் குளம். உற்சவத்தின் பத்தாம் நாள் ஸ்ரீரங்கநாதர் மஞ்சள் நீராடி மைய மண்டபத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் குளம்.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை தாமரைப் பூக்கள் பூத்துக் குலுங்கி அழகு சிந்திய குளம் இப்பொழுது புல் முளைத்து பரிதாபமாகக் காட்சியளிக்கிறது. மைய மண்டபத்தின் உள்ளே அரசு மற்றும் வேம்புச் செடிகள் மானாவாரியாக வளர்ந்து எந்த நேரத்திலும் மண்டபக் கட்டடத்துக்கு ஆபத்து உண்டாக்கலாம் என்கிற நிலை.

தாமரைப் பூக்கள் என்னவாயின?


சமீபத்திய ஆண்டுகளில் அடுக்கு மாடிக் கட்டடங்களின் உபயத்தால் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு விட்டிருக்கின்றது. பலன், குளத்தின் நீர்பிடிப்புத் தன்மை போய் விட்டது. போதாதற்கு, அடிக்கடி தூர் வாராததால் நீர் மட்டம் குறைந்து போய் உள்ளது. அதோடு, குளத்துக்குக் காவிரி நீர் கொண்டு வரும் வாய்க்காலும் குறுகிப் போய் விட்டது. எல்லா காரணங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து தாமரைக் கொடிகளைப் பூண்டோடு அழித்து விட்டன.

பலன், தாமரைப் பூக்களை வியாபாரம் செய்வதற்காக, குளத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு இருந்தவர்கள் யாருமே இந்த வருடம் ஏலம் எடுப்பதற்கு முன்வரவில்லை. அதனால் குத்தகைக்காரர்கள் செய்யும் குறைந்தபட்ச பராமரிப்பும் நின்று போய்விட்டது.



குளத்தைத் தூர் வாரி, வெடித்துப் போய்க்கிடக்கும் உட்புறச் சுவர்களைச் சரிசெய்து, புல் பூண்டுகளைக் களை எடுத்து, காவிரி நீர் வாய்க்காலைச் சீரமைத்தால்தான் இனி, குளத்தில் தாமரைகளைப் பார்க்கலாம் என்று பெருமூச்சு விடுகிறார்கள் பொது மக்கள்.

– திருநாவு






Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.

Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



நாகை நீலாயதாக்ஷி

வீட்டின் அழகு கதவில் தெரியும் !


Now Flat Buyers insist on

MAYURAM

TIMBER DOORS



because



Contact:

MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎: 434 5207

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka